தமிழரசு
ஜனவரி 2004





# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2034-35
மார்கழி - தை
ஜனவரி 2004
மலர் : 35 இதழ் : 7
விலை ரூ.10


**அட்டைப்பட விளக்கம்**

முதல் பக்க அட்டை : கல்பாக்கத்தில் நடைபெற்ற இந்திய அணுசக்தி சங்கத்தின் 14ஆவது மாநாடு

நான்காம் பக்க அட்டை : யானைகள் முகாம்



## இந்த இதழில்...


- யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் - மகத்தான வெற்றி ..... 2
- புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ..... 7
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டு ..... 10
- இளைஞர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு ..... 11
- அனைவருக்கும் கல்வித் திட்டம் - இலக்கை விஞ்சிச் சாதனை ..... 12
- தமிழகத்தில் பெண்களுக்கென "மகளிர் தொழில் பூங்காக்கள்" ..... 15
- மகாமகத் திருவிழா - மகத்தான ஏற்பாடு ..... 17
- அனைவருக்கும் ஊட்டச்சத்துக் கல்வி ..... 21
- ஊனமுற்றோருக்கான அரசு சலுகைகள் ..... 25
- போலியோ நோயை அறவே ஒழிக்க அரசு சீரிய நடவடிக்கை ..... 28
- மரபு சாரா எரிசக்தி உற்பத்தியில் கோவை மாவட்ட ஊராட்சிகள் ..... 30
- மூதறிஞர் இராஜாஜி - தமிழகத்தின் தவப்புதல்வர் ..... 33
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி ..... 37
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொங்கல் வாழ்த்துச் செய்தி ..... 38
- மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களின் பொங்கல் வாழ்த்துப்பா 39
- கவியரசர் இளந்தேவன் கவிதை ..... 40
- இந்திய அணுசக்தி மறுசுழற்சி மற்றும் அணு விஞ்ஞான வாரியத்தின் முதல் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை ..... 42
- சாலை மேம்பாட்டுப் பணிகள் - புதிய பாலங்கள் ..... 45
- மணிக்கொடி சீனிவாசன் நூற்றாண்டு விழா ..... 46
- சேலம் மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக்குழுக்களின் சிறப்பான செயல்பாடுகள் ..... 49
- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மக்களின் பங்கேற்பில் உருவான பள்ளிக்கூடம் ..... 52
- இரத்த அழுத்தம் - ஒரு பார்வை ..... 54
- ஈரோட்டில் பூம்புகார் விற்பனை நிலைய முதல் விற்பனை தொடக்க விழா ..... 57
- நட்சத்திரக் குழந்தைகள் (சிறுகதை) ..... 60
- ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர்கள் ஆய்வுக்கூட்டம் ..... 64
- சிவகங்கை மாவட்டத்தில் சிறப்பாக நடைபெறும் ஊரக வளர்ச்சிப் பணிகள் 65
- சென்னையில் சர்வதேச மேலாண்மைப் பயிற்சி மையம் ..... 67
- தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் "மகாகவி பாரதியார் பிறந்தநாள் விழா" ..... 69
- மதுரை மாவட்டத்தில் சிறப்பு மருத்துவ முகாம் ..... 71
- கரூர் மாவட்டத்தில் பொன்விழா சுயவேலைவாய்ப்புத் திட்டம் ..... 73
- உடல் ஊனமுற்றோருக்கான உன்னதப்பணி ..... 76
- உவகை பொங்கும் உலக்கையருவி ..... 78



ஆசிரியரும் வெளியிடுபவரும் :வ. கனகராஜ், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை-தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com



# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி நடைபெற்ற யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் மகத்தான வெற்றி

திரு. ஜீ. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.,
ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.

"இயற்கையின் ஓர் அங்கமாக மனிதர்கள் மட்டுமல்லாமல், விலங்குகளும், மரம், செடி, கொடிகளும் உள்ளன என்பதை, நாம் அனைவரும் அறிவோம். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பயிர்களுக்காகக் கூட பரிதாபப்பட்ட வள்ளலார் போன்ற பெருமக்கள் வாழ்ந்த பூமி இது. மனிதர்கள் மட்டுமல்லாமல், ஏனைய உயிரினங்களும் நம்முடைய அன்புக்கு உரியவைதான் என்ற அடிப்படையில், விலங்குகளிடத்தில் நான் கொண்டிருக்கும் அன்பும் கருணையும் அனைவரும் அறிந்ததுதான்''

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா.

மயிலாப்பூரில் ஒரு யானை, யானைப்பாகனால் கடுமையாக நடத்தப்படுவது குறித்தும் பிச்சை எடுப்பதற்கு அதனை முறைகேடாகப் பயன்படுத்துவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்தபோது, மருத்துவ சிகிச்சையும் அடைக்கலமும் அளிப்பதற்காக அந்த யானையை வண்டலூர் உயிரியல் பூங்காவிற்கு அனுப்பி வைத்ததோடு அந்த யானைப்பாகன் மீது நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டார். அதன் தொடர்ச்சியாக யானைகளை முறையாகப் பராமரிப்பது குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

யானைகள் உடல்நலத்தைத் தொடர்ச்சியாக கண்காணிக்கவும், தேவையான மருத்துவ ஆலோசனையும், சிகிச்சையும் அளிக்கவும், திறமைவாய்ந்த கால்நடை மருத்துவர்களைக் கலந்து ஆலோசிக்க இந்து சமய அறநிலையத்துறைக்கு ஆலோசனை வழங்கினார்கள். யானைகள் சீரற்ற, கடினமான தரையில் நிற்க வைக்கப்படுவதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது அவற்றின் கால்களில் சிராய்ப்போ, புண்ணோ ஏற்படாதவாறு மண் தரையில் அல்லது புல் வெளியில்தான் அவை நிறுத்தப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். குடிப்பதற்கும், குளிப்பதற்கும், போதுமான அளவு தண்ணீர் வழங்கப்படுவதன் மூலம், யானைகளின் உடலும், உள்ளமும், எப்போதும் குளிர்ச்சியாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்கள். திருக்கோயில்களில், யானைகளைத் தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தாமல், ஒரு நாளில் குறிப்பிட்ட கால அளவுக்கு மட்டுமே அவை பணியில் ஈடுபடுத்தப்பட







வேண்டும் என்றும், அவற்றிற்குப் போதுமான ஓய்வு தரப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் பராமரிக்கப் பட்டு வரும் யானைகளுக்கு 2003 ஆம் ஆண்டு முதல் ஆண்டுக்கு ஒருமுறை, ஒரு மாத கால அளவிற்கு, யானைகளுக்கு ஒரு நலவாழ்வு முகாம் நடத்தவும், அங்கு தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் உள்ள அனைத்து யானைகளும் கொண்டுவரப்பட்டு அவற்றின் உடல்நிலை பேணப்பட்டு, புத்துணர்ச்சி அளிக்கும் பணி மேற்கொள்ளப்படும் எனவும், அந்த ஒரு மாத காலத்தில், யானைகளுக்குப் புத்திளமை அளிக்கும் சிறப்பு உணவும், மருத்துவ வசதியும் வழங்கப்படும் எனவும் அவற்றின் உடல் நலமும் மனநலமும் பேணப்படும் எனவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

வழக்கமாக ஆற்றிவரும் வேலைப்பளுவில் இருந்து ஒரு மாத காலத்திற்கு யானைகளுக்கு முழு ஓய்வு அளிக்கப்படும் எனவும் அந்த ஒரு மாத காலம் அளிக்கப்படும் ஊட்டச்சத்து உணவின் மூலமும், ஓய்வின் மூலமும் இந்த யானைகள் திருக்கோயில் களுக்குத் திரும்பச் செல்லும்போது, புத்துணர்ச்சியோடு தங்கள் பணிகளை மேற்கொள்ள இயலும் எனவும் அறிவித்ததோடு, அதிக வருமானமுள்ள திருக்கோயில் களின் நிதியிலிருந்து இதற்கான செலவுகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

தனியாரால் பராமரிக்கப்படும் யானைகளையும் இந்த முகாமில் அதன் உரிமையாளரின் முழு விருப்பத்தோடு கலந்துகொள்ளச் செய்யலாம் எனவும் அறிவுரை வழங்கினார்கள். தனியார் யானைகளுக்குப் போக்குவரத்து மற்றும் 30 நாட்களுக்கான உணவு மற்றும் அனைத்துச் செலவுகளையும் அரசே மேற்கொள்ளவும் அறிவுரை வழங்கினார்கள்.

எல்லா யானைப்பாகர்களுக்கும் யானைகளை அன்புடன் பராமரிப்பதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் சிறப்புப் பயிற்சி தனியாக அளிக்கவும் அறிவுறுத்தினார்கள். தொடர்ச்சியாக யானைகள் நலனில் அக்கறை செலுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து இந்து சமய அறநிலையத்துறை மற்றும் வனத்துறை ஆகியவற்றின் அதிகாரிகளைக் கொண்டு ஒரு ஒருங்கிணைப்புக் குழுவும் அமைத்து உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மேற்கண்ட ஆணைகள் மற்றும் அறிவுரைகளின்படி இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, வனத்துறை மற்றும் கால்நடைத்துறை ஒத்துழைப்போடு தமிழகத்திலுள்ள திருக்கோயில்களின் யானைகள் மற்றும் தமிழகத் திலுள்ள விரும்பும் தனியார் யானைகளுக்கு நீர் வசதி கொண்ட, ஏற்ற சுற்றுச்சூழல் அமைந்த முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் (தெப்பக்காடு) யானைகள் நலவாழ்வு முகாம் சுமார் 12 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டது.

இந்த யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களால் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள், வனத்துறை அலுவலர்கள், கால்நடைத்துறை அலுவலர்கள் மற்றும் வன ஆர்வலர்கள் முன்னிலையில் 16–11–2003 முற்பகல் எளிய நிகழ்ச்சியுடன் தொடங்கி வைக்கப்பட்டது. இம்முகாமில் திருக்கோயிலுக்குச் சொந்தமான 37 யானைகளும் தனியாருக்குச் சொந்தமான 18 யானைகளும் பங்கேற்றன. இத்துடன் 45

வனத்துறைக்குச் சொந்தமான யானைகளும் மொத்தம் 100 யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் பங்கேற்றன.

இம்முகாமில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டவாறு யானைகளின் உடல்நிலை பேணப்பட்டு, புத்துணர்ச்சி அளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒரு மாதக் காலத்தில் யானைகளுக்கு புத்திளமை அளிக்கும் சிறப்பு உணவும், மருத்துவ வசதியும் வழங்கப்பட்டது. இதன் மூலம் யானைகள் உடல் நலமும், மன நலமும் ஆரோக்கியமான சூழ்நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. இம்முகாம் வழக்கமான வேலைப் பளுவிலிருந்து யானைகளுக்கு முழு ஓய்வு அளிக்கப்படும் சூழ்நிலையை ஏற்படுத்தியது. இம்முகாம் காலத்தில் அளிக்கப்பட்ட ஊட்டச்சத்து உணவு மற்றும் ஓய்வின் மூலம் யானைகள் திரும்ப இருப்பிடத்திற்குச் சென்ற போது புத்துணர்ச்சியோடு அவைகள் உள்ளன.

ஒவ்வொரு யானைக்கும் மொத்த உணவு அதன் எடையில் 5 சதவிகித அளவில் அளிக்கப்பட வேண்டும் என்ற வழிமுறை இம்முகாமில் தவறாது பின்பற்றப்பட்டது.

“நம்முடைய அன்புக்கும் ஆதரவுக்கும் உரிய விலங்குகளை சிறந்த முறையில் பராமரிப்பது நமது கடமையாகும். குறிப்பாக, நிலத்தில் வாழும் உயிர்களில் மிகப்பெரியனவாகவும் மனிதர்களுக்கு உதவிகரமாகவும் உள்ள யானைகளைப் பாதுகாப்பதும் பராமரிப்பதும் நமது இன்றியமையாத கடமையாகும்'' என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, இந்த யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் சீரிய முறையில் வனத்துறை மற்றும் கால்நடைத்துறையின் ஒத்துழைப்போடு நடத்தப்பட்டது.

இராமநாதபுரம் சமஸ்தான திருக்கோயிலுக்குச் சொந்தமான விஜயலஷ்மி, மதுரை தனியாருக்குச் சொந்தமான சீதா, சேலம் தனியாருக்குச் சொந்தமான லஷ்மி, மதுரை அருள்மிகு கூடலழகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான மதுரவள்ளி, திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான வள்ளி, திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான கோமதி, இரட்டை திருப்பதி அருள்மிகு அரவிந்தலோச்சனார் திருக்கோயிலுக்குச் சொந்தமான லஷ்மி, திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான ருக்கு, மதுரை தனியாருக்குச் சொந்தமான குலேபகாவலி ஆகிய யானைகள் உடல் உபாதைகளால் பாதிக்கப்பட்டிருந்தன. குறிப்பாக உடல் பலகீனமாகவும், வாதநோய், கண்புரை நோய் மற்றும் சேற்றுப்புண் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தன. மேற்கண்ட யானைகளுக்குச் சிறப்பு நவீன சிகிச்சை அளிக்கப்பட்டு முழுமையாக குணமுற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இம்முகாமிற்கு இரட்டை திருப்பதி அருள்மிகு அரவிந்தலோச்சனார் திருக்கோயிலுக்குச் சொந்தமான மிகவும் இளவயதுடைய லஷ்மி என்ற யானைக்கு ஒரு கண்





பார்வை முழுமையாக இல்லாது இன்னொரு கண் பார்வை இழக்கும் அபாயத்துடன் கொண்டு வரப்பட்டது. அதற்கு அதிநவீன சிகிச்சை அளிக்கப்பட்டு பார்வை இல்லாத ஒரு கண்ணிற்கு அதிசயக்கும் வகையில் பார்வை கொண்டு வரப்பட்டது. மேலும் பேன், சேற்றுப்புண், வாதம், மண் உண்ணும் பழக்கம் போன்ற உபாதைகள் சில யானைகளுக்குத் தொற்றி இருந்தது. அவையெல்லாம் தக்க சிகிச்சை அளிக்கப்பட்டு குணப்படுத்தப்பட்டன. இம்முகாம் நடத்தப்படவில்லையெனில் மேற்கண்ட யானைகளின் உடல்நலம் ஒரு கேள்விக்குறியாகி இருக்கும் என்று யானைகள் சிறப்புநல வாழ்வு முகாமில் யானைகளுக்கு சிகிச்சை அளித்த குருவாயூர் திருக்கோயில் யானைகள் நல மருத்துவர் திரு.கே.சி. பணிக்கர் மற்றும் தமிழ்நாடு அரசு கால்நடை மருத்துவர் ஆகியோர் கருத்துத் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டு மற்றும் நம் நாட்டு சுற்றுலாப் பயணிகளும், மாணவ–மாணவிகளும், வன ஆர்வலர்களும் மற்றும் பலதுறை அலுவலர்களும் இம்முகாமைக் கண்டுகளித்ததோடு, பாராட்டவும் செய்தனர்.

இம்முகாமின் சிறப்பு அம்சங்களாக யானைக்கு உணவு மற்றும் மருத்துவ வசதி, அதேபோன்று யானைப் பாகன்களுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதி ஆகியன முகாம் வளாகத்திற்குள்ளேயே ஏற்பாடு செய்யப்பட்டது. முகாம் அருகே யானைகள் குளிப்பதற்கு ஏற்ற வகையில் மாயார் ஆற்றுப்படுகையில் இம்முகாம் அமைக்கப்பட்டது சிறப்பு வாய்ந்ததாகும். சுமார் 12 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டு முகாம் சுற்றிலும் சூரிய ஒளி மின்சாரக் கம்பி வேலி அமைக்கப்பட்டு வன விலங்குகளிலிருந்து முழுமையாகப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. முகாமைச் சுற்றி பயிற்சி அளிக்கப்பட்ட ''கும்கி'' என்று அழைக்கப்படும் யானைகளும், கண்காணிப்பு கோபுரமும் மேலும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தியது.

யானைகளுக்குப் புத்துணர்ச்சி அளித்த சிறப்பு நலவாழ்வு முகாமின் வெற்றியைத் தொடர்ந்து தமிழக முதலமைச்சர் அவர்கள் ''யானைகள் நலவாழ்வு முகாம் மகத்தான வெற்றி பெற்றுள்ளது. இனி ஆண்டுதோறும் 45 நாட்கள் யானைகள் முகாம் நடத்தப்படும்'' என்று அறிவித்துள்ளார்கள். மேலும் ''யானைகளின் மனநலம், உடல்நலம் தான் இந்த முகாம் நடத்தப்பட்டதற்கு முக்கிய நோக்கம் ஆகும். வன இலாகா அதிகாரிகள், கால்நடை டாக்டர்கள் ஆகியோர் இயற்கை சூழ்நிலையில் யானைகள் எப்படியெல்லாம் செயல்படுகின்றன என்பதை நேரடியாக தெரிந்து கொண்டனர். பல புதிய தகவல்களும் அவர்களுக்குக் கிடைத்துள்ளன. இந்த முகாமுக்குச் சென்று நேரில் பார்த்த பார்வையாளர்கள் பலர் இந்தத் திட்டத்தைப் பாராட்டியுள்ளனர். எனவே ஆண்டுதோறும் இதுபோன்ற யானைகளுக்குப் புத்துணர்ச்சி அளிக்கும் முகாம் நடத்த உத்தரவிட்டுள்ளேன். ஒவ்வொரு ஆண்டும் 45 நாட்கள் இந்த முகாம் நடைபெறும் தேதிகள் யானைகளை கொண்டு செல்ல வசதியாக முன்கூட்டியே அறிவிக்கப்படும். யானைகள் முகாம் வெற்றி அடைந்துள்ளதைத் தொடர்ந்து முன்பு யானைகளை முகாமுக்கு அனுப்ப மறுத்த மடம் மற்றும் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் இனி யானைகளை இந்தப் புத்துணர்ச்சி அளிக்கும் முகாமுக்கு அனுப்ப முன்வருவார்கள் என்று நம்புகிறேன். யானைகளை முகாமுக்கு சவுகரியமாக எந்தவித கஷ்டமும் இல்லாமல்



அனுப்ப அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும். முகாமுக்கு ஆகும் செலவு அனைத்தையும் அரசே ஏற்றுக் கொள்ளும். இந்து அறநிலையத்துறை, வனத்துறை, கால்நடைத்துறை, மாவட்ட நிருவாகம், தனியார் மடத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் அரும்பங்கு ஆற்றியது தான் இந்த முகாம் வெற்றி பெற்றதற்கு முக்கியக் காரணமாகும். யானைகள் மீது பரிவு காட்டும் இந்த உன்னதத் திட்டத்தை அரசு வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது'' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமின் இறுதி நாளான 15-12-2003 பிற்பகல் அனைத்து யானைகளும் ஒருங்கிணைந்து நிற்க மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர், மாண்புமிகு வனத்துறை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர், மாண்புமிகு சுற்றுலா துறை அமைச்சர் மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, வனத்துறை, கால்நடைத்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்று அமைச்சர் பெருமக்கள் யானைகளுக்கு வெல்லம், கரும்பு, பழவகைகள் அளித்தும், யானைப் பாகன்களுக்கு வேட்டி, துண்டுகள் வழங்கியும் முகாமை இனிதே நிறைவேற்றிச் சிறப்பித்தார்கள். ●

## சொல் வங்கி

தமிழ் வளர்ச்சித் துறையின் 15-ஆவது கூட்டத்தில் ஆங்கில வார்த்தைக்கு இணையான தமிழ்வார்த்தைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

| ஆங்கிலம் | தமிழ் |
|---|---|
| Synergy | குவியாற்றல் |
| Empathy | ஊடுணர்வு, அதுவாதல் |
| Pora | நுண்துளை |
| POTA | பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் |
| TESMA | தமிழ்நாடு இன்றியமையாப் பணிகள் பேணுகைச் சட்டம் |
| Humanity | மன்பதை, மனித இனம் |
| Dispensing Chemists | மருந்தாக்குநர் |
| Electro Plasting | மின்பூச்சு |
| Financier | நிதியாளுநர் |
| Informatics | தகவலியல் |
| Info system | தகவல் அமைப்பியல் |
| Spiral Bindings | சுருள்கட்டு |
| Super Speciality | நனி தனிச் சிறப்பு |
| Peripheral | புறநிலை |
| Processor | செயலி |
| Parlour | அகம் |
| Thermostat | வெப்பச்சீராக்கி |
| Upholstery | இருக்கை ஒப்பனை |
| Winding (Electrical) | மின் கம்பிச் சுற்று |
| Number Plate | எண் தகடு |
| Head Light | முகப்பு விளக்கு |

# புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ள திட்டங்களில், கிராமப் புறங்களில் புதிய தொழில் ஊக்கத்தை அளிக்கக்கூடிய 'ஒரு ஒன்றியத்திற்கு குறைந்தபட்சம் ஒரு தொழில்' என்னும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள திட்டம், 'புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டமாகும்.'

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, இம்மாநிலத்திலுள்ள 385 வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் உள்ளூரிலேயே கிடைக்கும் வேளாண் பொருட்களைக் கொண்டு குறைந்த பட்சம் ரூ.1 கோடி முதலீட்டில் வேளாண் மற்றும் உணவு பதப்படுத்தும் அலகுகள் அமைக்கப்படும். இவ்வலகுகளுக்கு சிறப்பு ஊக்க உதவிகள் மற்றும் வழிகாட்டுச் சேவை அளிக்கப்படும். மேலும் கடனுறுதி நிதி திட்டத்தின் கீழ் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்ட பயனாளிகளுக்கு வங்கிகள் பிணையம் இல்லா கடனுதவி அளிப்பதற்காக மூலதன முதலீட்டின் வரம்பினை ரூ.25 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாகக் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், தொழில் வணிகத்துறை மற்றும் மாவட்ட தொழில் மையங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## சிறப்பு ஊக்க உதவிகள்

இயந்திரம் மற்றும் தளவாடங்களுக்கான முதலீட்டில் 15 விழுக்காடு மூலதன மானியம், ரூ.15 இலட்சத்திற்கு மிகாமல்



வழங்கப்படும். மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 50 விழுக்காடுக்கும் அதிகமாக மகளிரைப் பணியில் அமர்த்தினால் அதற்குக் கூடுதலாக 5 விழுக்காடு மூலதன மானியமும் மின்னாக்கி மானியமாக 15 விழுக்காடு (ரூ.5 இலட்சம் வரை) மானியமும் வழங்கப்படும். மேலும் குறைந்த அழுத்த மின்மானியம், உற்பத்தி தொடங்கிய முதலாண்டில் 30 விழுக்காடு, இரண்டாவது ஆண்டில் 20 விழுக்காடு மற்றும் மூன்றாவது ஆண்டில் 10 விழுக்காடு வழங்கப்படும்.

இத்திட்டத்தின் வழிமுறைகளின்படி, மாவட்ட தொழில் மையங்களில் இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்கள், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்களின் தலைமையின் கீழ் உள்ள வழிபடுத்தும் குழுவினால் பரிசீலனை செய்து, தெரிவு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியர் தலைமையின்கீழ் உள்ள மாவட்ட அளவிலான குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பின்பு, மாவட்ட அளவிலான குழு தொழில் முனைவோர்களை நேர்காணலுக்கு அழைத்து திட்டங்களைப் பரிசீலனை செய்து அவர்களால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் பட்டியலை மாநில அளவிலான ஒருங் கிணைப்புக் குழுவின் இறுதி அனுமதிக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. அரசின் சிறு தொழில் துறைச் செயலரின் தலைமையின் கீழுள்ள மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு இத்திட்டங்களைப் பரிசீலித்து இறுதியாக அனுமதிக்கப்பட்ட திட்டங்களைத் தொழில் முனைவோருடன் தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்களில் விவரத் திட்ட அறிக்கையினை தாக்கல் செய்வதற்கு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் மாநில ஒருங்கிணைப்புக்குழுவால் அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்கு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுதல், நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகளின்படி அனுமதி பெறுதல் மற்றும் மின் இணைப்பு பெறுதல் ஆகியவற்றிற்குத் தேவையான வழிகாட்டுதலை மாவட்ட ஆட்சியர்களும், மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளரும் அளிக்கின்றனர்.

இன்றைய நிலவரப்படி, 364 வட்டாரங்களில் 682 திட்டங்களுக்குப் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒப்புதலளித் துள்ளது.





முக்கிய அம்சமாக இத்திட்டத்தின் கீழ் உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருட்களிலிருந்து உற்பத்தி செய்யக் கூடிய செரிவூட்டப்பட்ட கார்பன், குளிர்பதனம், உயிர் கழிவிலிருந்து இயற்கை உரங்கள், உயிரியல் தொழில் நுட்பப் பொருட்கள், மூலிகைப் பொருட்கள், சோத்துக் கத்தாழை, நெல் உமியிலிருந்து சோடியம் சிலிகேட், நிலக்கடலை ஓட்டிலிருந்து செல்லுலோஸ், மிளகாயிலிருந்து ஒலியோ ரெசின், ஜவ்வரிசியிலிருந்து இத்தைல் ஆல்கஹால் மற்றும் நீரகற்றப்பட்ட உயர்தரப் புரோட்டீன் ஆகிய புதுமையான முன்னோடித் தொழில் திட்டங்கள் இதுவரையில் அனுமதிக்கப்பட்டுள்ளன. எனவே, இது போன்ற திட்டங்களை மேலும் ஊக்குவிக்கலாம். இது போல நீரகற்றப்பட்ட காய்கறிகள் மற்றும் பழங்கள், மாம்பழச் சாறு, மல்லிகை வாசனை திரவம், வெள்ளரிப் பிஞ்சு பதப்படுத்துதல், முந்திரி பக்குவப்படுத்துதல், மூலிகை மருந்துகள் மற்றும் தென்னை நார் கழிவுப் பொருட்கள் முதலியன ஏற்றுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டவைகளில் முக்கியமான திட்டங்களாகும்.

மாநில ஒருங்கிணைப்புக்குழு ஒப்புதலளித்துள்ள 682 திட்டங்களுள் 214 திட்டங்களுக்கு நிதியுதவிக்கான விண்ணப்பங்கள் வங்கிகள்/நிதி நிறுவனங்கள் / தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஆகியவற்றிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பித்துள்ள 214 திட்டங்களுள், 120 திட்டங்களுக்கு நிதி நிறுவனங்கள் கடனுதவிக்காக ஒப்புதல் ஆணை வழங்கியுள்ளது. 34 திட்டங்கள் சொந்த முதலீட்டில் செயலாக்கத்தில் உள்ளன. செயலாக்கத்தில் உள்ள 154 திட்டங்களுள், 68 அலகுகள் மொத்தம் ரூ.46.21 கோடி திட்ட மதிப்பீட்டில் ஏற்கெனவே உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

2,593 மகளிர் உள்ளிட்ட சுமார் 3,442 ஊரக பகுதி மக்களுக்கு இந்த 68 அலகுகள் வேலை வாய்ப்பு அளித்துள்ளன.

உற்பத்தி துவங்கியுள்ள 68 அலகுகள் 20 மாவட்டங்களில் 54 வட்டாரங்களில் உள்ளன. அவை மலர்ச்சாறு எடுத்தல், முந்திரி பதப்படுத்தல், தேங்காய்த் தூள், பால் பொருட்கள், தேங்காய் ஓட்டுத் தூள், தென்னை நார் கயிறு கழிவுக்கட்டி, கயிறு நார், முறுக்கப்பட்ட கயிறு, பருப்பு ஆலை, நவீன அரிசி ஆலை, எண்ணெய் ஆலை, காளான் வளர்ப்பு, சவ்வரிசி ஆகிய தொழில் அலகுகள் ஆகும். கோயம்புத்தூரில் 8 வட்டாரங்கள், கடலூரில் 1 வட்டாரம், திண்டுக்கல்லில் 1 வட்டாரம், ஈரோட்டில் 7 வட்டாரங்கள், காஞ்சிபுரத்தில் 2 வட்டாரங்கள், கரூரில் 2 வட்டாரங்கள், மதுரையில் 3 வட்டாரங்கள், நாகர்கோவிலில் 4 வட்டாரங்கள், நாமக்கல்லில் 2 வட்டாரங்கள், நீலகிரியில் 1 வட்டாரம், புதுக்கோட்டையில் 5 வட்டாரங்கள், சேலத்தில் 1 வட்டாரம், சிவகங்கையில் 1 வட்டாரம், திருநெல்வேலியில் 5 வட்டாரங்கள், திருவள்ளூரில் 1 வட்டாரம்,

திருவண்ணாமலையில் 1 வட்டாரம், திருச்சியில் 3 வட்டாரங்கள், வேலூரில் 2 வட்டாரங்கள், விழுப்புரத்தில் 3 வட்டாரங்கள் மற்றும் விருதுநகரில் 1 வட்டாரத்திலும், இவ்வலகுகள் உற்பத்தியைத் துவக்கியுள்ளன.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் தொடங்கப்படும் தொழில்களுக்கு மானியம் வழங்குவதற்காக 2002 – 03 ஆம் ஆண்டில் ரூ.4.92 கோடியும் 2003 – 04 ஆம் ஆண்டில் ரூ.10 கோடியும் அரசு ஒதுக்கியுள்ளது. இந்த நிதி இதுவரை உற்பத்தியை தொடங்கியுள்ள 68 நிறுவனங்களுக்கும் இனிமேல் உற்பத்தியைத் தொடங்கும் 150 தொழில்களுக்கும் வழங்கப்பட உள்ளது.

இந்தப் புதிய பசுமை திட்டமானது ஊரகப்பகுதிகளின் மூலதனம், அறிவு, தொழில் நுட்பம் மற்றும் சந்தை இணைப்பு ஆகியவற்றை ஊக்குவித்து ஊரகப் பகுதிகளில் சீரான வளர்ச்சிக்கும் கூடுதல் வேலை வாய்ப்பிற்கும் வழிவகுக்கும். இத்திட்டத்தின் கீழ் கிராம விவசாயிகளின் மனித வளம் உற்பத்தித் துறையுடன் இணைந்து செயல்பட வாய்ப்பாக அமைகிறது. விவசாய சமுதாயத்தினருக்குத் தங்களின் விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும் அதே சமயத்தில் விளை பொருளின் மதிப்பை கூட்டுவதற்கும் இத்திட்டம் உதவியாக உள்ளது. உலக வர்த்தகக் கொள்கையின் காரணமாக விவசாய வர்த்தகச் சந்தை ஆரம்பித்துள்ள நிலையில் சந்தை நிலவரங்கள், வர்த்தக தகவல்கள், அறுவடை மற்றும் பக்குவப்படுத்தும் தகவல்கள் போன்ற முன்னோடி தொடர்புகள் (Forward linkages) மிகவும் முக்கியமானதாகும். இதைப் போலவே, உயர் விளைச்சலுக்குரிய வேளாண் அறிவு, மாற்றுப் பண்ணை முறைகள், இயற்கை உரங்கள் பயன்படுத்துவது, விதை மற்றும் பண்ணைப் பொருட்கள், நவீன இயந்திர கருவிகள் உபயோகிக்க பின் தொடர்புகள் (Backward linkages) முன் கூட்டியே திட்டமிட வேண்டியுள்ளது. எனவே, இத்திட்டத்தை வேளாண் துறை, தோட்டக் கலைத் துறை மற்றும் வேளாண் விற்பனைத் துறை ஆகியவற்றுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்த மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.




மேலும் ஒற்றைச் சாளர முறையில் கட்டட வரைபட ஒப்புதல் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அனுமதி விரைவில் பெறுவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 27 மாவட்டங்களில் நடைபெற்ற புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் தகவல் பரப்புக் கூட்டத்தில் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு, இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் பற்றியும் அரசு வழங்கும் மானியங்கள் பற்றியும் விளக்கிக் கூறி இத்திட்டத்தில் தொழில் முனைவோர்கள் பங்கு கொண்டு ஒவ்வொரு வட்டாரத்திலும் வேளாண்சார் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்கள் தொடங்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். மேலும், இக்கூட்டத்தில், மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப் பட்ட தொழில் முனைவோர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்குள்ள சிரமங்களைக் கேட்டறிந்து, அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றார். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட இத்திட்டம் மிக நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

*– ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், தொழில் வணிகத்துறை, சென்னை – 5.*

## உழைப்பு

**தான் பெறும் ஊதியத்தின் மதிப்பைவிடத் தனது உழைப்பின் மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதனே சமூகத்தில் முன்னேற முடியும்.**

- ஆபிரகாம் லிங்கன்



# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டு

தமிழக முதலமைச்சர் அவர்களின் அழைப்பையேற்று, லண்டன் பிரபு சுவராஜ்பால் சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை 1.1.2004 அன்று சந்தித்துப் பேசினார்.

முதலமைச்சர் அவர்களின் உறுதியான தலைமையின்கீழ் தமிழகம் ஒட்டுமொத்த வளர்ச்சி கண்டுள்ளது என்று முதலமைச்சர் அவர்களை சுவராஜ்பால் பாராட்டினார்.

அதே நேரத்தில் தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகரை மேம்படுத்துவதற்கு எடுத்துவரும் முயற்சிகளுக்குத் தமது பாராட்டுகளைத் தெரிவித்த அவர், சென்னை மாநகரின் வளர்ச்சி கண்கூடாகத் தெரிவதாகவும் தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்து வரும் அனைத்து முயற்சிகளுக்கும் குறிப்பாக, தமிழகம் மற்றும் இங்கிலாந்து தொழிற்துறைகளுக்கு இடையே நல்லுறவு ஏற்பட முழு ஒத்துழைப்பு அளிப்பதாகவும் அப்போது அவர் உறுதியளித்தார்.

தமிழ்நாட்டில் குறிப்பாக, சென்னையில் சர்வதேசத் தரத்திலான சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு தொழிற்சாலையை உருவாக்குவதற்கு பிரபு சுவராஜ்பாலின் ஒத்துழைப்பு வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். அதற்கு பிரபு சுவராஜ்பால், சரியான தருணத்தில் சென்னை மாநகரில் பொழுதுபோக்கு தொழிற்சாலையை உருவாக்கித் தருவதற்கு, தம்மாலான அனைத்து முயற்சிகளையும் நிச்சயமாக செய்து தருவதாக உறுதி கூறினார்.

மேலும், சென்னை மாநகரில் அழகுக்கலை தொழிற்சாலையை உருவாக்குவதற்கு, தாம் அனைத்து வகையான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

தமிழ்நாட்டைப் குறிப்பாக சென்னையைப் பன்னாட்டு உற்பத்தி மையமாக்கும் முதலமைச்சர் அவர்களின் முயற்சிகளுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இத்தகைய புதிய முயற்சிகளுக்கு, தாம் முழு அளவில் ஒத்துழைப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமதி.லட்சுமி பிராணேஷ், இ.ஆ.ப, மேம்பாட்டுத்துறை ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் திரு. என்.நாராயணன்,இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

★



# இளைஞர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கடுமையான முயற்சிகளின் காரணமாக மலேசியாவிலிருந்து தமிழகம் மீண்டு வந்துள்ள திரு.சிவராமன் முரளிதரன், திரு. சுந்தரராஜு, திரு. கோபிநாதன் ஆகிய தமிழ் இளைஞர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 26-12-2003 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து, தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

தமிழ்நாட்டில் இருந்து வேலை தேடி மலேசியா சென்ற இளைஞர்கள் அங்குள்ள நிறுவனங்களால் ஏமாற்றப்பட்டு மிகவும் அவதிப்படும் செய்தியை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இது குறித்து 2-12-2003, 13-12-2003 ஆகிய நாள்களில், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.வாஜ்பாய் மற்றும் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. யஷ்வந்த் சின்ஹா ஆகியோருக்கு கடிதம் மூலம் விவரத்தைத் தெரிவித்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து இருந்தார்கள். அவர்களது பாஸ்போர்ட், விசா முதலிய ஆவணங்கள் முடக்கி வைக்கப்பட்டுள்ள நிலையில் மலேசியாவில் உள்ள இந்தியத் தூதரகத்தை அணுகிய போதிலும் அங்கு உதவி கிடைக்காத நிலையினையும் அந்தக் கடிதத்தில் விரிவாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்து, இவர்களுக்கு நிவாரணம் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தினார்கள். இதனைத் தொடர்ந்து, மத்திய அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு இதுகுறித்து கடந்த 18-12-2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு.யஷ்வந்த் சின்ஹா எழுதிய கடிதத்தின் மூலம் இவர்கள் அனைவரையும் மீட்க மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று உறுதி அளித்திருந்தார்.

இதன்படி, உரிய வேலைக்கான விசாவுடன் மலேசியா சென்றும் அங்குள்ள நிறுவனங்களால் ஏமாற்றப்பட்டு ஊதியமும் தங்குவதற்கு இடமும் கிடைக்காமல், உணவுக்கே சிரமப்பட்டுக் கொண்டிருந்த திரு.சிவராமன் முரளிதரன், திரு.சுந்தரராஜு, திரு.கோபிநாதன் ஆகியோர் 25-12-2003 அன்று சென்னை வந்து சேர்ந்தனர். மலேசியா நாட்டில் இருந்து தாங்கள் மீண்டும் தமிழகம் வருவதற்கு காரணமாக இருந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை இந்த மூன்று தமிழ் இளைஞர்களும் நேரில் சந்தித்து தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

அப்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த மூன்று இளைஞர்கள் வேலையில்லாமல் அவதியுறும் நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் டாஸ்மாக் நிறுவனத்தின் சார்பில் நடத்தப்படுகின்ற சில்லறை மது விற்பனைக் கடைகளில் அவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ப மேற்பார்வையாளர் மற்றும் உதவியாளர்களாக பணியமர்த்த உத்தரவிட்டார்கள். இதன்மூலம் இவர்களுக்கு அவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ப, மாதந்தோறும் ரூ.1,500 முதல் ரூ.3,000 வரை ஊதியமாகக் கிடைக்கும். இது தவிர, ஊக்கத்தொகையும் கிடைக்கும். ★



# அனைவருக்கும் கல்வித் திட்டம் இலக்கை விஞ்சிச் சாதனை

இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும், அனைத்துத் துறைகளிலும், தமிழ்நாடு முதல் நிலை மாநிலமாகத் திகழ வேண்டும் என்னும் இலட்சிய நோக்கோடு செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கல்வித்துறையிலும் தனது தீவிர கவனத்தைச் செலுத்தி வருகிறார்கள்.

இதன் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 14.7.2002 அன்று "அனைவருக்கும் கல்வி இயக்கம்" (Sarva Shiksha Abhiyan) என்னும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அப்போது அவர்கள் ஆற்றிய உரையில்,

"அனைவருக்கும் கல்வி இயக்கம்" திட்டம் மகத்தான ஒரு திட்டமாக மலர்ந்து, நறுமணம் வீசி, தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மாணவச் செல்வங்களுக்கும் பெரும் பயனைத் தர இருக்கின்றது.

"அன்னயாவினும் புண்ணியம் கோடி –
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

– என்ற பாரதியார் வாக்கிற்கு ஏற்ப, ஏழை, எளிய மக்களுக்கும், நடுத்தர வர்க்கத்து மக்களுக்கும் தேவைப் படுகின்ற அனைத்து கல்வி வசதி களையும், செய்து தருவதில் உங்கள் அன்பு சகோதரியின் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது.

"அனைவருக்கும் கல்வி இயக்கம்" அத்தகைய சீரிய பணிகளில் முக்கிய மான ஒரு திட்டப் பணியாகும். இந்தப் பணியில் அனைத்துத் தரப்பு மக்களும், மக்கள் பிரதிநிதிகளும், நன்முறையில் பங்கேற்று, இந்தத் திட்டத்தினை வெற்றி பெற செய்து, 2010–ஆம் ஆண்டில் பள்ளிக்குச் செல்லாத குழந்தை ஒன்று கூட தமிழ்நாட்டில் இல்லை என்று அனைவரும் போற்றத்தக்க நிலையை நாம் எய்த வேண்டும்'' என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் எண்ணங்களுக்கு ஏற்ப "தமிழ்நாட்டில் உள்ள அனைவரையும் கல்வி கற்கச் செய்து, உலகமெல்லாம் தமிழ்மக்களின் பெருமை ஓங்கச் செய்யும் நோக்கத்துடன் 14 வயதுவரை உள்ள குழந்தைகள் அனைவரையும் குறைந்த பட்சமாக எட்டாம் வகுப்பு வரை கல்வி பெறச் செய்வதை விரைந்து நடைமுறைப் படுத்திட உறுதி கொண்டு தமிழக அரசு செயல்பட்டு வருகிறது. அதனை அடிப் படையாகக் கொண்டே அனைவருக்கும் ஆரம்பக் கல்வி அளிப்பதில் தமிழகம் முதன்மை பெற்றிடவேண்டுமென்ற நோக்கத்துடன், அனைவருக்கும் கல்வி வழங்குவதில் மக்களை உட்படுத்தி மக்களே முன்னின்று நடத்தும் மாபெரும் மக்கள்





இயக்கமாக்கிச் செயல்படுத்துவதற்கான திட்ட நடவடிக்கைகளை அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின் வாயிலாக தற்போது தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. இத்திட்டம் மக்கள் திட்டமாகவும் வெளிப் படையானதாகவும் அமைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

தமிழகத்திலுள்ள பதினான்கு வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளும், குறிப்பாக சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள ஏழை, எளிய, நலிவுற்ற மக்களின் குழந்தைகள், பெண் குழந்தைகள், இயலாக் குழந்தைகளும் கல்வி பெறும் வகையில் பள்ளிகள் தொடங்குதல், பள்ளிக் கட்டமைப்பு வசதிகள் செய்து தருதல், கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வழங்குதல், ஆசிரியர்களின் செயல்திறனை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு அனைவருக்கும் கல்வி இயக்கம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த இலக்கை நோக்கிய இடைவிடாத பயணத்தில் கடந்த 2002 – 2003 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் திட்டச் செயல்பாடுகள் குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தை எட்டியுள்ளது. 1,112 புதிய தொடக்கப்பள்ளிகளும், 1,075 புதிய நடுநிலைப் பள்ளிகளும் அமைக்கப்பட்டன. 4,172 புதிய ஆசிரியர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. 385 வட்டார வளமைய மேற் பார்வையாளர்களும், 2,695 வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுனர்களும் நியமிக்கப்பட்டனர். 3,930 பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையங்கள், 40,891 கிராமக் கல்விக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.





இதுவரை இல்லாத ஒரு புதிய திருப்பமாக அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலம் அமைக்கப்படும் பள்ளிக் கட்டடங்களைக் கட்டும் பணியில் மக்களே பங்கெடுத்து கிராமக் கல்வி குழுவின் பங்கேற்புடன் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதன்மூலம் கல்விப் பயிர் வளர மக்கள் சமுதாயமும், மகத்தான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது என்பது சிறப்பான ஒன்றாகும்.

168 வட்டார வளமையக் கட்டடங்கள், 474 பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையக் கட்டடங்கள், 1,959 இரு வகுப்பறைக் கட்டடங்கள், 1,508 மூன்று வகுப்பறைக் கட்டடங்கள், 6,719 கழிப்பிட வசதிக் கட்டடங்கள் ஆகியவை கட்டப்பட்டுள்ளன. 5,166 குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

33,522 பள்ளிகளுக்கு பள்ளி மானியமும், 1 இலட்சத்து 92 ஆயிரத்து 784 ஆசிரியர்களுக்கு ஆசிரியர் மானியமும், 2,187 பள்ளிகளுக்கு கற்றல் கற்பித்தல் உபகரணங்களுக்கு மானியமும், 33,522 பள்ளிகளுக்கு பராமரிப்பு மானியமும் வழங்கப்பட்டுள்ளது.

1 இலட்சத்து 92 ஆயிரத்து 784 ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 6, 7 மற்றும் 8ஆவது வகுப்புகளில் பயிலும் 15 இலட்சத்து 92 ஆயிரத்து 427 மாணவர்களுக்கு கணினிக்கல்வியும், 7 இலட்சத்து 26 ஆயிரத்து 268 நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு வாழ்க்கைக்கு உகந்த தொழிற்கல்வியும் வழங்கப் படுகின்றது.

63,066 மாற்றுத்திறன் மிக்க குழந்தைகளுக்கு அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட இயலாதோருக்கான இணைந்த கல்வித் திட்டம் அமல்படுத்தப்படுகிறது. மேலும் 8 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கிய 13 வட்டாரங்களில் 11 பெண் கல்விச் சிறப்புத் திட்டம் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இத்துடன் பெண் கல்விச் சிறப்புத் திட்டத்தின் கீழ், 114 பள்ளித் தொகுப்பு முன்மாதிரிப் பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற சிறப்பான செயல்பாடுகளில் விரைந்த நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொண்டு வருகின்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின் பயனாக, "அனைவருக்கும் கல்வித் திட்டம்'' தொடங்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள், 6 வயது முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவரும் எளிதாகக் கல்வி பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 2001–2002ஆம் ஆண்டில் தொடக்கப் பள்ளி வசதி பெற்ற குடியிருப்புகளின் விழுக்காடு 97.1லிருந்து 2003–2004ஆம் ஆண்டில் 100 ஆக உயர்ந்துள்ளது. இதன் மூலம், அனைத்துக் குடியிருப்புகளுக்கும் பள்ளி வசதிகளை வழங்குவதில் இந்தியாவிலேயே முதல் மாநிலம் என்னும் பெருமையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.



• • •

# தமிழகத்தில் பெண்களுக்கென "மகளிர் தொழில் பூங்காக்கள்"

தமிழ்நாட்டுப் பெண்களின் வாழ்வில் புதிய எழுச்சியை ஏற்படுத்தி, அவர்கள் சுயமாக தொழில் செய்து, தங்களை உயர்த்திக் கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமது விரைந்த நடவடிக்கை மூலம் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள்.

பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சிட்கோ நிறுவனத்தின் மூலம் பெண் தொழில் முனைவோருக்கு 500 தொழிற்கூடங்களுக்கான மனைகள் ஒதுக்கீடு செய்ய உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் உதித்த இந்த சீரிய திட்டம் தமிழ்நாடு




சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

திருவள்ளூர் மாவட்டம் திருமுல்லைவாயில், திருச்சிராப்பள்ளி மாவட்டம் வாழவந்தான் கோட்டை, சேலம் மாவட்டம் கருப்பூர் கிராமம், கோயம்புத்தூர் மாவட்டம் குறிச்சி கிராமம் மற்றும் மதுரை மாவட்டத்தில் தற்போது இப்பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் வாழவந்தான் கோட்டை**

திருச்சிராப்பள்ளியில் 10–3–2003 அன்று நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வாழவந்தான் கோட்டை மகளிர் தொழில்பூங்காவை தொடங்கிவைத்தார்கள். இங்கு சிட்கோவிடம் உள்ள 165.72 ஏக்கர் நிலத்தில் 51.7 ஏக்கர் நிலம் மகளிர் தொழில் பூங்காவிற்காக மேம்பாடு செய்ய ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ரூபாய் 180 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இந்த தொழில்பேட்டையில் 10 சென்ட் முதல் 1 ஏக்கர் பரப்பளவுள்ள 174 தொழில் மனைகள் உருவாக்கப் பட்டுள்ளன. இத்தொழில்பூங்காவிற்காக பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் பிணை வைப்புத் தொகையுடன் பெறப்பட்டு ஒதுக்கீட்டு ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளன. வளர்ச்சிப் பணிகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டன.

**திருவள்ளூர் மாவட்டம்**
**திருமுல்லைவாயில்**

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், திரு முல்லை வாயிலில் அமைக்கப்பட்டுள்ள தொழில் பூங்காவை 4–7–2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இங்கு 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய தொழில் பூங்காவை நிறுவ நடவடிக்கை எடுத்து தமிழக அரசு புதிய அரசு அரசாணை எண் 243 வருவாய் (நி.மு.5(2)) துறை நாள் 19.07.2001இல் முதல் கட்டமாக 290.84 ஏக்கர் புறம்போக்கு நிலங்களில் தொழிற்பேட்டை அமைக்கும் பொருட்டு சிட்கோ நிறுவனத்திற்கு முன்நுழைவு செய்ய அனுமதி அளித்துள்ளது. இதில் இதுவரை 273.36 ஏக்கர் நிலத்தினை சிட்கோ கையகப்படுத்தியுள்ளது.

திருமுல்லைவாயில் தொழில்பேட்டையில் முதல் கட்டமாக 290.84 ஏக்கர் முழுவதும் பெண்களுக்கான தொழில் பூங்காவாக அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி பெண் தொழில் முனைவோரின் ஆர்வம் குறித்து "கேட்பு ஆய்வு" செய்ததில், 5 சென்ட், 10 சென்ட், 15 சென்ட், 25 சென்ட், 50 சென்ட் மற்றும் 1 ஏக்கர் தொழில் மனைகளுக்கான விசாரணைகள் 492ம், 540 சதுர அடி, 990 சதுர அடி, 2,120 சதுர அடி தொழிற்

கூடங்களுக்கான விசாரணைகள் 142ம் இதுவரை பெறப்பட்டுள்ளது. இதுவரை 1,198 விண்ணப்பப் படிவங்கள் பெண் தொழில் முனைவோருக்கு விற்கப்பட்டு, 200 பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்கள் பிணை வைப்புத் தொகையுடன் திரும்பப் பெறப்பட்டுள்ளன. 184 விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கீட்டு ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு தமிழக அரசின் நிருவாக ஒப்புதல் அரசு கடிதம் 30/SIC/2002 நாள் 19.6.2002இல் பெறப்பட்டுள்ளது. இதுவரை இந்தத் தொழில்பேட்டையில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல், மேல்நிலை நீர்த்தொட்டி அமைத்தல், வடிகால் வசதி அமைத்தல், சாலை விளக்குகள் அமைத்தல், சுற்றுவேலி அமைத்தல் ஆகியவை ரூபாய் 610 இலட்சம் மதிப்பீட்டில் முழுவீச்சில் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளன. இதில், 5 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பட்டு 1.5 இலட்சம் லிட்டர் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிகள் அமைக்கப் பட்டு முடிவு பெற்றுள்ளது. வடிகால் மற்றும் கழிவுநீர் வசதிகள் அமைக்கும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. சரளை மண் விரித்தல், மழைநீர் வடிகால் வேலைகள், RCC வடிகால் பலகைகள் தயாரித்தல் மற்றும் பதிக்கும் வேலைகளும் முடியும் தருவாயில் உள்ளன. தெரு விளக்குகள் அமைக்கும் பணிகள் முடிவடைந்து உள்ளன. இந்தத் தொழிற்பேட்டையில் 342 மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஒதுக்கீடு ஆணைகள் விண்ணப்பதாரர் களுக்கு அனுப்பப்பட்டு விட்டன.

**சேலம் மாவட்டம் கருப்பூர் கிராமம்**

சேலத்திலிருந்து10 கி.மீ. தூரத்தில் கருப்பூர் கிராமத்தில் பெரியார் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 51.7 ஏக்கர் நிலத்தில் "மகளிர் தொழில்பூங்கா" அமைக்க அரசு ஆணை 37/2002 நாள் 19/7/2002 மூலம் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு மேற்படி நிலத்தில் சிட்கோ நிறுவனத்திற்கு முன் நுழைவு அனுமதி வழங்க ஆணை பிறப்பித்துள்ளது. சேலம் மாவட்ட ஆட்சித்தலைவரும் முன் நுழைவு ஆணை வழங்கியுள்ளார். சேலம் கிளை மேலாளர் நிலத்தை எடுத்துக் கொண்டு பூர்வாங்கப் பணிகள் மேற் கொண்டுள்ளார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 22.7.2002 அன்று இத்தொழிற் பேட்டைக்கான அடிக்கல்லை நாட்டினார்கள். ரூபாய் 213 இலட்சம் மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகள் செய்வதற்கு சிட்கோ குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது. கேட்பு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இத்தொழிற் பேட்டையில் 5 செண்ட் முதல் 1 ஏக்கர் பரப்பளவிலான 159 தொழில் மனைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. வளர்ச்சிப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இதுவரை 105 விண்ணப்பங்கள் பிணை வைப்புத் தொகையுடன் பெறப்பட்டுள்ளன.

**மதுரை மாவட்டம்**

மதுரை மாவட்டம் பெருங்குடி, வலயங்குளம் மற்றும் வலயப்பட்டி கிராமங்களில் சுமார் 45.33 ஏக்கர் நிலங்கள் தெரிவு செய்யப்பட்டு நிலமாற்று உத்தரவு வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை அவர்களுக்குக் கேட்பு விண்ணப்பப் படிவங்கள் அடங்கிய கோரிக்கை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் நில நிருவாக ஆணையருக்குப் பரிந்துரை அனுப்பியுள்ளார்.



**கோயம்புத்தூர் மாவட்டம் குறிச்சி கிராமம்**

இம்மாவட்டத்தில் குறிச்சி கிராமத்தில் 39.72 ஏக்கர் பட்டா நிலம் பெண்களுக்கான தொழிற்பேட்டை அமைப்பதற்குத் தெரிவு செய்யப் பட்டுள்ளது. மேலும் அரசு கடித எண். (நிலை) 118 சிறு தொழில் (சிதொசி) துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9 இல் நிருவாக ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டது. மேற்காணும் ஆணையின்படி கோவை மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களை நில எடுப்புப் பணி மேற்கொள்ளவும் தனியார் பேச்சு வார்த்தை மூலம் நிலத்தை கிரயம் செய்யவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி இவ்வலுவலக ந.க.எண்.16043/ என்/2/2001 நாள் 24.12.2003இல் கடிதம் அனுப்பப் பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இது சம்பந்தமாக மேல் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

*– பொது மேலாளர்,*
*தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்.*



# மகாமகத் திருவிழா – மகத்தான ஏற்பாடுகள்

திரு.எஸ். கோசலராமன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர்

“திருக்கோயில்களின் இருப்பிடம்” என்கிற பெருமைக்குரிய திருநகரம் குடந்தை மாநகரமாகும். இலக்கியம் போற்றும் குடந்தை சோழர் கால வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகக் கருதிப் போற்றப் படுகின்ற நிலை பெற்றுள்ளது. இங்கு பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் பக்திப் பெருவிழா – மகாமகத் திருவிழா.

வடமாநிலத்தில் நடைபெறும் கும்பமேளாவைப்போல இத்திருவிழா மிகவும் சிறப்புடைய ஒன்றாகும். இவ்விழாவையொட்டி நாடு முழுவதிலும் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் வருகை தந்து குடந்தை மகாமகக் குளத்தில் நீராடி வழிபடுவதிலிருந்தே இந்தத் திருவிழாவின் சிறப்பையும் பெருமையையும் உணர்ந்திட முடியும்.

மகாமகத் திருவிழாவின் முக்கியத்துவத்தையும் – இத்திருவிழாவினையொட்டி திருக்குடந்தையில் சங்கமித்திடும் மக்கள் கடலையும் கருத்திற் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப தமிழ்நாடு அரசின் மூலம் மகத்தான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மகாமகம் திருவிழாவையொட்டி செயல்படுத்தப் படும் வளர்ச்சித் திட்டங்கள் – அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகள் – ஆலய திருப்பணிகள் – விழாவிற்கான பிற ஏற்பாடுகள் ஆகியவற்றைக் கண்காணிக்கவும் – பணிகளை விரைவுபடுத்தி உரிய காலத்தில் செய்து முடிக்கும் வகையிலும், விழா ஏற்பாடுகள் சிறப்பாக அமைந்திட வழிவகுக்கவும் தலைமைச் செயலாளர் தலைமையில் – பல்வேறு துறைச் செயலாளர்கள் மற்றும் துறைத்தலைவர்கள் உள்ளடங்கிய 23பேரைக் கொண்ட உயர் மட்டக்குழு அமைக்கப்பட்டு நிருவாக இயந்திரம் முழுமையாக முடுக்கி விடப்பட்டுள்ளது.

மகாமகம் குளத்தில் தூர் எடுத்து – ஒரு அடி உயரத்திற்கு மணல் பரப்பி – பின்னர் தண்ணீர் விட்டு பக்தர்கள் நீராடுவதற்கு வசதி செய்து தரவும் – மகாமகக் குளத்தின் படிக்கட்டுகளைச் சீர் செய்யவும், ஏர்கம்பரசர் மூலம் படிக்கட்டுகளின் இணைப்புகளைச் சுத்தம் செய்யவும் – மகாமகம் குளத்தில் உள்ள 20 புண்ணிய தீர்த்த வாரி ஊற்றுக் கிணறுகளை சீரமைக்கவும் மகாமகக் குளத்திற்கு தண்ணீர் விடுவதற்கு ஆதாரமான அரசலாற்றில் தூர் எடுக்கவும் வரத்து வாய்க்காலை சீர்செய்யவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் நிலையில் உள்ளன.

மக்கள் காவிரியாற்றில் புனித நீராடுவதற்கு வசதியாக ரூ.10 இலட்சம் செலவில் புதிதாகப் படிக்கட்டுகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. சக்கரா படித்துறைகளை சீரமைக்கும் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

பழவத்தான் கட்டளை வாய்க்கால் உள்ளூர் மற்றும் பெருமாண்டி வாய்க்கால் குடந்தை மாநகர எல்லைக்குள் செல்வதால் அவற்றை ரூ.23 இலட்சம் செலவில் தூர் வாரி செப்பனிடவும் மற்றும் சிறுபாலங்கள் கட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குடந்தை பொற்றாமரைத் திருக்குளத்தை சீரமைக்கும் பணிகள் ரூ.5 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மகாமகத்திற்குள் 17சைவ மற்றும் வைணவ திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து, குடமுழுக்கு செய்ய வேண்டும் என்பது ஆகம விதிகளில் ஒன்றாகும்.

அந்த வகையில் 9 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணிகள் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

மேலும் 8 திருக்கோயில்களுக்கும் மகாமகம் குளத்தை சுற்றியுள்ள ஆலயங்களுக்கும் திருப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.



மகாமகம் தொடர்புடைய 17 திருக்கோயில்கள் மற்றும் 16 சோடசலிங்க கோயில்கள் ஆகியவற்றிற்கான திருப்பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கான செலவினம் மொத்தம் ரூ.1.50 கோடியாகும்.

மகாமகம் திருவிழாவையொட்டி புறவழிச்சாலை அமைத்தல், பல்வேறு சாலைகளை அபிவிருத்திச் செய்தல் போன்ற பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.

கும்பகோணம் புறவழிச்சாலைகள் 3 கிலோ மீட்டர் நீளத்தில் ரூ. 712.75 இலட்சம் மதிப்பிலும், மேலும் ஒரு புறவழிச்சாலை 3 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.645.40 இலட்சம் மதிப்பிலும் மற்றொரு புறவழிச்சாலை 2.76 கிலோ மீட்டர் நீளத்தில் ரூ.657.30 இலட்சம் மதிப்பிலும் பணிகள் நடைபெற்று வருகிறது.

காவேரி மற்றும் அரசலாற்றில் குறுக்கே 3 பாலங்கள் ரூ.394 இலட்சம் மதிப்பிலும் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

மாநிலச் சாலைகளான திருவாரூர் – குடவாசல் கும்பகோணம் சாலை 6.40 கி.மீ. நீளத்திற்கு ரூ.57.60 இலட்சம் மதிப்பிலும், கும்பகோணம் – மன்னார்குடி அதிராம்பட்டினம் சாலை 2 கி.மீ. நீளத்திற்கு ரூ. 8 இலட்சம் மதிப்பிலும், கல்லணை – காவேரிப்பட்டினம் 3.20 கி.மீ. நீளத்திற்கு ரூ.27.30 இலட்சம் மதிப்பிலும், கல்லணை – காவேரிப்பட்டினம் சாலை 1.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.8.50 இலட்சம் மதிப்பிலும், கும்பகோணம் – சீர்காழிச்சாலை 3.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.32.40 இலட்சம் மதிப்பீட்டிலும் மேம்படுத்தப்பட உள்ளது. மாவட்ட சாலைகளான சுவாமிமலை இணைப்புச்சாலை 0.20 கி.மீ. நீளத்திற்கு 0.90 இலட்சத்திலும், கும்பகோணம் – கொள்ளிடக் கரைச்சாலை 1 கி.மீ. நீளத்திற்கு ரூ.5.30 இலட்சம் மதிப்பிலும் மேம்படுத்தப்பட உள்ளது.

இதர மாவட்டச் சாலைகள் 39.20 கி.மீ. நீளத்திற்கு ரூ.2 கோடியே 40 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட உள்ளது. இதர மாவட்டச் சாலைகளில் புளியஞ்சேரி – குடிதாங்கிச் சாலை 5 கி.மீ. நீளத்திற்கு ரூ.38.50 இலட்சம் மதிப்பிலும், காடச்சம்பாடி சாலை 4 கி.மீ. நீளத்திற்கு ரூ.32 இலட்சம் மதிப்பிலும் கலம்பரம்சாலை 4 கி.மீ. நீளத்திற்கு ரூ.32 இலட்சம் மதிப்பிலும் கலம்பரம்சாலை 5 கி.மீ. நீளத்திற்கு ரூ.29.50 இலட்சம் மதிப்பிலும், மருதாநல்லூர் – அன்னல்கரம் சாலை 2.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.17.20 இலட்சம் செலவிலும், சுந்தரப்பெருமாள் கோவில் – மருதாநல்லூர் சாலை 4.80 கி.மீ. நீளத்திற்கு ரூ.31.20 இலட்சம் மதிப்பிலும் சுவாமிமலை இரயில்வே ஸ்டேசன் ரோடு – பட்டீஸ்வரம் சாலை 2.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.11.70 இலட்சம் மதிப்பிலும், திருவிடைமருதூர் கோயிலாச்சேரி சாலை 5.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.29.70 இலட்சம் மதிப்பிலும், திருவிடைமருதூர் – கோவிலாச்சேரி சாலை 1.60 கி.மீ. நீளத்திற்கு 8.50 இலட்சம் மதிப்பிலும், தேப்பெருமா நல்லூர் சாலை 2.40 கி.மீ. நீளத்திற்கு ரூ.10.80 இலட்சம் மதிப்பிலும், திருநாகேஸ்வரம் – திருநாரையூர் சாலை 5.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.30.90 இலட்சம் மதிப்பிலும் சாலைப்பணிகள் நடைபெறுகிறது.

அனைத்து சாலை மேம்பாட்டுப் பணிகளும் போர்க்கால அடிப்படையில் நடைபெற்றுவருகின்றன.

மகாமகத்தையொட்டி, குடந்தை மாநகரம் பெறுகின்ற மகத்தான கட்டமைப்பு வசதி கும்பகோணத்திற்கும் தஞ்சாவூருக்கும் இடையே நடைபெறும் அகல இரயில்பாதை அமைக்கும் பணியாகும். ரூ.73 கோடி மதிப்பீட்டில் நடைபெறும் இப்பணி, துரிதமாக நடைப்பெற்று வருகின்றது.

மகாமகத்தையொட்டி குடந்தை மேம்பாலத்திற்கு அருகாமையில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மாபெரும் கலையரங்கம் அமைக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

மகாமகம் திருவிழாவை செம்மையாகவும் சிறப்பாகவும் நடைபெற மக்களுக்குத் தேவையான பல்வேறு வசதிகளை செய்துதர அரசு ஆணை பிறப்பித்து – அரசின் பல்வேறு துறைகளும் முடுக்கிவிடப் பட்டு போர்க்கால அடிப்படையில் பணிகளை செயல்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

நகராட்சியின் மூலம் ரூ.162.30 இலட்சம் மதிப்பீட்டில் 18 குடிநீர் அபிவிருத்தி பணிகளும், ரூ.51.92 இலட்சம் செலவில் வடிகால் சிறுபாலம் கட்டுவதற்காக 15 பணிகளும் ரூ.160.10 இலட்சம் செலவில் சாலை பணிகளும், நகராட்சி பள்ளிக் கட்டிட பராமரிப்புக்காக 35 பணிகள் ரூ.66.45 இலட்சம் செலவிலும் புதிய கழிவறைகள் அமைத்தல் மற்றும் கழிவறை பராமரிப்புக்காக 65 பணிகள் ரூ.117.90 இலட்சம் செலவிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மகாமகம் திருவிழாவினையொட்டி நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வரும் பொதுமக்களுக்கு வசதியாக திருச்சி, திண்டுக்கல், சேலம், கோவை, வேலூர், ஈரோடு, புதுக்கோட்டை, காரைக்குடி, விழுப்புரம் ஆகிய போக்குவரத்துக் கழகங்களின் மூலம் 2,000த்திற்கு மேற்பட்ட பேருந்துகளை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



கும்பகோணம் நகரில் பொதுமக்களின் வசதிக்காக 9 இடங்களில் தற்காலிகப் பேருந்து நிலையங்களை அமைக்க திட்டமிடப் பட்டுள்ளது. மகாமகம் திருவிழாவிற்கு வருகை தரும் பக்தர்களுக்கு பாதுகாப்பு மற்றும் வழிகாட்டுதல் பணிகளை மேற்கொண்டுள்ள காவல்துறை மற்றும் பல்வேறு துறைகள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மகாமகம் திருவிழா பாதுகாப்புப் பணியில் 22,000க்கும் மேற்பட்ட காவலர்கள் பணியமர்த்தப்பட வுள்ளார்கள்.

இந்தப் பாதுகாப்புப் பணிகளை முறைப்படுத்த ஐந்து காவல்துறை கண்காணிப்பாளர்கள் மூன்று கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர்கள், 8 துணை காவல்துறை கண்காணிப்பாளர்கள், 13 ஆய்வாளர்கள் உட்பட 29 காவல்துறை அதிகாரிகளை சிறப்பு அதிகாரிகளாக நியமித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஏற்கெனவே குடந்தை நகரில் காவல்துறை துணைகண்காணிப்பாளர், ஆய்வாளர், சார் ஆய்வாளர்களாகப் பணியாற்றி பதவி உயர்வு பெற்றவர்களை இந்தப் பணியில் ஈடுபடுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

தஞ்சை, திருச்சி, நாகை, திருவாரூர், நெல்லை, தூத்துக்குடி, மதுரை, புதுக்கோட்டை, கரூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து காவலர்கள் வரவழைக்கப்பட்டு இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள். இத்தகைய பாதுகாப்புப் பணிக்கு வரும் காவலர்கள் மற்றும் அதிகாரிகள் தங்குவதற்காக 136 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு தேவையான அடிப்படை வசதிகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மகாமகப் பணிகள் பாதுகாப்பு உட்பட பல்வேறு பணிகள் குறித்து திட்டங்களை கணினி மூலம் தயாரிக்க குடந்தை நகர கிழக்கு காவல்நிலையத்தில் தனி அலுவலகம் அமைக்கப்பட்டு அதற்கான திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

மகாமகம் திருவிழாவையொட்டி மொத்தம் ரூ.2.63 கோடியில் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளது. இவ்விழாவினையொட்டி 100 படுக்கைகள் கொண்ட தற்காலிக மருத்துவமனை அமைத்திட வகை செய்யப் பட்டுள்ளது.

600 மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருந்தாளுநர்கள் மருத்துவமனையில் ஈடுபடுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு 24 மணிநேரமும் இவர்கள் பணியாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 250 அவசர கால மருத்துவ ஊர்திகள் (ஆம்புலன்ஸ்) தயார்நிலையில் வைக்கப்படவுள்ளது.

பொதுமக்களின் சுகாதார வசதியை கருத்தில் கொண்டு 500 இடங்களில் கழிவறை வசதி செய்து தரப்படவுள்ளது.

மகாமகம் திருவிழாவையொட்டி அமைக்கப் படவுள்ள 9 தற்காலிகப் பேருந்து நிலையங்களில் மருத்துவ உதவி மையங்களும், மகாமகம் குளத்தை சுற்றி 13 உதவி மையங்களும் அமைக்கப்படும்.

மருத்துவத் துறைக்கு சுமார் 1 கோடி ரூபாய் மதிப்பில் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், தஞ்சை, திருச்சி, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவக் குழுக்களைத் தயார் நிலையில் வைத்திடவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவக் குழுவில் சிறப்பு மருத்துவ நிபுணர்கள் இடம் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

மகாமகம் திருவிழாவையொட்டி வருகைத்தரும் இலட்சக்கணக்கான மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் நியாயமான விலையில் தரமான உணவுப் பொருட்களை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குடந்தை மாநகரில் உள்ள பல்வேறு உணவகங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உணவு

தயாரிக்கும் இடம், சூழல் ஆகியவை பரிசோதிக்கப்பட்டு மேற்பார்வையிடப் பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்பின் உரிமை பெற்றவர்கள் மட்டுமே உணவு மற்றும் தேநீர் நிறுவனங்கள் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

கும்பகோணம் நகரத்தில் உள்ள அனைத்து உணவகத்தின் உரிமையாளர்களும் நகராட்சியில் உரிய உரிமம் பெறுமாறும் உணவுப் பொருட்களைத் தரமாகவும், சுகாதார முறையிலும் தயாரிக்குமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளார்கள்.

குடந்தை நகரிலும் குடந்தையைச் சுற்றியுள்ள கும்பகோணம் திருவிடைமருதூர், திக்குனந்தார், பாபநாசம், அம்மாபேட்டை, வலங்கைமான் ஊராட்சி பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் பழுதுகள் ஏற்பட்டால் உடன் சீர் செய்ய ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் உடன் நடவடிக்கை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இப்பகுதியில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகளில் நாள்தோறும் குளோரினேசன் செய்திட ஊராட்சித் தலைவர்களுக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.





மகாமகம் திருவிழாவையொட்டி செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் கும்பகோணத்தில் பிப்ரவரி 15ஆம் தேதி முதல் மார்ச் மாதம் 15ஆம் தேதி வரை ஒரு மாத காலத்திற்கு சிறப்பான பொருட்காட்சி நடத்தப்படவுள்ளது. மகாமகம் திருவிழாவையொட்டி திருவிழா நடைபெறும் தருணத்தில் தங்கு தடையின்றி மின்சாரம் வழங்குவதற்கான பணிகளை செயல்படுத்த சுமார் 2 கோடியே 19 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 60 மின்மாற்றிகளை (டிரான்ஸ் பார்மர்) திட்டமிட்டு இதுவரை 42 டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள பணிகளைத் துரிதமாக முடிக்கவும், சாக்கோட்டை தாராசுரம் திருநாகேசுவரம் ஆகிய இடங்களில் துணை மின் நிலையங்களில் கூடுதலாக டிரான்ஸ் பார்மர்களை நிறுவவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை பூக்கின்ற குறிஞ்சி மலர் புகழ்மிக்கதாகும். அதைப்போன்று பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை குடந்தை மாநகரில் சீருடன் சிறப்புடன் நிகழும் மகாமகம் திருவிழா உலக மக்களின் கவனத்தை ஈர்த்து உள்ளத்தை மகிழ்விக்கும் பெரு விழாவாகும். இதனைக் கருத்தில் கொண்டு அனைத்து ஏற்பாடுகளும் சீருடனும் செம்மையாகவும் செயல்படுத்தப்படுகின்றது.

குடந்தை நகர மக்கள் பயன்பெறும் வகையில் 50 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் முதல் கட்டப் பணிகளை மகாமகம் திருவிழாவிற்கு முன்னர் முடிக்கும் வகையில் நிருவாக இயந்திரம் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

குடந்தை மாநகரில் குவிந்திடும் குப்பைகளை அப்புறப்படுத்தி நகரின் தூய்மையைக் காத்திட 70 ஊர்திகளும் 400க்கும் மேற்பட்ட சுத்திகரிப்பு ஊழியர்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.



# அனைவருக்கும் ஊட்டச்சத்துக் கல்வி

### நோக்கம்

தமிழகத்தை ஊட்டச்சத்துப் பற்றாக் குறையில்லாத மாநிலமாக்க மக்களிடையே நல்ல உணவுப் பழக்க வழக்கத்தைக் கொண்டு வரும் வகையில் ஊட்டச்சத்துக் குறித்து விழிப்புணர்வை உருவாக்குதல்.

ஊட்டச்சத்து நிலை மேம்பாடடைய மக்களிடையே ஊட்டச்சத்துக் கல்வியின் அவசியத்தை உணரச் செய்தல்.

### உத்திகள்

மக்களின், குறிப்பாக எளிதில் பாதிப்புக்கு ஆட்படுவோரின் ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்தும் உத்தியானது பின்வருவனவற்றை உள்ளடக்கியது.

- பல்வேறு திட்ட மேலாளர் களிடையே ஊட்டச்சத்துக் குறித்து ஆதரவு மனப்பான்மையைத் திரட்டுதல்.
- மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்குதல்.
- பல்வேறு நிலைப் பணியாளர்களின் செயல்திறனை மேம்படுத்துதல்.

### பங்கேற்பாளர்கள்

மாநில மற்றும் மத்திய அரசின் மனிதவள மேம்பாடு, சுகாதாரம், ஊரக வளர்ச்சி மற்றும் கள விளம்பரத் துறைகள்.

மனையியல் கல்லூரிகளின் ஊட்டச்சத்து வல்லுநர்கள்.

மருத்துவக் கல்லூரிகளின் நோய்த் தடுப்பு மற்றும் குழந்தை சிகிச்சைப் பிரிவு பேராசிரியர்கள்.

ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் சார்ந்த தேசிய அளவிலான நிறுவனங்கள்.

பன்னாட்டுச் சேவை அமைப்புகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்.

### பிறந்த குழந்தையின் ஊட்டச்சத்துக்கான கல்வி

- **குழந்தை பிறந்த உடனே தாய்ப்பாலூட்டுதல்**

தாய்ப்பால் நன்கு சுரக்க சீம்பால் ஊட்டவும். நோய் எதிர்ப்பு சக்தியும் உயிர்ச்சத்தும் நிறைந்தது சீம்பால். சாதாரண பிரசவங்களில் அரைமணி நேரத்திற்குள்ளாகவும் அறுவை சிகிச்சை பிரசவங்களில் 4 இல் இருந்து 6 மணி நேரத்திற்குள்ளாகவும் தாய்ப் பாலூட்டத் தொடங்க வேண்டும்.

- **6 மாதம் வரை தாய்ப்பால் மட்டுமே ஊட்டுதல்**

வயிற்றுப் போக்கு, சுவாச மண்டல நோய் போன்ற தொற்றுகளைத் தவிர்ப்பதற்கு தாய்ப்பால் அவசியம். இதனால் சிசு மரணம் குறையும்.

- **2 வயது வரை தாய்ப்பாலைத் தொடர்ந்து கொடுத்தல்**

தரமான புரதம், உயிர்ச்சத்து, "ஏ'' போன்ற தாய்ப்பாலின் அனைத்து நன்மைகளும் தாய்ப்பால் ஊட்டுவதன் மூலம்

குழந்தைக்கு 2 வயது மற்றும் அதற்கு மேலும் கிடைக்கிறது.

### 6 மாதத்தில் துணை உணவைத் துவக்குதல்

- வளரும் குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்களைப் பெற 6ஆவது மாதத்திலிருந்து துணை உணவு தேவை.
- வறுத்து அரைத்த ஏதேனும் ஒரு தானியத்தின் மாவுடன் வெந்நீர் மற்றும் சர்க்கரை கலந்த உணவே குழந்தையின் முதல் துணை உணவு. 6 மாத வயது பூர்த்தியான அடுத்த நாளே இத் துணை உணவை ஊட்ட ஆரம்பிக்க வேண்டும். சமுதாயத்திலும் அங்கன்வாடி மையங்களிலும் இதை ஒரு விழாவாகவே நடத்தலாம்.
- மற்ற சத்துக்களுடன் இரும்புச்சத்து, உயிர்ச்சத்து "ஏ'' போலிக் அமிலம் போன்றவையும் நிறைந்துள்ள பச்சைக் காய்கறிகள் குழந்தைக்கு மிகவும் அவசியம். அவித்து நன்கு மசித்த கீரை, காய்கறிகளை வாரத்தில் 3 முதல் 5 நாள்களாவது ஊட்ட வேண்டும்.
- மா, வாழை, பப்பாளி போன்ற பழங்களை மசித்து ஊட்டுதல் வேண்டும்.
- வறுத்து அரைத்த தானியம் மற்றும் பருப்பு மாவு கலந்து தயாரித்த சத்து மாவினை வெந்நீர் அல்லது பால் கலந்து தேவையானபோதெல்லாம் ஊட்டலாம். இந்த மாவினை சுகாதார முறையில் தயாரித்து ஒரு மாத காலம் வரை இருப்பில் வைக்க முடியும்.
- குழந்தை தனது வளர்ச்சி வேகத்துக்கு ஈடுகட்டும் வகையில் அதிக உணவை உண்ண இயலாது. ஆகவே குழந்தை உண்ணும் சிறிய அளவிலான உணவைச் செறிவூட்டும் வகையில் ஒரு தேக்கரண்டி எண்ணெய், சர்க்கரை போன்றவற்றை அவ்வுணவில் சேர்த்து ஊட்ட வேண்டும். போதுமான துணை உணவு குழந்தைக்குக் கிடைப்பதை உறுதி செய்தல் மூலம் 6 மாதம் முதல் 2 வயது வரை ஏற்படும் ஊட்டச்சத்து பற்றாக் குறையைத் தவிர்க்கலாம்.

### வளர்ச்சியைக் கண்காணித்தல் மற்றும் மேம்படுத்துதல்

முறையாக மாதாமாதம் எடை எடுத்து எடை அட்டையில் குறித்தல் மூலமே குழந்தையின் வளர்ச்சியைக் கண்காணித்து மேம்படுத்த முடியும்.

### தன் சுத்தம்

உணவைத் தயாரிக்கும் போதும் குழந்தைக்கு உணவூட்டும் போதும் தன்சுத்தம் பேணுதல் அவசியம். இதன்மூலம் நோய்தொற்றைத் தவிர்க்கலாம்.

### குழந்தை உடல் நலமில்லாத போது உணவூட்டல்

நோயுறும் போது குழந்தை அதிக சக்தி இழப்புக்கு ஆளாகும். இழப்பை ஈடுசெய்யும் வகையில் தொடர்ந்து உணவூட்டுதல் அவசியம்.

### பள்ளிக்குழந்தைகளுக்கான ஊட்டச்சத்துக் கல்வி

- பள்ளி செல்லும் குழந்தைகளின் வளர்ச்சி வேகம் தொடர்ந்து அதிகரிக்கிறது.
- வளர்ச்சி வேகத்துக்கு வேண்டிய சத்துக்களின் தேவை அதிகரிப்பதுடன் கல்வியில் கவனம் செலுத்தும் வகையில் உழைக்க்வும் அதிக சக்தி தேவை.
- அவர்களது உடல் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் கூடுதல் கல்வி கற்கும் திறன் அதிகரிக்கவும் ஊட்டச்சத்து அத்தியாவசியமானது.
- பள்ளி செல்லும் குழந்தைகளின் கூடுதல் ஊட்டச்சத்துத் தேவையைப் புறக்கணிக்கும் பட்சத்தில் அது அவர்களது மனதை ஒருமைப்படுத்தும் திறனைப் பாதிப்பதுடன் பள்ளி செல்வதன் முழுப்பயனும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை.
- பள்ளிக் குழந்தைகள் வீட்டிலிருந்து எடுத்துவரும் மதிய உணவானது பொதுவாக அளவும் சத்தும் போதுமானதாக இல்லை.
- பள்ளிக் குழந்தைகளின் உணவில் சக்தி, புரதம், உயிர்ச்சத்து "ஏ'' இரும்புச்சத்து போன்ற அனைத்தும் குறைவாய் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதனை ஈடுசெய்யும் வகையில் உணவு கொடுக்க வேண்டும்.

### வளர் இளம் பருவத்தினருக்கான ஊட்டச்சத்துக் கல்வி

தினசரி உட்கொள்ளும் உணவு வேளைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், வறுத்த நிலக்கடலையுடன் நாட்டுச் சர்க்கரை, கொழுக்கட்டை, அவித்த சுண்டல், பழ வகைகள் போன்றவற்றை உணவுக்கு இடையே உட்கொள்ளச் செய்வதன் மூலம் பள்ளிப்பருவ மற்றும் வளர் இளம் பருவத்தினர் ஊட்டச்சத்துப் பெறுதலை அதிகரிக்கச் செய்யலாம்.

- வள்ர் இளம் பருவம் வாழ்க்கையின் மிக முக்கியப் பகுதியாகும். ஏனெனில் இப்பருவத்தில் தான் மனித வாழ்க்கையின் இரண்டாவதும் இறுதியானதுமான அதிவேக வளர்ச்சி நடைபெறுகிறது.
- குழந்தைப் பருவத்தில் ஏதேனும் ஊட்டச்சத்துக் குறைபாடு இருந்திருந்தால்கூட வளர் இளம் பருவத்தில் நிறைவு செய்ய அதிக வாய்ப்புகள் உள்ளன.

- வளர் இளம் பெண்கள் சராசரியாக உட்கொள்ளும் உணவில் கலோரி (சக்தி) பரிந்துரை செய்யப்படும் அளவைக் காட்டிலும் மிகக் குறைவாகவே உள்ளது.
- பெண் குழந்தைகளுக்குத் தேவையான அளவில் ஊட்டச் சத்துணவு, வளர் இளம் பெண்களுக்கு இரும்புச்சத்து மற்றும் கூடுதல் ஊட்டச் சத்துணவு கிடைப்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- வளர் இளம் பெண்களுக்கு குடும்ப வாழ்க்கைக் கல்வி, திறன் வளர் பயிற்சி, தாய்சேய் நலப்பயிற்சி, காய்கனி பதப் படுத்துதல் குறித்த பயிற்சியளித்தல் மூலமாகவே பரம்பரை பரம்பரையாக சுழன்று வரும் ஊட்டச்சத்துக் குறைபாட்டை வேரறுக்க முடியும்.
- பெண் கல்வியின் அவசியம், 19 வயதிற்குள்ளாகப் பெண் திருமணம் தவிர்த்தல் ஆகியவை குறித்து பெற்றோருக்கும் வளர் இளம் பெண்களுக்கும் ஆலோசனை வழங்குதலுடன் 21 வயது வரை முதல் கர்ப்பத்தைத் தவிர்ப்பதன் அவசியம் குறித்தும் கல்வியளித்தல்.

### கர்ப்பிணிப் பெண்களுக்கான ஊட்டச்சத்துக் கல்வி

- உண்ணும் உணவின் அளவை அதிகரித்தல் அவசியம்.
- அதிக அளவில் இரும்புச் சத்துக் கொண்ட முழு பருப்பு மற்றும் பயறு வகைகள், முளைக்கட்டிய தானியங்கள், கீரை வகைகள், சர்க்கரை, பேரீச்சம்பழம் போன்றவற்றை தினசரி உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- கர்ப்பகால ஆரம்பநிலையில் அதிக அளவு ஃபோலிக் அமிலம் தேவைப்படுவதால் அது நிறைந்துள்ள கீரை வகைகளை கர்ப்பகால ஆரம்பத்திலிருந்தே தினசரி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- தினசரி ஏதாவது ஒரு பழம் உட்கொள்ள வேண்டும்.
- பால்,தயிர், மோர், முட்டை, மீன் மாமிசம் போன்றவற்றை உணவில் சேர்த்தல் நல்லது.
- கருவிலுள்ள குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு அயோடின் சத்து அதிகம்



தேவைப்படுவதால் கர்ப்பிணிப் பெண் தன் உணவில் அயோடின் கலந்த உப்பையே பயன்படுத்த வேண்டும்.

- அதிக அளவில் தண்ணீர் மற்றும் திரவ உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.
- குறைவான அளவில், உணவை அதிக தடவைகள் சாப்பிட வேண்டும்.

### பாலூட்டும் தாய்மார்களுக்கான ஊட்டச்சத்துக் கல்வி

- தாய் கர்ப்ப காலத்தில் சாப்பிட்ட அளவைவிட, கூடுதலாகச் சாப்பிட வேண்டும்.
- பிறந்த குழந்தைக்குத் தேவையான தாய்ப்பால் சுரக்க தாய்க்கு தினமும் 550 கலோரி கூடுதல் சக்தி தேவைப்படுகிறது.
- உள்ளூரில் கிடைக்கும் விலை குறைந்த சத்தான பொருட்களைக் கொண்டு உணவு தயாரிக்கலாம்.
- குடும்ப நபர்களின் அன்பான அணுகுமுறை தாய், சேய் இருவரின் ஆரோக்கியத்திற்கும் பெரிதும் உதவிகரமாக அமையும்.
- அன்றாட உணவில் அதிக அளவில் தானியம் மற்றும் பருப்பு வகைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- அன்றாடம் காய்கறி உணவுடன் ஏதாவதொரு பழத்தை உட்கொள்ளவேண்டும்.
- பால், மோர் மற்றும் திரவ உணவுகளுடன் போதிய அளவு தண்ணீர் குடிக்க வேண்டும்.
- முட்டை, மீன், இறைச்சி போன்றவற்றையும் உண்ணலாம்.
- மிகுந்த சக்தி நிறைந்த உணவுகளான நெய், எண்ணெய் மற்றும் சர்க்கரை ஆகியவை பாலூட்டும் தாய்மார்களுக்குத் தேவை.
- வீட்டிலேயே தயாரித்த பொரி விளங்காய் உருண்டை மிகவும் நல்லது.

### ஓய்வு

- மிதமான ஓய்வும் மன அமைதியும் பாலூட்டும் தாய்மார்களுக்குத் தேவை.
- நல்ல மனநிறைவுடன் பதற்றமின்றி தாய் பாலூட்டுவதால் பால் சுரப்பு அதிகமாகும்.

### இரும்புச் சத்து மாத்திரை

- தாய்ப் பாலூட்டும் காலத்தில், முதல் ஆறு மாதங்களுக்கு தினமும் இரும்புச் சத்து மாத்திரை உட்கொள்ள வேண்டும்.

### தாய்ப்பாலூட்டல்

- பிறந்த உடன் குழந்தைக்கு, சீம்பால் தர வேண்டும். தாய், குழந்தைக்கு பாலூட்டுவதால், அதிக இரத்தப் போக்கு மற்றும் இரத்தச் சோகை போன்றவற்றைத் தவிர்க்கலாம்.
- குழந்தைக்கு முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே முதல் உணவு.
- தாய்ப்பால் மட்டுமே ஊட்டுவதால் தாயின் நோய் எதிர்ப்புத் தன்மை அதிகரிக்கும். தாய் அடுத்து கர்ப்பம் தரிப்பது தள்ளிப் போகும். மேலும் நீரிழிவு நோய் உள்ள தாய்க்கு இன்சுலின் தேவை குறையும்.
- தாய்ப்பால் ஊட்டும் தாய்க்கு, மார்பகப் புற்றுநோய், கர்ப்பப்பை புற்றுநோய் மற்றும் எலும்பு முறிவு நோய்கள் வராமல் தடுத்து பாதுகாப்பை அளிக்கிறது.

### வயதானோர்க்கு ஏற்படும் உணவு தொடர்பான வியாதிகளைத் தவிர்க்க ஆரோக்கிய உணவுக் கல்வி

- முழுமையாகத் தீட்டப்பட்ட தானியங்கள் அதிக சத்து நிறைந்தவை.
- இரும்புச் சத்து, உயிர்சத்து "ஏ" ஃபோலிக் அமில குறைபாடுகளைத் தவிர்க்க அந்தந்த பருவ காலங்களில் விளையும் காய்கறிகளையும் தினசரி ஏதாவது ஒரு பழத்தையும் உண்ண வேண்டும்.
- பச்சைக் கீரை, காய்கறிகளும், பழங்களும் உயிர்ச்சத்துக்கள், தாது உப்புக்கள், நார்ச்சத்து ஆகியவற்றை அதிகம் கொண்டுள்ளன. குழந்தை முதல் அனைத்து வயதினருக்கும் இவை அத்தியாவசியமாகும்.
- அங்கன்வாடி மையத்தில் வீட்டைச் சுற்றி, பள்ளி வளாகத்தில் வீட்டுத் தோட்டம் மற்றும் சமுதாய ஊட்டச்சத்துத் தோட்டம் அமைப்பதன் மூலம் காய்கறிகளையும், பழங்களையும் அதிகம் உற்பத்தி செய்யலாம்.
- மிதமான அளவில் பருப்பு வகைகள், கொட்டை வகைகள், பால் பொருட்கள், உடல் கட்டமைப்புக்கு உதவும் கொழுப்புப் பொருட்கள், நெய், சுத்திகரிக்கப்பட்ட தாவர எண்ணெய் ஆகியவையும் ஆரோக்கியத்திற்கு உகந்தவை.
- தொற்றுநோய், உடலில் ஊட்டச்சத்து இழப்புக்கு வழிவகுக்கும். தன் சுத்தம் மற்றும் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களைக் கடைப்பிடித்து சுற்றுப்புறத்தை சுகாதாரமாக வைத்துக் கொள்வதன் மூலம் தொற்றுநோய்கள் வராமல் தவிர்க்கலாம்.

### 60 வயதிற்கு மேற்பட்டோருக்கான ஊட்டச்சத்துக் கல்வி

- முட்டை, மாமிசம், பால் ஆகியவை குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு நல்லது. ஆயினும் வயது வந்தவர்களும், முதியோர்களும் மிதமான அளவில் சாப்பிடலாம்.
- காய்கறிகளும் தினசரி ஒரு பழமும் உட்கொள்வதன் மூலம் இரும்புச்சத்து, உயிர்ச் சத்துக்கள் "ஏ" மற்றும் "சி" ஃபோலிக் அமிலக் குறை பாடுகளைத் தவிர்க்கலாம்.
- காய்கறி, கீரைகள் மற்றும் பழங்களும் உயிர்ச்சத்து மற்றும் தாது உப்புக்கள் நிறைந்தவை.
- எண்ணெய், நெய், வெண்ணெய், சர்க்கரை ஆகியவை குழந்தைகளுக்கும் கடின உழைப்பாளிகளுக்கும் மிக முக்கியம். ஆனால் வயதானோர் இந்தப் பொருள்களை உட்கொள்வதில் கட்டுப்பாடு தேவை.
- நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இதய நோய் தவிர புற்றுநோய் கூட வராமல் தடுக்க நார்ச்சத்து நிறைந்த உணவுப் பொருள்களை உட்கொள்ள வேண்டும்.
- அதிக உடல் பருமன் என்பது ஒரு மனிதனுக்கு நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இதய சம்பந்தமான மற்றும் மாரடைப்பு போன்ற நோய்கள் ஏற்பட வழிவகுக்கும்.
- முதியவர்களுக்கு குறைந்த அளவிலான உணவு அதிக தடவை தேவைப்படுகிறது. வயதான காலத்தில் ஆரோக்கியமாய்த் திகழ பால், பால்சார்ந்த பொருள்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவை அவசியமாகும். ஆனால் கொழுப்புச் சத்து நிறைந்த பொரித்த, மசாலா கலந்த உணவுப் பொருள்களைத் தவிர்த்தல் வேண்டும்.

*திட்ட ஒருங்கிணைப்பாளர்*
*உலக வங்கி உதவிபெறும்*
*ஒருங்கிணைந்த*
*குழந்தை வளர்ச்சிப் பணிகள்*
*(தொடர்புப் பிரிவு)*
*தரமணி, சென்னை – 600 113.*

* * *

# ஊனமுற்றோருக்கான அரசு சலுகைகள்

உடலில் ஊனம் இருந்தாலும், உள்ளத்தில் ஊனமின்றி உழைத்து தம் வாழ்க்கையை உயர்த்திக் கொண்டவர்கள் எத்தனையோ பேர். ஊனமுற்றவர்களுக்கு அரசும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் பல்வேறு சலுகைகளை வழங்கி வருகின்றன. ஊனமுற்றவர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் அளிக்கும் சலுகைகள் பற்றிய ஒரு பார்வை :–

**யார், யாருக்கு சலுகைகள்?**

பார்வையற்றோர் (முழுமையாகவும் குறைந்த அளவிலும் பார்வையற்றவர்கள்), காது கேளாதோர் (காது கேளாதோர் மற்றும் வாய் பேச முடியாதோர், காது கேளாதோர்), கை, கால் ஊனமுற்றோர் (போலியோவால் பாதிக்கப்பட்டவர், விபத்தினால் உறுப்புகளை இழந்தோர், 3 அடிக்கு குறைவான உயரம் உள்ளவர்கள், மூளை வாதத்தால் பாதிக்கப்பட்டோர், தொழுநோயால் பாதிக்கப்பட்டு உறுப்புகளை இழந்தோர்) மனநலம் குன்றியவர்கள் என பல்வேறு பிரிவுகளாக ஊனமுற்றோர் பிரிக்கப்படுகின்றனர். இவர்களில் 40 சதவிகித ஊனத்துக்கு மேல் உள்ளவர்கள் சலுகை பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

சென்னை அண்ணா நகரில் உள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகத்தில், சென்னை மாநகராட்சிக்கு உள்பட்ட அனைத்துப் பிரிவுகளைச் சேர்ந்த ஊனமுற்றவர்களும் பதிவு செய்து கொள்ளலாம்.

அதுபோல, பெரம்பலூர், திருவாரூர், தருமபுரி, நாமக்கல், விழுப்புரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, தேனி, கரூர் ஆகிய 15 மாவட்டங்களைச் சேர்ந்த பார்வையற்றவர்கள், காது கேளாதோர் ஆகியோரும் சென்னை அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.



காஞ்சிபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, ஈரோடு, மதுரை, திருச்சி, கோவை, தஞ்சை, சேலம், நீலகிரி, வேலூர், கடலூர், நாகர்கோவில் ஆகிய 13 மாவட்டங்களைச் சேர்ந்தோர் தொடர்புடைய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள சிறப்புப் பிரிவுகளில் பதிவு செய்யலாம்.

**சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பின்வரும் பயன்களைப் பெறலாம் :-**

- கல்வித் தகுதியைப் பதிவு செய்து கொள்ளலாம்.
- தொழில் நுட்பம் தொடர்பான ஆலோசனைகளைப் பெறலாம்.
- மத்திய, மாநில அரசுத் துறைகளில் வழங்கப்படும் 3 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கான பரிந்துரைகளைப் பெறலாம்.
- தனியார்த் துறை வேலைவாய்ப்புகளுக்கும் பரிந்துரை பெறலாம்.

* தொண்டு நிறுவனங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களில் அளிக்கப்படும் தொழிற் பயிற்சிகள் மற்றும் இதர உதவிகள் பெற ஆலோசனை பெறலாம்.

* சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், மானியத்துடன் கூடிய கடன் பெற உதவி கோரலாம்.

* ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலகம் மூலம் அளிக்கப்படும் அரசின் நலத் திட்ட உதவிகளைப் பெறவும் ஆலோசனை பெறலாம்.

**அரசு வழங்கும் சலுகைகள்**

**கல்வி**

* கல்வி நிறுவனங்களில் 3 சதவிகித இட ஒதுக்கீடு.

* கல்விச் சேர்க்கையில் 5 ஆண்டுகள் வயது வரம்புச் சலுகை.

* கல்வி உதவித் தொகை.

* அரசு சிறப்புப் பள்ளிகள் மூலம் உணவு விடுதியுடன் கூடிய இலவசக் கல்வி.

* பார்வையற்றோருக்கு அரசுத்தேர்வுக் கட்டணத்தில் சலுகையுடன் இலவசப் பிரெய்லி புத்தகம் மற்றும் உதவியாளர்கள் உதவியுடன் தேர்வு எழுத வசதி.

**வேலைவாய்ப்பு**

* மத்திய, மாநில அரசுப் பணிகளில் 3 சதவிகித இட ஒதுக்கீடு.

* அரசுப் பணிகளுக்கான வயது வரம்பில் 10 ஆண்டுகள் வரை சலுகை.

* உடல் ஊனமுற்ற பணியாளர்களுக்கு அரசுப் பணிக் காலியிடங்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் பரிந்துரை.

* வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பரிந்துரைக்கப்படும்போது 25 சதவிகித மனுதாரர்கள் பரிந்துரை.

* பார்வையற்ற, காதுகேளாத, மனவளர்ச்சி குன்றியவர்களுக்குப் பதிவு புதுப்பித்தலில் இருந்து விலக்கு.

* ஆசிரியர் பணியிடங்களில் பார்வையற்றவர்களுக்கு 2 சதவிகித இடஒதுக்கீடு. அதுபோல ஆசிரியர் அல்லாத பணிகளுக்கு காதுகேளாதோருக்கு 2 சதவிகித ஒதுக்கீடு.

**பார்வையற்றோருக்கு நிவாரணம்**

* பார்வையற்ற வேலை வாய்ப்பு இல்லாதோருக்கு நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, ஓராண்டுக்கு மேல் காத்திருப்போர் இதற்குத் தகுதியுடையவராவர். கல்வித் தகுதிக்கு ஏற்ப 5 ஆண்டுகள் வரை நிவாரணத்தொகை அளிக்கப்படும்.

* 10–ஆம் வகுப்பு முடித்தவர்களும் மாதம் ரூ.200/–ம், பிளஸ் டூ முடித்தவர்களுக்கு மாதம் ரூ.250ம் பட்டப் படிப்பு, முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்கு மாதம் ரூ.300ம் அளிக்கப் படுகிறது. இத்தொகை பெற வயது வரம்பு பொதுப்பிரிவினருக்கு 40 தாழ்த்தப் பட்டோர் மற்றும் பழங்குடியின பிரிவினருக்கு 45. இத்தொகையைப் பெற, பதிவு செய்துள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகலாம்.

**மறுவாழ்வு அலுவலகங்கள் அளிக்கும் சலுகைகள்**

* ஊனமுற்றோருக்கான அடையாள அட்டை பெறலாம்.

* மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, ஊன்றுகோல், தோள்தாங்கி ஆகிய உபகரணங்களை இலவசமாகப் பெறலாம்.

* காதுகேளாதோர் காது ஒலிக்கருவி பெறலாம்.

* பார்வையற்றோர் எனில் கறுப்புக் கண்ணாடி, மடக்கு ஊன்றுகோல், பிரெய்லி கைக்கடிகாரம் ஆகியவை பெறலாம்.

**கல்வி உதவித்தொகை**

ஒன்றாம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை படிப்போருக்கு ரூ.250 வழங்கப்படும். ஆறாம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கு ரூ.750ம், 9–ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படிப்போருக்கு ரூ.1,100 அளிக்கப்படும். பட்டப் படிப்புக்கு ரூ.1,500–ம் முதுநிலைப் படிப்புக்கு ரூ.1,950ம் பெறலாம்.

**இலவசப் பேருந்துப் பயணச் சலுகை**

* அரசுப் பேருந்துகளில் பார்வையற்றவர்கள் 100 கிலோ மீட்டர் வரை இலவசமாகப் பயணம் செய்ய சலுகை.

* மனநலம் குன்றியவர்கள் பாதுகாவலருடன் இலவசமாக பயணம் செய்யலாம்.

* காது கேளாத, கை, கால் ஊனமுற்ற நிலையில் பள்ளி, கல்லூரியில் படிப்பவர்கள், தொழிற் பயிற்சி பெறுபவர்கள், பணிக்குச் செல்வோர், மருத்துவச்

சிகிச்சைக்குச் செல்பவர்கள் ஆகியோருக்கு பேருந்து பயணச் சலுகை அளிக்கப்படுகிறது. அதுபோல, ஆண்டுக்கு ஒரு முறை அரசு விரைவுப் பேருந்து மாநிலத்துக்குள் உள்ள சொந்த ஊருக்குச் செல்லவும் சலுகை வழங்கப்படுகிறது.

**திருமண உதவி**

* நல்ல நிலையில் உள்ளவர்கள் உடல் ஊனமுற்றோரைத் திருமணம் செய்தால் ரூ.10 ஆயிரம் உதவித்தொகை (ரொக்கமாக ரூ.3 ஆயிரம், தேசிய சிறுசேமிப்பு பத்திரமாக ரூ.7 ஆயிரம்) அளிக்கப்படும்.

**சட்டம் பயின்றவர்களுக்கு**

* சட்டக் கல்வி முடித்து வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்து கொள்ளவும் சட்டப் புத்தகங்கள் வாங்கவும் ரூ.3 ஆயிரம் உதவித் தொகை.

**மருத்துவ உதவி**

* போலியோவால் பாதிக்கப்பட்டோருக்கு முடநீக்கு அறுவை சிகிச்சை, பிசியோதெரபி பயிற்சி, கை, கால் இழந்தோருக்கு செயற்கை உறுப்புகள் அளிக்கப்படும்.

**பராமரிப்பு உதவித்தொகை**

* கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஊனமுற்றோருக்கு பராமரிப்பு உதவித் தொகையாக மாதம் ரூ.200 அளிக்கப்படுகிறது.

**மானியத் தொகை**

* சுயதொழில் செய்ய விரும்புவோர் வங்கிக் கடன் பெற ரூ.2,000 வரை மானியம் அளிக்கப்படுகிறது.
* சென்னை கிண்டியில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் படித்த காது கேளாதோர் மற்றும் பூந்தமல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றோர் சிறப்புத் தொழில் பழகுநர் பயிற்சி (Special Apprenticeship) பெற ரூ.500 உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

**வீட்டு வசதி**

* மாநில அரசின் வீட்டு வசதி வாரிய வீடு ஒதுக்கீட்டில் தனி ஒதுக்கீடு.

**மத்திய அரசு வழங்கும் சலுகைகள்**

* ஊனமுற்றோருக்கும் அவருக்கு உதவியாகச் செல்வோருக்கும் ரயில் பயணங்களில் கட்டணச் சலுகை.
* பொது தொலைபேசி மையம் அமைக்க அனுமதி வழங்குவதில் முன்னுரிமை.



* மொத்த வருமானத்தில் ரூ.50,000 வருமான வரிச் சலுகை.
* தொழில் வரி செலுத்துவதில் இருந்து விலக்கு.
* பணியில் உள்ள ஊழியர்களுக்கு போக்குவரத்துப் படி.
* பெட்ரோல், டீசல், எரிவாயு, விநியோக உரிமங்கள் வழங்குவதில் சிறப்பு ஒதுக்கீடு.
* அரசு நலத்திட்ட உதவிகளில் 3 சதவிகிதம் ஒதுக்கீடு.
* போட்டித் தேர்வுகளில் கட்டணச் சலுகை.
* உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம் சென்னையில் இயங்கி வருகிறது. இது தவிர, முக்கிய மாவட்டத் தலைநகரங்களிலும் ஊனமுற்றோருக்கான சிறப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

– சென்னை அலுவலக முகவரி
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம்,
சி–48, 2–வது அவென்யூ,
அண்ணா நகர்,
சென்னை – 600 040.
தொலைபேசி : 044 – 26213433

* * *

# போலியோ நோயை அறவே ஒழிக்க அரசு சீரிய நடவடிக்கை



மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் மற்றும் நோய்த் தடுப்புப் பணிகளை செயல்படுத்துவதில் தமிழக அரசு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டில் தாய்சேய் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்துள்ளார்கள். மேலும் முதலமைச்சரின் 18 அம்ச திட்டத்தில் தடுப்பூசித் திட்டத்தையும் ஒரு அங்கமாக இணைத்து முக்கியத்துவம் அளித்துள்ளார்கள்.

குழந்தைகளை அச்சுறுத்தும் கொடிய உயிர்க் கொல்லி நோய்களான தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இரண ஜன்னி, காசநோய், தட்டம்மை, போலியோ ஆகியவைகளுக்கு எதிராக தமிழக அரசு பலவகையான தடுப்பு மருந்துகளை இலவசமாக வழங்கி வருகிறது. இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 12 இலட்சம் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளும் 13 இலட்சம் கருவுற்ற தாய்மார்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றனா். குறிப்பாக தமிழக அரசு எடுத்துவரும் தீவிர நடவடிக்கையினால் போலியோ நோய் தமிழ்நாட்டில் வெகுவாகக் குறைக்கப்பட்டு விட்டது. இருந்த போதிலும் அண்டை மாநிலங்களான கர்நாடகா மற்றும் ஆந்திராவில் அதிக அளவில் குழந்தைகள் பாதிக்கப் பட்டுள்ளனா். தமிழ்நாட்டிலும் கூட திருச்சியில் நாடோடி வகுப்பைச் சேர்ந்த ஒரு குழந்தை பாதிக்கப்பட்டிருக்கிறது. போலியோவை உண்டாக்கும் வைரஸ் தமிழ்நாட்டிற்குள் ஊடுருவியிருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது. எனவே போலியோ நோயை அறவே ஒழிக்க தமிழக அரசு இந்த ஆண்டும் இரண்டு சுற்றுகள் போலியோ சிறப்பு முகாம்கள் நடத்தத் தீர்மானித்துள்ளது. அதன்படி கடந்த ஜனவரி4 ஆம் தேதி முதல் சுற்று சிறப்பு முகாம் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்டது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறைஅமைச்சா் ந.தளவாய்சுந்தரம் அவர்கள் எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் 4 ஆம் தேதி காலை 7 மணியளவில் குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து கொடுத்து முகாமைத் தொடங்கி வைத்தார்கள். அவ்வமையம் மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத்துறை செயலாளர் திருமதி ஷீலா ராணி சுங்கத், இ.ஆ.ப.,

மற்றும் பொதுசுகாதாரத் துறை இயக்குநர் திரு.ப. கிருஷ்ணமூர்த்தி, ஆகியோரும் கலந்து கொண்டு விழாவை சிறப்புறச் செய்தார்கள். ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவர்களும் பெருவாரியாக விழாவில் பங்கேற்று பெருமை சேர்த்தனர்.போலியோ நோயை அறவே ஒழிப்பதற்கு தமிழக அரசு சிறப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

- ஜனவரி 4 ஆம் தேதி 40,400 சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு 5 வயதிற்குட்பட்ட சுமார் 73 இலட்சம் குழந்தைகளுக்குப் போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்டது.
- பொதுமக்களின் வசதிக்காக சொட்டு மருந்து மையங்கள் அவரவர் பகுதியிலேயே அரசு



மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள், பள்ளிக்கூடங்கள், தனியார் மருத்துவமனைகள் மற்றும் முக்கிய பொது இடங்களில் அமைக்கப்பட்டு எல்லாக் குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து இலவசமாகக் கொடுக்கப்பட்டது.
- சுமார் 50 க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் துறைகள் பொதுசுகாதாரத் துறையோடு இணைந்து செயல்பட்டு முகாம் வெற்றி பெற பாடுபட்டுள்ளனர்.
- 5000 க்கும் மேற்பட்ட வாகனங்கள் மருந்து விநியோகம் மற்றும் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட அரசு மற்றும் தன்னார்வ அமைப்புகளைச் சேர்ந்த பணியாளர்கள் குழந்தைகளைக் கூட்டி வந்து சொட்டுமருந்து வழங்கும் பணியில் ஈடுபட்டனர்.
- பஸ் நிலையம், ரயில்வே நிலையம், சுற்றுலாப் பகுதிகள் மற்றும் விமான நிலையங்களில் நடமாடும் குழுக்கள் அமைக்கப்பட்டு முகாம் நாளின்போது பயணம் மேற்கொள்ளும் எல்லாக் குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து வழங்கப்பட்டது.
- எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளில் வாழும் குழந்தைகளுக்கும் சிறப்புக் குழுக்கள் மூலம் போலியோ சொட்டு மருந்து அளிக்கப்பட்டது.
- சொட்டு மருந்து போடப்பட்ட எல்லாக் குழந்தை களுக்கும் இடது கை சுண்டு விரலில் அடையாள மை வைக்கப்பட்டது. முகாம் நடத்தப்படுவதன் அவசியம் பற்றியும் போலியோ சொட்டு மருந்தின் முக்கியத்துவம் குறித்தும் பொதுமக்களுக்கு கீழ்க்கண்ட அறிவுரைகள் வானொலி தொலைக் காட்சி மற்றும் பத்திரிகைகள் வாயிலாக வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.
- 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து அளிக்கப்படவேண்டும். இதுவே முகாமின் முக்கியக் குறிக்கோளாகும். ஒரு குழந்தைகூட விடுபடக்கூடாது. ஏதேனும் ஒரு குழந்தை விடுபட்டாலும் அந்தக் குழந்தைக்குப் போலியோ நோயினால் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது அல்லது அந்தக் குழந்தை மூலம் 'நோய்த் தொற்று' பிற குழந்தைகளுக்குப் பரவ வழி ஏற்பட்டுவிடும்.
- சொட்டுமருந்து எத்தனை முறைகள் வேண்டு மானாலும் கொடுக்கலாம். அரசு தரும் சொட்டு மருந்து தரமானது மற்றும் பாதுகாப்பானது.
- போலியோ என்ற வைரஸ் நுண்கிருமிகளால் குழந்தைகள் பாதிக்கப்படும்போது அவர்கள் கை, கால்கள் நிரந்தரமாக ஊனமாக்கப் படுகின்றன. போலியோ நுண்கிருமிகள் அசுத்தமான தண்ணீர் மற்றும் உணவுப் பொருட்கள் மூலம் குழந்தை களிடையே பரவுகின்றன. மேலும் எந்த ஒரு ஊனமடைந்த குழந்தைக்கும் அறுவை சிகிச்சை செய்தாலும் முற்றிலும் குணமாக்க இயலாது. அதற்கான செலவும் அதிகமாகும். ஆகவே போலியோ நோய் வராமல் தடுப்பது முக்கியமாகும். அதற்கு ஒரே வழி ஆண்டுதோறும் அரசு மூலம் நடத்தப்படும் பல்ஸ் போலியோ முகாம்களில், 5 வயதிற்குட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே சமயத்தில் கூடுதல் தவணைகள் சொட்டு மருந்து கொடுப்பதே ஆகும்.
- சென்ற 4–ஆம் தேதி சொட்டு மருந்து கொடுக்கப்பட்ட அனைத்து 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் மற்றும் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கும் வரும் பிப்ரவரி 22ஆம் தேதி தவறாமல் மீண்டும் ஒரு தவணை கூடுதல் சொட்டு மருந்து கொடுக்கப்படவேண்டும்.
- பெற்றோர்களும் பொதுமக்களும் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி, அரசுடன் ஒத்துழைத்து போலியோ நோயை அறவே ஒழிக்க உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து*

# மரபு சாரா எரிசக்தி உற்பத்தியில் கோவை மாவட்ட ஊராட்சிகள்

ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீது, 2003 – 2004 சட்டமன்ற நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பேசும்போது,

"Renewable energy derived from the sun, wind and Biomass etc., is not only a clean source of energy but is most suitable for meeting the energy of rural areas, using locally available resources"

என்று கூறினார்கள்.

அதனடிப்படையில், ஊரக வளர்ச்சித் துறைச் செயலர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களின் உத்தரவின் பேரில் மரபு சாரா எரிசக்தி திட்டத்தின் கீழ், ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு 16.7.2003 அன்று ஒரு நாள் பயிலரங்கம் தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணைந்து நடத்தப்பட்டது. அதில் மரபு சாரா எரிசக்தி திட்டத்தின் பயன்பாடுகள் குறித்தும் ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

சூரிய ஒளி தெரு விளக்குகள், பயோமாஸ் கேஸ்ஸி ஃபயர், எரோஜெனரேட்டர், காற்றாலை மூலம் நீர் இறைத்தல், மனிதக் கழிவுடன் இணைத்து சாண எரிவாயுக் கலன் அமைத்தல் ஆகியவை பற்றியும் பயிலரங்கம் முடிவில் விரிவாக திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு கோவை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம், சென்னைக்கு அனுப்பப்பட்டது.

அதன் அடிப்படையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் முழு பங்கீட்டுடன் Ankur Scientific நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட, பயோமாஸ் கேஸ்ஸிஃபயர் கேஸ் – 9 கருவி காரமடை வட்டாரம், ஓடந்துறை ஊராட்சியில் 31.10.2003 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்தக் கருவியின் விலை ரூ.3.10 இலட்சம் ஆகும். இதில் மானியம் ரூ.1.35 இலட்சம்.

இது மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களால் இயக்கப்பட்டு வருகிறது. முற்றிலும் மரக்கழிவுகள் உபயோகித்து உற்பத்தி செய்யப்படும் மின்சக்தி, ஊராட்சிக்கு வழங்கப்படுகிறது. மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வசதி பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.





இந்த மின் சக்தி, நரிப்பள்ளம் நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திற்கு ஆற்றிலிருந்து நீர் ஏற்ற உள்ள 10.5 திறன் கொண்ட மின் மோட்டாரை இயக்குவதற்கும், சுத்திகரிப்பு செய்யப்பட்ட நீரினை ஓடந்துறை ஊராட்சியில் உள்ள 9 கிராமங்களுக்குக் குடிநீர் பம்ப் செய்யவும் பயன்படுத்தப்படுகிறது.

நடைமுறையில் உள்ள செலவில் 65%ஐ 100% பயோமாஸ் கேஸ்ஸிஃபயர் கருவி மூலம் சேமிப்பு கிடைக்கிறது. இதில் ஒரு பகுதி சுய உதவிக்குழுவிற்கு இலாபமாகவும் ஒரு பகுதி ஊராட்சிக்கு சேமிப்பாகவும் கிடைக்கிறது.

மேலும், குடிநீர் பம்புகள் இயங்காத நேரத்தில் இதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை மின்சாரம் தேவைப்படும் தொழில் செய்வதற்கும் விளக்குகள் எரியச் செய்யவும் பயன்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.



இதன் விளைவாக 50 பயோமாஸ் கேஸ்ஸிஃபயர்கள், பல்வேறு ஊராட்சிகளில் வங்கிகள் உதவியுடன் நடப்பாண்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**காற்றாலை மூலம் நீர் இறைத்தல்**

கோவை மாவட்டத்தில், சுல்தான்பேட்டை வட்டாரம் இடையர்பாளையம் ஊராட்சியிலும் மற்றும் பல்லடம் வட்டாரம் செம்மிபாளையம் ஊராட்சியிலும் காற்றாலை மூலம் நீர் இறைக்கும் கருவி அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து நீர் இறைத்து தரைமட்ட தொட்டியில் தண்ணீர் சேமிக்கப் பட்டு, பள்ளி மற்றும் ஆதிதிராவிடர் குடியிருப்புக்கும் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதனால் ஊராட்சியில் மின் மோட்டார்கள் இயக்கும் பணியாளர் ஊதியம் மற்றும் மின்கட்டணத் தொகை ஆகியவை சேமிக்கப்படுகிறது.

10 காற்றாலை மூலம் நீர் இறைக்கும் கருவிகள் பல்வேறு ஊராட்சிகளில் வங்கிகள் உதவியுடன் நடப்பாண்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மனிதக் கழிவுடன் இணைந்த சாண எரிவாயுக் கலன் (Night Soil Linked Biogas Plant) :**

கோவை மாவட்டம் பல்லடம் வட்டாரம் செம்மிபாளையம் ஊராட்சி மற்றும் கிணத்துக்கடவு வட்டாரம் பொட்டையாண்டிபுரம்பு ஊராட்சி ஆகியவற்றில் 10 கன மீட்டர் மனிதக் கழிவுடன் இணைந்த சாண எரிவாயுக் கலன் அமைக்கப்பட்டுள்ளது. இதில் செம்மிபாளையம் ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள சாண எரிவாயுக் கலனிலிருந்து உற்பத்தியாகும் எரிவாயு அவ்வளாகத்தில் நீர் இறைக்கப் பயன்படும் ஆயில் என்ஜினை இயக்கவும் விளக்கு எரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ள எரிவாயு அவ்வூராட்சியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் சமையல் எரிவாயுவாகப் பயன்படுத்தப் படுகிறது. இதனால் வளாகத்தின் மின்கட்டணம் மற்றும் அங்கன்வாடி மையத்தின் எரிபொருள் தேவை ஆகியவை பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது.

காரமடை வட்டாரம் ஓடந்துறை ஊராட்சியில் 135 தொகுப்பு வீடுகளில் கட்டப்பட்டுள்ள கழிப் பறைகளுடன் இணைத்து இரண்டு 10 க.மீ. மனிதக் கழிவுடன் இணைந்த சாண எரிவாயுக் கலன் அமைக்கப் பட்டுள்ளது. இதில் உற்பத்தி செய்யப்படும் எரிவாயு 25 தொகுப்பு வீடுகளில் சமையல் எரிவாயுவாகப் பயன்படுத்தப்படுகிறது. 25 மனிதக் கழிவுடன் இணைந்த

சாண எரிவாயுக் கலன்கள் பல்வேறு ஊராட்சிகளில் நடப்பாண்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



**சூரிய ஒளி தெரு விளக்குகள்**

கோவை மாவட்டம் காரமடை வட்டாரம் ஓடந்துறை ஊராட்சி கல்லார்புதூர் கிராமத்தில் 25 தொகுப்பு வீடுகள் உள்ள பகுதியில் 25 சூரிய ஒளி தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் அவ்வூராட்சியின் மின் கட்டண செலவு குறைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வூராட்சியில் 40 சூரிய ஒளி தெரு விளக்குகள் அமைக்கப்பட உள்ளன. அனைத்து ஊராட்சிகளிலும் 1,000 சூரிய ஒளி தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் கோவை மாவட்டத்தில் உள்ள ஊராட்சிகளில் முதல் முறையாக மரபு சாரா எரிசக்தி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அனைத்து ஊராட்சிகளிலும் இத்திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது,.

கோவை மாவட்டத்தில் உள்ள ஊராட்சிகளில் தெருவிளக்குகள் மற்றும் குடிநீர் விநியோகத்திற்காக மின்மோட்டார் இயக்கும் பணிக்கு ஆண்டிற்கு ரூபாய் பதினோறு கோடி மின் கட்டணத் தொகையாக மின்வாரியத்திற்கு செலுத்தப்படுகிறது. மரபு சாரா எரிசக்தி உற்பத்தியின் மூலம், ஊராட்சிகளில் செலவு செய்யப்படும் மேற்படி தொகையினைக் குறைத்து அவ்வூராட்சிகளில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**– வே. இராமநாதன்**
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்
கோயம்புத்தூர்.

* * *

## எறும்பு



- உலகமெங்கும் 15 ஆயிரம் வகையான எறும்புகள் உள்ளன.
- 2.மி.மீ. நீளம் முதல் 30 மீ.மீ. நீளம் வரை பல அளவுகளில் எறும்புகள் உள்ளன.
- பொதுவாக நாம்அறிந்த சிவப்பு, பழுப்பு அல்லது கறுப்பு நிறங்கள் தவிர வெளிர் மஞ்சள் மற்றும் பச்சை நிறமுள்ள எறும்புகளும் உள்ளன.
- ஒரு பழைய எறும்புப் புற்றுக்குள் 15 இலட்சம் எறும்புகள் வரை இருக்கும்.
- எறும்புகள் தோன்றி ஏறக்குறைய 4 கோடி ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.
- நிலத்தடியில் வாழும் எறும்புகளுக்குக் கண்கள் கிடையாது.

## சென்னையில் செய்தித்தாள்

1785ஆம் ஆண்டு சென்னையில் "மெட்ராஸ் கூரியர்" என்ற செய்தித் தாளை ரிச்சர்டு ஜான்ஸ்டன் என்ற ஆங்கிலேயர் வெளியிட்டார். இந்த இதழில்தான் ஆங்கில நாட்டில் வெளியிடும் இதழ்கள் போலவே முதல் இரண்டு பக்கங்கள் செய்திகளும், மூன்றாவது பக்கத்தில் வாசகர் கருத்துகளும், கடைசிப் பக்கத்தில் விளம்பரங்கள், கவிதைகள் முதலியனவும் அமைந்திருந்தன.

1791–இல் "வீக்லி மெட்ராஸ் கெஸட்" என்ற இதழ் தோன்றியது.

* * *

# மூதறிஞர் இராஜாஜி

## தமிழகத்தின் தவப்புதல்வர்

பொதுவாழ்வில் உயர்ந்த இடத்தைப் பெற்று, வரலாற்றிலும் மக்களின் மனதிலும் நீங்கா இடத்தைப் பெற்ற தலைவராக மூதறிஞர் இராஜாஜி அவர்கள் திகழ்கின்றார்கள்.



மூதறிஞர் இராஜாஜி தமிழகத்தின் தவப்புதல்வர்களில் ஒருவர் என்றும், தமிழகத்திற்கு பல்வேறு வகையில் பெருமை சேர்த்த பெருந்தகையாளர் என்றும் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தருமபுரி மாவட்டம், தொரப் பள்ளியில் 14–12–2003 அன்று நடைபெற்ற மூதறிஞர் இராஜாஜி பிறந்தநாள் விழாவில் பங்கேற்று, அவரது வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் புகைப்படக் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசினார் :

"இந்திய அரசியல் வரலாற்றில் உன்னதமான ஓர் இடத்தைப் பெற்றவரும், தமிழ்நாட்டின் தவப்புதல்வர்களில் ஒருவராக கருதிப் போற்றப்படுபவருமான மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பிறந்தநாள் விழாவை, அந்தப் பெருமைமிக்க தலைவர் பிறந்த இந்த மண்ணில் கொண்டாட, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்து, அந்த அடிப்படையில், இங்கே, இந்த விழா சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொண்டனாக, தூதுவனாக, இந்த விழாவிலே கலந்துகொள்வதில் நான் பெருமையும் உள்ள மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தில் ஒரு பகுதியாக விளங்கிய இந்த இடத்தில் பிறந்து, கற்ற கல்வியாலும், பெற்ற அறிவினாலும், அரிய தொண்டினாலும், அற்புதமான அரசியல் அணுகுமுறையினாலும் பொதுவாழ்வில் உயர்ந்த இடத்தைப் பெற்று, வரலாற்றிலும் மக்களின் மனதிலும் நீங்கா இடத்தைப் பெற்ற தலைவராக மூதறிஞர் இராஜாஜி அவர்கள் திகழ்கின்றார்கள்.

அன்னியர் ஆதிக்கத்திற்கு நாடு ஆட்பட்டு, அடிமைப்பட்டுக் கிடந்த வேளையில், விடுதலைப்போராட்ட வேள்வித்தீயில் குதித்து, எதிர்காலத்தலைமுறை, சுதந்திரக் காற்றை சுவாசிக்கவேண்டும் என்பதற்காகத் தங்களின் வாழ்வின் வசந்தத்தைக் கருக்கிக் கொண்ட ஒப்பற்றத் தலைவர்களில் ஒருவராக நம்முடைய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் திகழ்ந்தார்கள்.

"தேசப்பிதா" என்றும் "மகாத்மா" என்றும் போற்றப்படும் அண்ணல் காந்தியடிகளின் சகாக்களில் ஒருவர், அவருக்கு ஆலோசனை சொல்லக்கூடிய அருமை நண்பர்களில் ஒருவர் என்ற வகையில் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் திகழ்ந்தார்கள் என்பதை வரலாற்றில் படிக்கும்போது அவர் எத்தகைய பெருமைமிக்க தலைவராக, அறிவாற்றல் மிக்க சிந்தனையாளராகத் திகழ்ந்தார்கள் என்பதை நம்மால் உணர்ந்திட முடிகிறது.

அண்ணல் காந்தியடிகள் அவர்களை முழுக்க முழுக்க ஆதரித்து அவரது கருத்தை ஏற்று மூதறிஞர் இராஜாஜி செயல்பட்ட காலமும் உண்டு. காந்தியடிகளின் கருத்தோடு தமக்கு மாறுபாடான எண்ணம் எழுமானால் அதை மறைக்காமல் வெளியிடுகின்ற துணிச்சல்மிக்க தலைவராகவும் அவர் திகழ்ந்த சூழ்நிலையும் தோன்றியதுண்டு.

ஆனால் தனது கருத்தை ஆதரித்தாலும் அல்லது மாறுபாடான நிலைப்பாடு கொண்டிருந்தாலும் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் அண்ணல்

காந்தியடிகள் அவர்களின் போற்றுதலுக்கும் பாராட்டுக்கும் உரிய தலைவராகத் திகழ்ந்துள்ளார் என்பதை நம்மால் அறிந்திட முடிகிறது.

மகாத்மா காந்தியடிகள் மூதறிஞர் இராஜாஜி பற்றி குறிப்பிடும்போது, "எனது மனசாட்சியின் காவலர் (Conscience's keeper)" என்று குறிப்பிடுகின்றார் என்றால், அந்த இரண்டு தலைவர்களுக்கிடையே இருந்த ஆழமான நட்பினை, இணக்கமான உறவினை நம்மால் உணர்ந்திடமுடிகிறது.

இந்திய சுதந்திரப்போராட்டத்தில், உப்பு சத்தியாகிரகம் என்பது ஒரு முக்கிய சம்பவம் ஆகும். இந்திய சுதந்திரப்போராட்ட வரலாற்றில் அது ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். "Remarkable Milestone in the history of the freedom struggle" என்று சொல்லத்தக்க வகையில் அந்த போராட்டம் நடந்ததை வரலாற்று ஏடுகளில் நாம் படிக்கின்றோம்.

அந்தப் போராட்டத்தில் மகாத்மா காந்தியடிகள், தண்டி யாத்திரை மேற்கொண்டு சத்தியாகிரகம் நடத்தினார்கள். 1930ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12ஆம் நாள் சபர்மதி ஆசிரமத்திலிருந்து இலட்சியப் பயணம் தொடங்கி, 200 மைல் தூரத்திற்கு நடந்து, ஏப்ரல் 5ஆம் நாள் தண்டி என்ற இடத்தை அடைந்த அண்ணல் காந்தியடிகள், மறுநாள் அதாவது, 1930ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் நாள் "தண்டி" என்ற இடத்தில் ஆங்கில ஆட்சியினர் உப்புக்கு விதித்த வரியினை எதிர்த்து உப்பு அள்ளும் போராட்டத்தினை நடத்தி கைதானார்கள்.

இந்த தண்டி யாத்திரை அண்ணல் காந்தியடிகள் தலைமையில் வடமாநிலத்தில் நடந்தது என்றால், தமிழ்நாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க உப்பு சத்தியாகிரகம், மூதறிஞர் இராஜாஜி தலைமையில் வேதாரண்யத்தில் நடந்தது.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் திருச்சியிலிருந்து தொண்டர்களுடன் புறப்பட்டு, நடைபயணம் மேற்கொண்டு, வேதாரண்யத்தில் இந்தப் போராட்டத்தை நடத்தினார்கள்.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் ஒரு சிறப்பான கவிதையை நாமெல்லாம் படித்திருக்கிறோம்.

"கத்தியின்றி இரத்தமின்றி
யுத்தம் ஒன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர்''

– என்ற அந்தக் கவிதை வரிகள், வேதாரண்யம் உப்பு சத்தியாகிரக வீரர்கள் நடைபயணத்திலே பாடிச் செல்வதற்காகவே நாமக்கல் கவிஞர் அவர்கள் இயற்றினார்கள் என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.



அந்த அளவிற்கு பெருமைக்குரிய தலைவராக, விடுதலைப்போராட்ட வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்ற தலைவராக மூதறிஞர் இராஜாஜி அவர்கள் திகழ்கின்றார்கள்.

மற்றொரு வரலாற்றுச் சம்பவத்தை உங்களுக்கு நினைவூட்டுவதை எனது கடமையாகக் கருதுகின்றேன்.

இந்திய நாடு விடுதலை பெற்றபோது, நமது நாட்டின் கவர்னர் ஜெனரலாக (Governor General) இருந்தவர் லார்டு மவுண்ட்பேட்டன் ஆவார்கள்.

அந்தப் பொறுப்பில் அவருக்குப்பின்னர் இந்தியர் ஒருவரை அமரச்செய்யவேண்டும் என்று தலைவர்கள், அரசியல் விற்பன்னர்கள், ஆலோசித்தபோது, அனைவரும் ஏற்றுக்கொண்ட ஒரே இந்தியத் தலைவர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள்தான் என்பதை எண்ணிடும்போது அவரது பெருமையினை உணர்ந்திட முடிகிறது.

– இந்தப் பதவியை வகித்த ஒரே இந்தியர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தான். அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர், அதுவும் இந்த மண்ணில் பிறந்தவர் என்பதை நினைத்துப்பார்க்கும்போது பெருமையும் பெருமிதமும் அடைகின்றோம்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பல்வேறு பதவிகளை வகித்தவர்கள்.

அவர் வகித்த பதவிகள் அனைத்திலும் சிறப்பாகச் செயல்பட்டு, மக்களின்

உள்ளத்திலும் வரலாற்றிலும் நீங்காத இடம் பெற்றவராவார்.

அவர் ஒரே ஒரு முறைதான் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டார். அதுவும் அமெரிக்க நாட்டிற்குச் சென்று அதிபர் கென்னடியைச் சந்தித்து, உலக அமைதிக்காக வாதாடினார் என்பதை எண்ணிடும்போது, போரும் பூசலும் அற்ற ஒரு சமுதாய அமைப்பை உருவாக்குவதில் அவருக்கு இருந்த அக்கறையினையும் அதற்காக அவர் மேற்கொண்ட சிறப்பான முயற்சியினையும் நம்மால் உணர்ந்திட முடிகிறது.

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் கருத்தோடு, கொள்கையோடு, அரசியல் அணுகுமுறையோடு ஒத்துப்போக முடியாதவர்கள் கூட அவரைப் போற்றக்கூடிய, வாழ்த்தக்கூடிய பெருமையினை சிறப்பினைப் பெற்றிருந்தார் என்பது வரலாற்று உண்மையாகும்.

தந்தை பெரியார் அவர்களும் மூதறிஞர் இராஜாஜி அவர்களும் பொதுவாழ்வில் இரு துருவங்களாக இருந்து செயல்பட்டவர்களாவார்கள். ஆனால் அந்த இரண்டு தலைவர்களுக்கிடையே ஆழமான நட்பும், பாசப்பிணைப்பும் இருந்ததை நம்மால் அறியமுடிகிறது.

ஒரு முறை தந்தை பெரியார் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள், "சீரார் ஈ.வெ.ரா. அவர்களுக்கும் எனக்கும் உள்ள அக நகும் நட்பு யார் என்ன சொன்ன போதிலும் குறையாது" என்று குறிப்பிட்டிருந்தார்.

மற்றொருமுறை தந்தை பெரியாருக்கு, வாழ்த்து தெரிவிக்கும்போது "எனது அன்பான எதிரிக்கு இனிய வாழ்த்துகள்" என்று இராஜாஜி அவர்கள் குறிப்பிட்டார்.

இதைப்பற்றி குறிப்பிட்டு தந்தை பெரியார் அவர்களிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, "எனக்கு பலர் வாழ்த்து தெரிவித்துள்ளார்கள், ஆனால் இராஜாஜியின் வாழ்த்து எனது நெஞ்சைத்தொட்ட வாழ்த்து" என்று பெருமையாகக் குறிப்பிட்டார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், மூதறிஞர் இராஜாஜி அவர்களைப் பெரிதும் போற்றினார்கள், "அந்த மாமேதை வாழுகின்ற காலத்தில் வாழ்வது நமக்குப் பெருமையாகும்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மூதறிஞர் இராஜாஜி அவர்களிடம் மிகுந்த பற்றும் பாசமும் கொண்டிருந்தார்கள்.

புரட்சித்தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 1978ஆம் ஆண்டு இராஜாஜி பிறந்த இல்லத்தை அரசுடைமையாக்கி, நினைவு இல்லமாக மாற்றினார் என்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பெருமையை நிலைநாட்ட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருவதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

இராஜாஜி அவர்களைப் பற்றி எண்ணிடும்போது அறிவாற்றல், ஆட்சித்திறமை, கொண்ட கொள்கையில் உறுதி, எதிர்ப்பு கண்டு அஞ்சாத மனவலிமை ஆகியவை நமக்கு நினைவுக்கு வரும்.

இந்த உயர்ந்த குணநலன்கள் அனைத்திற்கும் ஒட்டுமொத்த வடிவமாக, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

**"இராஜாஜி அவர்களைப் பற்றி எண்ணிடும்போது அறிவாற்றல், ஆட்சித்திறமை, கொண்ட கொள்கையில் உறுதி, எதிர்ப்பு கண்டு அஞ்சாத மனவலிமை ஆகியவை நமக்கு நினைவுக்கு வரும். இந்த உயர்ந்த குணநலன்கள் அனைத்திற்கும் ஒட்டுமொத்த வடிவமாக, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்"**



தமிழகத்தின் பொருளாதாரத்தைச் சீர்திருத்தவும், அனைத்துத் துறையிலும் தமிழகம் வளர்ச்சிபெற்று இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் திகழவும் அரசு தீட்டும் திட்டத்தின் பயன் மக்களை முழுமையாகச் சென்றடையவும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மேற்கொள்ளும் துணிச்சலான நடவடிக்கைகள், வரலாற்றுச் சிறப்புமிக்கவையாகும்.

புரட்சித்தலைவி அவர்கள் இந்தத் தலைமுறை மட்டுமின்றி, எதிர்காலத் தலைமுறையும் பயன்பெறும் வகையில் தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

எண்ணிலடங்காத புரட்சிகரமான திட்டங்களைச் செயல்படுத்தி தமிழ் மண்ணில் புதிய மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கும் புரட்சித்தலைவியின் முயற்சி அனைத்திற்கும் துணைநிற்போம் என்று தெரிவித்து, உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்து மூதறிஞர் இராஜாஜி அவர்களின் புகழ் ஓங்குக! என்று குறிப்பிட்டு விடைபெறுகிறேன்''.

இவ்வாறு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்.

இந்த விழாவிற்கு தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மு.அ.சித்திக், இ.ஆ.ப., தலைமை வகித்தார். விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சி. பெருமாள், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மு. தம்பி துரை, திரு. கே.பி. முனுசாமி, திரு.கே.கோபிநாத், திரு.வி. கோவிந்தராஜ், திரு.பி. பழனியப்பன், கிருஷ்ணகிரி மாவட்ட தனி அலுவலர் திரு.மங்கத்ராம் சர்மா, இ.ஆ.ப., ஓசூர் சார் ஆட்சியர் திரு.லால்வேனா, இ.ஆ.ப., மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.கே. சிங்காரம், மாவட்ட ஊராட்சித் துணைத்தலைவர் திரு.கோ.ரவிச்சந்திரன், மாவட்ட வேளாண்மை விற்பனைக்குழுத்தலைவர் திரு.தகடூர் ஆர். விஜயன், ஓசூர் ஒன்றியக்குழுத்தலைவர் திரு.வி. கந்தப்பா, ஓசூர் நகராட்சித்தலைவர் திரு. பி.எம். நஞ்சுண்டசாமி, தருமபுரி நகராட்சித்தலைவர் திரு. எஸ்.ஆர். வெற்றிவேல், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு.கேசவரெட்டி, ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.பி.சீனிவாசு, தொரப்பள்ளி ஊராட்சி மன்றத்தலைவர் திரு.டி.வி.வெங்கடேசன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

முன்னதாக, மூதறிஞர் இராஜாஜி குறித்த கருத்தரங்கம், முனைவர் துரை. செல்வராசு தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் திரு.தனராசு, பொறியாளர் திரு.ப.இராஜசேகர், முனைவர் எஸ்.அழகிரி, கவிஞர் நா.நாகராசன் ஆகியோர் கருத்தரங்கில் பங்கேற்று, பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினார்கள்.

மூதறிஞர் இராஜாஜியின் பிறந்தநாளையொட்டி, நாட்டுநலப் பணித்திட்ட மாணவர்கள் பங்கேற்ற தூய்மைப் பணி, சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு முகாம் ஆகியவை நடைபெற்றன.

கால்நடைத்துறையின் சார்பில் கால்நடை மருத்துவ முகாம் நடத்தப்பட்டு, கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

கலைப் பண்பாட்டு மையம் சார்பில், இன்னிசை நிகழ்ச்சியும், மத்திய அரசின் இசை நாடகப் பிரிவின் சார்பில், நாடகமும், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் திரைப்படக்காட்சியும் நடைபெற்றன. விழாவையொட்டி அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான மக்கள் கண்டு கருத்து விளக்கம் பெற்றனர்.

மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழாவினையொட்டி, நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ–மாணவிகளுக்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் பரிசுகளும், ஏழை எளிய மக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

✧ ✧ ✧



# மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி

2004

புத்தாண்டு புலர்கின்ற இந்நாளில் தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2003–ஆம் ஆண்டுக்கு விடைகொடுத்து, 2004–ஆம் ஆண்டை ஆவலோடு வரவேற்கின்ற வேளை இது! பிறக்கின்ற புத்தாண்டு புதிய சாதனைப் பூக்கள் பூக்கின்ற பொற்காலமாக மலரட்டும்!

சாதனை என்பது தற்செயல் விளைவு அல்ல! அது ஓய்வில்லா உழைப்புக்கு இயற்கை அளிக்கின்ற பரிசு! அத்தகைய சாதனைச் சரித்திரத்தைக் கடந்த ஆண்டுகளில் படைத்தோம்; புத்தாண்டில் இன்னும் சிறப்பாகப் படைப்போம்; அதற்காக இன்னும் அதிகமாய் உழைப்போம்!

“உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ!'' என்பது அல்லவா ஆன்றோர் வாக்கு.

இயற்கை இடர்களும், செயற்கைத் தடைகளும் நம்மை வழி மறித்தாலும் இறுதி வெற்றி நமக்குத்தான் என்பதே வரலாற்றின் தீர்ப்பாகி இருந்துள்ளது.

**வலிமை மிக்க தமிழகத்தை, வளம்மிக்க தமிழகத்தை உருவாக்க உறுதி கொள்வோம்.**

என் அன்பிற்கினிய தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துகளை உவகையுடன் மீண்டும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

# செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## பொங்கல் திருநாள் வாழ்த்து

உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களின் இல்லங்களில் எல்லாம் உவப்புடன் கொண்டாடப்படும் ஒப்பற்ற விழா பொங்கல் விழா! இந்த மங்கலப் பொங்கல் திருநாளில் அகிலத் தமிழர்கள் அனைவருக்கும் என் இனிய பொங்கல் வாழ்த்துகளை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத் தொழில்கள் அனைத்தும் உழவுத் தொழிலையே நம்பியுள்ளன. ஆகவே, உலகத்தின் தலைமைத் தொழில் உழவுத்தொழிலே என்பார் திருவள்ளுவர்.

*சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம்; அதனால்*
*உழந்தும் உழவே தலை* - என்பது அவரது திருமொழி.

இவ்வாறு உழவுத் தொழிலைச் சிறப்பித்து உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவரின் திருநாளை, பொங்கல் திருநாளுக்கு அடுத்த நாள் கொண்டாடி உழவர் திருநாளை மூன்றாம் நாள் கொண்டாடுகின்றோம்.

இஞ்சியும், மஞ்சளும், செங்கரும்பும், செந்நெல்லும் செழித்து விளையும் செந்தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் தஞ்சை. தஞ்சைத் தரணியில் காவேரி நடந்தால்தான் மக்கள் வாழ்க்கை நடக்கும். எனவே, காவேரி நீரில் நமக்குரிய பங்கை நாம் பெற்றே தீருவோம் என்று இந்தப் பொங்கல் திருநாளில் உறுதி ஏற்போம். எத்தனை சோதனைகள் வந்தாலும், இறுதி வெற்றி நமக்கே என்பது காலத்தால் உறுதி செய்யப்பட்ட ஒன்று.

*ஊழையும் வெல்லும் உள்ளத்து உறுதி படைத்தவர்கள் நாம்!*
*உடைத்திடுவோம் தடைகளை!*
*உயர்த்திடுவோம் தமிழகத்தை!*
*வளர்ச்சிப் பாதையில் வீறுநடை போடுவோம்!*
*வரும் தடைகளை வெல்வோம்!*
*வாகை சூடுவோம்!*

அன்பிற்கினிய என் அருமைத் தமிழக மக்கள் அனைவருக்கும் எனது பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளை உளமார்ந்த மகிழ்ச்சியுடன் உரித்தாக்கிக் கொள்கிறேன்.



மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத்தலைவர்
டாக்டர் கா. காளிமுத்து அவர்களின்

# பொங்கல் வாழ்த்துப்பா

## அகவல்

தமிழர் திருநாள்! தரணித் திருநாள்!

உழைப்பவர் நன்னாள்! உழவர் பொன்னாள்!

★

உழைப்பே உயர்ந்தது என்பார் கார்ல்மார்க்ஸ்!

உழைப்பவர் உயர்ந்தவர் என்பார் எம்ஜிஆர்!

உழைப்பினைப் பொருளியல் ரீதியில் மதிக்கனும்!

உழைப்புக்கேற்ற ஊதியம் உலகெலாம் கொடுக்கனும்!

உழைப்பினைச் சுரண்டுவோர் கொடுமையைத் தடுக்கனும்!

உழைப்புளோர் உயர்ந்தவர்! உழைப்பிலார் தாழ்ந்தவர்!

என்னும் புதுநெறி படைப்போம்!

பொங்கல் நாளில் புதுயுகம் அமைக்கவே!!





# வெற்றிப் பொங்கல்

ஓரெழுத்து மாதம் – தை
உலகம் போற்றும் மாதம்
பேர் படைத்த தமிழர் – இனப்
பெருமை கூறும் மாதம்!

நெய்மணக்கும் மாதம்! – புது
நெல் மணக்கும் மாதம்!
தை, மணக்கும் மாதம்! – இது
தமிழ் மணக்கும் மாதம்!

பொதுமறையைத் தந்த – தமிழ்ப்
புலவர் விழா மாதம்
அதிமதுரக் குறளை – நல்ல
அறிஞர் போற்றும் மாதம்!



இஞ்சிமஞ்சள் கொஞ்சும் – எம்
இனிய உழவர் மாதம்!
மஞ்சு விரட்டு மாதம்! – கனல்
மணக்கும் வீர மாதம்!

உள்ள குப்பை கூட்டி – அது
ஒழியத் தீயை மூட்டி
உள்ளக் குப்பை போக்கி – நமை
உயர்த்த வந்தது போகி!



கரும்புக்குள்ளே சாறு - அதைக்
கவிதை என்று கூறு!
இரும்பு நெஞ்சும் உருகும் - சுவை
இயற்கைதந்த பேறு!

தைமகளைப் பாடு! - அத்
தை மகளை நாடு!
வையம் உனது வீடு! - தமிழ்
வாழ்க்கைக்கில்லை ஈடு!

பொங்கும் இன்பம் பொங்கும் - தமிழ்ப்
பொங்கல் வந்த போதும்
கங்கையினும் புனிதம் - உள்ள
காவிரியைக் காணோம்!

காவிரி நீர் உரிமை - அதைக்
காப்பது நம் கடமை
வாழும் வரலாறு - அம்மா
வாகை சூடல் உண்மை!

கங்கை பாய வேண்டும் - நீர்க்
கவலை ஓய வேண்டும்
எங்கள் புரட்சித்தலைவி - வெற்றி
எதிலும் ஈட்ட வேண்டும்!

கவியரசர் இளந்தேவன்




# எதிர்காலத் தலைமுறையின் வளர்ச்சிக்கு அறிவியல் சாதனைகள் வழிகோல வேண்டும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

**இ**ந்திய அணு சக்தித் துறை தனது பொன்விழாக் கொண்டாட்டங்களைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்த மகிழ்ச்சியான நேரத்தில் கல்பாக்கம் இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்திய அணுசக்தி சங்கத்தின் 14ஆவது ஆண்டு மாநாட்டிலும் அதனுடன் இணைந்து நடைபெறும் அணு சக்தி, மறுசுழற்சி மற்றும் அணு விஞ்ஞான வாரியத்தின் முதல் மாநாட்டிலும் கலந்து கொள்ள கிடைத்த வாய்ப்பு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது.

இந்த மாநாட்டை இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் தொடங்கி வைப்பது உள்ளபடியே சாலப்பொருத்தமானதாகும். குடியரசுத்தலைவர் அப்துல்கலாம் அவர்களுக்கு மிகவும் பிடித்த தமிழ்ப் புலவர் உலகப் பொதுமறையான திருக்குறள் தந்த திருவள்ளுவர். அவர் எழுதிய குறளிலிருந்து

*"இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்*
*கிடும்பை படாஅ தவர்"*

– என்ற குறளை மேற்கோள் காட்டி, ஏராளமான பேர் சோதனைகளை, துன்பங்களை எதிர்கொண்டு நிற்க முடியாமல் துவண்டு போய் விடுகிறார்கள்; சோதனைகளையும் துன்பங்களையும் எதிர்கொண்டு அவற்றைச் சமாளித்தால்தான் வெற்றி காண முடியும் என்று வள்ளுவர் இத்திருக்குறள் மூலம் சொல்லியிருக்கிறார். சாதனைகள் படைக்கும் தலைவர்கள் மாறுபட்ட சூழ்நிலைகளினால் உருவாகும் பிரச்சினைகளில் பலியாகிவிடமாட்டார்கள்.

இந்திய அணுசக்தித் திட்டங்கள் உண்மை யிலேயே மிகப்பெரிய வெற்றியை அடைந்துள்ளன என்பதுதான் இந்தக் குறளின் மூலம் நாம் புரிந்து கொண்டது. நவீன இந்தியாவின் கோவிலாக கல்பாக்கத்தில் அமைந்துள்ள இந்திராகாந்தி அணுசக்தி ஆராய்ச்சி மையம் விளங்கி வருகின்றது. உண்மையிலேயே இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் மாதிரியாக விளங்கி வருகின்றது.

மேலும் இந்திய விஞ்ஞானிகளின் எண்ணத்தில் பல்வேறு விதமான சிறப்பான கண்டுபிடிப்புகளை உருவாக்கித்தர இது ஊன்று சக்தியாக விளங்குகிறது. மிகவும் பெருமைப்படத்தக்க வகையில் மின்னிக் கொண்டிருக்கும் இந்த ஆராய்ச்சி மையம் மற்றும் அணுசக்தி மின் உற்பத்தி மையம் தமிழகத்தில் அமைந்துள்ளது மிகவும் மகிழ்ச்சியான ஓர் அம்சமாகும். இதன் மூலம் இயற்கையாகவே அறிவியல் கண்டுபிடிப்புகள் மற்றும் அதைச் சார்ந்த உந்து சக்தியை மக்களிடையே இயல்பாகவே உருவாக்கித் தந்து வருகிறது.



கடந்த 1956ஆம் ஆண்டு மிகச்சிறிய அளவில் முதலாவதாக அப்சரா என்ற ஆராய்ச்சி அணுஉலையுடன் துவக்கப்பட்ட இந்த ஆராய்ச்சி மையமானது இன்று அடைந்துள்ள வளர்ச்சி உண்மையிலேயே என்னை மெய்சிலிர்க்க வைத்தது. முதலாவதாக இது ஒட்டுமொத்த அணுசக்தி மறுசுழற்சியை தன்னகத்தே உள்ளடக்கியது. கடந்த 1960ஆம் ஆண்டுகளில் துவங்கிய இந்தியாவின் வர்த்தக ரீதியிலான அணுசக்தித் திட்டம், இந்திய விஞ்ஞானிகள் திட்டம் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களின் சாதனைகளில் மற்றொரு மகத்தான சாதனையாகும்.

முதலாவதாக 220 மெகாவாட் அணுஉலை இந்தியாவில் முழுவதுமாக வடிவமைக்கப்பட்ட இடம் கல்பாக்கம். கல்பாக்கத்தில் துவக்கப்பட்ட இத்திட்டம் இந்திய அணுசக்தித் திட்டத்திற்கு அடிக்கல்லாக அமைந்ததற்கு விஞ்ஞானிகளுக்கும் தொழில்நுட்ப நிபுணர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய திட்டங்கள் துவங்குவதற்கும் கல்பாக்கத்திற்கும் மிகப்பெரிய உறவு உள்ளது. இந்திய அணுசக்தித் துறையானது மீண்டும் கல்பாக்கத்தில் பாஸ்ட் பிரீடர் அணுஉலை திட்டத்தை சோதனை செய்ய உள்ளது.

தற்போது கல்பாக்கத்தில் புதிதாக 500 மெகாவாட் திறன் கொண்ட அதிவேக ஈணுலை (Proto type Fast Breeder) அணுஉலை புதிதாகக் கட்டப்பட்டு வருவது அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்திய அணுசக்தி ஆராய்ச்சிக் கழகம் புதிதாக 3,960 மெகாவாட் திறன் கொண்ட புதிய அணுஉற்பத்தி நிலையங்களை தன்னுடைய உற்பத்தி அளவில் அதிகரிப்பது அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த விரிவாக்கத் திட்டத்தில் கூடங்குளத்தில் அமைக்கப்பட்டு வரும் அணுமின் திட்டத்திற்கான தண்ணீர் அணுஉலை கட்டும் பணி முடிவடைந்த பின்பு மேலும் 2,000 மெகாவாட் அணுமின் உற்பத்தி அளவு அதிகரிக்கும். கல்பாக்கம் மற்றும் கூடங்குளத்தில் நடைபெற்று வரும் இப்பணிகளுக்குத் தமிழக அரசு முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று நான் இந்த நல்லநேரத்தில் உறுதியளிக்கின்றேன்.

கல்பாக்கத்தில் தண்ணீர் சுத்திகரிப்புத்திட்டம் (Reverse Osmosis Process) என்னும் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 1,800 க்யூபிக் மீட்டர் அளவு (1.8 MLD) கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தைத் தொடங்கியிருப்பதும் மேலும் நீராவியின் அடிப்படையில் பன்முனை சுத்திகரிப்பு முறை (Multi Stage Flash Process) என்னும் தொழில் நுட்பத்தையும் செயல்படுத்த இருப்பதாக அறிகின்றேன். இந்த இரண்டு திட்டங்களும் இணைந்து நாள் ஒன்றுக்கு 6,300 க்யூபிக் மீட்டர் அளவு (6.3 MLD) கடல்நீரை நன்னீராக்கி வழங்கிட முடியும். இது ஒரு மிகவும் முக்கியமான வளர்ச்சியாகும். கல்பாக்கம் விஞ்ஞானிகள் சிறிய ஆலைகளை அமைப்பதில் பெற்றிருக்கும் அனுபவத்தை தமிழ்நாடு கடற்கரை முழுவதும் இதுபோன்ற சிறிய ஆலைகள் அமைப்பதற்கு நாங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

சென்னையின் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டை அடியோடு போக்கி அதற்கு நிரந்தரத் தீர்வு காண என்னுடைய தலைமையிலான அரசு முனைப்புடன் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. இதற்காக கடல்நீரை நன்னீராக்கும் மிகப்பெரிய செயல் திட்டங்களைச் செயல்படுத்தும் முயற்சியில் தமிழக அரசு முனைப்புடன் இறங்கியுள்ளது. இது தொடர்பான

விஞ்ஞானிகளாகிய உங்கள் அனைவரின் ஆலோசனைகளையும் அன்போடும் மகிழ்ச்சியோடும் வரவேற்கின்றேன்.

நாள் ஒன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் முதல் 300 மில்லியன் லிட்டர் அளவு வரையிலான கடல் நீரை நன்னீராக மாற்றும் செயல்திறனுடன் கூடிய மிகப்பெரிய ஆலைகளை நிர்மாணிக்கும் ஆற்றலை நாங்கள் வெகுவிரைவில் பெறப்போகிறோம். அதனை டாக்டர் சிதம்பரம் அவர்கள் பார்த்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எல்லா பெரிய அணுமின் உற்பத்தி நிலையங்களும் மிகப்பெரிய அளவில் வீணாகப் போகும் வெப்பத்தின் உதவியுடன் கடல்நீரை நன்னீராக்கி அருகில் உள்ள பகுதிகளுக்குக் குடிநீர் விநியோகம் செய்ய முன்வரவேண்டும். இதனை கூடங்குளம் அணுமின் திட்டத்தில் சேர்த்து வடிவமைத்து அதன் மூலம் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் பயனடையச் செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

அணுசக்தி சுழற்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன் அணுசக்தி மறுசுழற்சியைப் பயன்படுத்தத் தொடங்குவது என்பதுதான் இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம். மூடிய சுழற்சி முறை என்பது நமது அணுசக்தித் திட்டங்களின் இதயத் துடிப்பாக விளங்கி வருகின்றது என்பதை நான் உணர்ந்து கொண்டேன். அணுசக்தி சுழற்சியில் அணுசக்தி மறுசுழற்சி மற்றும் அணுக்கழிவுகளைக் கையாளுவது ஒரு கடினமான நடைமுறைதான்.

எரிசக்தி சுழற்சி தொழில் நுட்பத்தில் தற்போது வந்துள்ள புதிய தொழில்நுட்பங்கள் குறித்து இந்த மாநாட்டில் தொடர்ந்து விவாதிக்கப்போவது குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்து பாதுகாப்பு மற்றும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு ஆகியவை குறித்து கவனமுடன் உங்கள் மனதில் இருத்தி செயல்படுவீர்கள் என்றும் நான் உறுதியாக நம்புகின்றேன்.

“அறிவியலால் எதைச் சொல்ல இயலாதோ அதனை மனிதகுலம் அறிந்திருக்க வாய்ப்பில்லை'' என்று பெட்ரண்ட் ரஸ்ஸல் கூறுவார். அதனை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நாம் இன்னும் கண்டுபிடிக்க வேண்டிய எல்லைக்கே அணுசக்தித் திட்டம் மற்றும் அதனுடைய கணக்கிலடங்கா பயன்களின் அடிப்படையில் நாம் கிரகித்துக் கொண்ட அறிவு ஆகியவை நம்மை உந்தித் தள்ளுகிறது. சோதனை அணுஉலை மற்றும் அதிவேக ஈணுலை (Proto type Fast Breeder) ஆகியவற்றின் உயர் தொழில் நுட்பங்களை வணிக ரீதியாக பயன்படுத்துவதற்குத் தாங்கள் எடுத்துக் கொண்ட மிகப்பெரிய அடிப்படை ஆராய்ச்சி முயற்சிகளைப் படிக்கும் பொழுது நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன்.

பிரபல ஜெர்மன் விஞ்ஞானி வெர்னர் ஹெய்சன் பெர்க் கூறியவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். “அறிவியல் எந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று அறிவுறுத்தும்'' என்று கூறியுள்ளார். இந்திய அணுசக்தித் துறையின் பொன்விழாவை நாம் கொண்டாடிக் கொண்டு இருக்கின்றோம். இந்த நேரத்தில் இன்னும் நாம் பல மைல்கள் செல்ல வேண்டியுள்ளது என்பதை நினைத்துப் பார்க்க அழைக்கின்றேன். “எதார்த்தத்திற்கு எதிர்மாறான தாகத்தான் நாம் அறிவியலை கணக்கிட்டு வருகின்றோம் – அதனை அடிப்படையான நிலையிலும் குழந்தை போன்று நாம் பாவித்து வருகிறோம். ஆனால் அறிவியல் இன்றும் ஒரு முக்கியமான பொருளாகவே காணப்படுகின்றது என்பது என்னுடைய வாழ்நாள் முழுவதிலும் இருந்து கற்றுக் கொண்ட ஒன்றாகும்'' என்று ஆல்பர்ட் ஐன்ஸ்டின் சொல்வதை நாம் கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது. ஆல்பர்ட் ஐன்ஸ்டினின் இந்தக் கூற்று மூலம் அறிவியல் கண்டுபிடிப்புகள் தொடர்பான கேள்வி எழவேண்டியதன் அவசியத்தைத் தெரிவித்துள்ளார்.

இதே உந்துதலின் அடிப்படையில் நீங்கள் மேலும் முன்னோக்கிச் சென்று உங்களுடைய ஆராய்ச்சிகளை இயற்கை, பூமி மற்றும் இந்த அண்டம் ஆகியவற்றை அடங்கியுள்ள அதிசயங்களைக் கண்டுபிடிக்கும் வகையில் பணியாற்ற வேண்டும். எதிர்கால மனித குலப் பாதுகாப்பு, தன்னிறைவு அடையும் வகையில் தொழில்நுட்பங்களை கண்டு பிடிப்பதற்குத் தயாரிப்புகளை தொடங்க வேண்டும் என்று உங்களை கேட்டுக் கொள்கின்றேன்.

இங்கு கூடியிருக்கின்ற அனைத்து விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் அனைவரும் எதிர்காலத்தில் நல்ல பல்வேறு சாதனைகள் படைக்க உங்கள் அனைவரையும் நான் வாழ்த்துகிறேன். இந்த நாடு முழுவதும் உங்களை நினைத்துப் பெருமை கொள்கின்றது. அதேநேரத்தில் உங்களுடைய எல்லா முயற்சிகளுக்கும் விருப்பங்களுக்கும் இந்நாடு துணை நிற்கும், மக்கள் துணை நிற்பார்கள் என்று கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

**17–12–2003 அன்று கல்பாக்கத்தில் நடைபெற்ற இந்திய அணுசக்தி சங்கத்தின் 14ஆவது மாநாடு, அணுசக்தி மறுசுழற்சி மற்றும் அணு விஞ்ஞான வாரியத்தின் முதல் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.**



## மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி

# ரூ.122.26 கோடி செலவில் சாலை மேம்பாட்டுப் பணிகள் - புதிய பாலங்கள்

**நா**ட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சாலைகள் மிகவும் இன்றியமையாதவையாகும். குறிப்பாக, கிராமப்பகுதிகள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைந்திட அந்த கிராமச் சாலைகள் மிகுந்த தரம் உள்ளதாக ஆக்கப்பட வேண்டியது மிக அவசியம் ஆகும்.

எனவே, தமிழகத்திலுள்ள, கிராமப்புறச் சாலைகளை மேம்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மிகுந்த முக்கியத்துவம் அளித்து, அதற்கான திட்டப்பணிகளை செயல்படுத்த வழிவகுத்துள்ளார்கள்.

இதன் அடிப்படையில், கடந்த 17–11–2003 அன்று, தமிழகத்தின் 28 மாவட்டங்களில், 64.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11 பாலங்கள் அமைக்கவும், 377.65 கி.மீ. நீளமுள்ள 142 கிராமச் சாலைகளை மேம்படுத்தவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்ஆணையிட்டுள்ளார்கள்.

இதைத் தொடர்ந்து, மேலும் தற்போது நாகப்பட்டினம், திருவாரூர், தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களில் மொத்தம் 9 பாலங்கள் கட்டவும் 28 மாவட்டங்களில் மொத்தம் 337 கி.மீ. நீளத்தில் 133 கிராமச் சாலைகளை இதர மாவட்ட சாலைகளின் தரத்திற்கு மேம்படுத்தவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு உள்ளார்கள்.

நபார்டு (NABARD) வங்கி நிதி உதவியுடன் நிறைவேற்றப்படும் இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு 57.96 கோடி ரூபாய் ஆகும்.

இதில் 80 சதவிகிதம் தொகை அதாவது 46.37 கோடி ரூபாய் நபார்டு வங்கியிடமிருந்து கடனாகப் பெறப்படும். மீதமுள்ள 20 சதவிகிதம் தொகை அதாவது 11.59 கோடி ரூபாய் மாநில அரசின் பங்காக அமையும்.

தமிழகத்திலுள்ள கிராமச் சாலைகளின் தரம் உயர்த்தி ஒரு புதுவடிவம் அளிக்கும் இந்தப் பணிகள் அனைத்தையும் விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

★



# மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப எழுத்தாளர் மணிக்கொடி சீனிவாசன் அவர்களுக்கு நூற்றாண்டு விழா

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கம் தரவும் , தமிழ் வளர்த்த சான்றோர்களுக்கு விழா எடுத்துப் பெருமை சேர்க்கவும் தமிழ்ப் படைப்பாளிகளின் நூல்களை நாட்டுடைமையாக்கி பரிவுத்தொகை வழங்கி அவர்களுக்குச் சிறப்பு சேர்க்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சீரிய திட்டங்களைச் செயல்படுத்தியும் வருகின்றார்கள். அந்த வகையில் மணிக்கொடி இலக்கிய எழுத்தாளர்கள் வரிசையில் தலைசிறந்த இடத்தைப் பெற்றிருக்கின்ற மணிக்கொடி சீனிவாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக நடத்த ஆணை பிறப்பித்தார்கள். 2003–2004 ஆம் நிதி ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசும் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக் கேற்ப மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மணிக்கொடி சீனிவாசன் நூற்றாண்டு விழா நடத்துவது குறித்த அறிவிப்பினை வெளியிட் டார்.



தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும் மணிக்கொடி எழுத் தாளர்களின் பங்களிப்பு குறிப்பிடத் தக்கதாகும். மணிக்கொடி எழுத்தாளர் களில் திரு. சீனிவாசன் முதன்மை யானவர் ஆவார்.

தமிழ் இலக்கிய வட்டாரங்களில் மணிக்கொடி சீனிவாசன் என்கின்ற பெயர் அனைவரும் அறிந்த ஒன்றாகும். அவர் தற்போதைய நாகை மாவட்டம் சீர்காழியில் பிறந்தார்.

அவர் சென்னை மாநிலக் கல்லூரியில் பி.ஏ. (ஆனர்சு) பட்டம் பெற்றார். டெய்லி எக்ஸ்பிரஸ், ஸ்வராஜ்யா, ப்ரிபிரஸ் ஜெர்னல், சன், டான், பாம்பே ஸ்டண்டர்ட், இந்தியன் பார்லிமெண்ட் முதலிய பல ஆங்கிலப் பத்திரிகைகளிலும் தமிழ்ப் பத்திரிகையிலும் பணியாற்றினார். உண்மையும் நேர்மையும் தூய்மையும் கொண்ட செய்திகளை எழுதி நாட்டு மக்களிடம் விடுதலை உணர்வை ஊட்டி, மக்களை வீறு கொண்டு எழச்செய்தார். அந்நியர் ஆட்சியின் அடக்குமுறைக்கு ஆளான மணிக்கொடி சீனிவாசன் 1932–33இல் நாசிக் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு சொல்லொன்னாத் துயரத்துக்கு ஆளானார்.

தமது எழுத்தால், இலக்கிய படைப்புகளால், நாட்டு மக்களை தட்டி எழுப்பி அந்நியர் ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்த பெருமை மணிக்கொடி சீனிவாசன் அவர்களைச் சாரும்.

மணிக்கொடி சீனிவாசன் தமிழ்மொழிக்கு ஆற்றியுள்ள பணி அளப்பரியதாகும். ''மணிக்கொடி'' எனும் தமிழ் இதழைத் தோற்றுவித்து அதன் வாயிலாகத் தமிழ் மொழிக்கு இவர் ஆற்றிய பணிகள் ஏராளம், ஏராளம். இதனால் இவர் 'மணிக் கொடி சீனிவாசன்' என அழைக்கப்பட்டார்.

தமிழ், வடமொழி, ஆங்கிலம் என்று பலமொழிகளிலும் புலமையும் தேர்ச்சியும் பெற்றிருந்தார். சிறைச்சாலையில் இருந்தபோது திருக்குறளை, குறள் போலவே இரண்டு வரிகளில் ஆங்கிலத்தில் எழுபது ஆண்டுகளுக்கும் முன்னரே மொழிபெயர்த்தார்.

மணிக்கொடி சீனிவாசன், தற்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும் தமிழ் எழுத்தாளர்கள் பலருக்கு அடித்தளம் அமைத்து தந்தவர் ஆவார்.

மேலும் மகாகவி பாரதியையும் – அவரது படைப்புகளையும் தமிழ் மக்கள் நன்கு அறியும் வண்ணம் பறைசாற்றிய பெருமை மணிக்கொடி சீனிவாசனுக்கு உண்டு.

அவர், மகாத்மா காந்தியடிகள், மூதறிஞர் இராஜாஜி, எழுத்தாளர்கள் வ.ரா. திரு. சங்கு சுப்ரமணியம், திரு.சிட்டி, திரு.கல்கி கிருஷ்ணமூர்த்தி போன்ற பெருமக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

இத்தகைய பெருமைக்குரிய மணிக்கொடி சீனிவாசன் அவர்களின் நூற்றாண்டு விழா, தமிழ்நாடு




அரசின் சார்பில், கடந்த **30.12.2003** அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் பங்கேற்று மணிக்கொடி சீனிவாசன் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து சிறப்புரையாற்றி மாண்புமிகு தமிழக சட்டப்பேரவை தலைவர் டாக்டர். கா. காளிமுத்து அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது,

"மணிக்கொடி சீனிவாசன் அவர்களின் நூற்றாண்டு விழா இங்கே சிறப்பாக நடைபெறுகின்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழுக்காக உழைத்த பெருமக்களை மதிக்கின்ற மாண்பினை எண்ணிப் பார்க்கிறபோது, நாம் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். தமிழ் அறிஞர்கள், தமிழ் எழுத்தாளர்கள் வெவ்வேறு கருத்தோட்டங்களைக் கொண்டவர்களாக இருக்கலாம். இன்னும் சொல்லப் போனால் அவர்களுக்குள்ளே கூட கருத்து மோதல்கள் கூட இருக்கலாம். ஆனால் ஐந்து விரல்களும் ஒன்றாக இல்லையென்றாலும் ஐந்து விரல்களுக்கு பொதுவான உள்ளங்கை இருப்பதைப் போல, எந்தக் கருத்தோட்டத்தைக் கொண்ட தமிழறிஞராக இருந்தாலும், தமிழுக்கு உழைத்த பெருமக்கள் அரசால் பாராட்டப்படவேண்டும் என்கிற அழுத்தமான எண்ணத்தைக் கொண்டவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள். அந்த வகையிலேதான் மணிக்கொடி சீனிவாசன் அவர்களின் நூற்றாண்டு விழா இங்கே நடைபெறுகிறது.

இறவாத புகழ் படைத்தவர் மணிக்கொடி சீனிவாசன். தரம் வாய்ந்த பத்திரிகையை – சிறப்புக்குரிய பத்திரிகையை அவர்கள் நிறுவினார்கள். அவர் மிகச் சிறந்த பத்திரிகையாளராகத் திகழ்ந்தார்.

அவர் நிறுவிய மணிக்கொடி என்பது வணிக நோக்கத்திற்காக நிறுவப்பட்டது அல்ல. அவர் மணிக்கொடியில் கதை எழுதினார்; கட்டுரை எழுதினார். கவிதைகளும் எழுதினார். அவர் எழுதிய கவிதைகள் அற்புதத்திலும் அற்புதமாகும்.

அவர் ஆங்கிலத்திலே, வடமொழியிலே, பிரெஞ்சு மொழியிலே புலமை பெற்றவர். ஆங்கிலத்திலே புலமை பெற்றிருந்தால் ஆங்கிலேயர் காலத்தில் பெரிய பெரிய பதவிகளையெல்லாம் வகித்திருக்கலாம். ஆனால் ஆங்கிலத்திலே பெற்ற புலமையை அருந்தமிழை காப்பதற்காக, வளர்ப்பதற்காக பயன்படுத்தினார் என்பதை எண்ணிப் பார்க்கும்போது வியப்பு மேலிடுகிறது.

மணிக்கொடி சீனிவாசன் அவர்கள், தமிழைப்பற்றி, 'தமிழிலே தமிழிலே' என்ற தலைப்பில் கவிதை எழுதி தமிழை வளர்த்தார்.

இந்தியாவில் இருக்கிற எல்லா மொழிகளையும் விட பழமையான மொழி நம்முடைய தாய்மொழி என்பது

தெரியும். ஆனாலும்கூட, இதைச் செம்மொழியாக்க வேண்டும் என்பது இன்னும் கோரிக்கையாகவே இருக்கிறது.

மணிக்கொடி சீனிவாசன் போன்ற பெருமக்கள் வளர்த்த அந்தத் தமிழை மத்திய அரசு செம்மொழியாக ஆக்க வேண்டும் என்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கோரிக்கையை நான் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

மணிக்கொடி சீனிவாசன் அவர்களது புகழ் என்றென்றைக்கும் குன்றாமல் குறையாமல் தமிழ் உள்ளவரைக்கும் நிலைத்து நிற்கும்'' என்பதில் ஐயமில்லை.

விழாவிற்கு தலைமை வகித்த மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.செம்மலை அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது,

“தமிழகத்தினுடைய முதல்வர் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுடைய நல்லாட்சியில், மதிக்கப்பட வேண்டியவர்கள் மதிக்கப்படுகிறார்கள். போற்றப்பட வேண்டியவர்கள் போற்றப்படுகிறார்கள். பாராட்டப்பட வேண்டியவர்கள் பாராட்டப்படுகிறார்கள் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

நம்முடைய முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள், இந்த ஆண்டு தமிழ் வளர்ச்சித் துறையினுடைய மானியக் கோரிக்கையின்போது, மணிக்கொடி சீனிவாசன் அவர்களுக்கு, அரசின் சார்பிலே நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் என்ற நல்ல அறிவிப்பை தெரிவிக்கச் செய்தார்கள்.

மணிக்கொடி சீனிவாசன் அவர்கள் தமிழ் மொழி வளர அரும்பாடுபட்டவர். அந்தத் தமிழ் மொழியை வளர்த்தவர். சிறந்த தேச பக்தர். சுதந்திரப் போராட்ட வீரர் என்றெல்லாம் அவரைப் பற்றி அவருடைய சிறப்புகளைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துக் கூறினார்கள். அவர்களுடைய பேச்சுக்களிலே இருந்து இங்கே நான் புரிந்து கொண்டது, மணிக்கொடி சீனிவாசன் அவர்கள் நாட்டையும் தமிழ் மொழியையும் இரு கண்களாகப் பாவித்தார் என்பதைத்தான்.

மணிக்கொடி சீனிவாசன் அவர்கள் தமிழ் இலக்கியம் என்ற ஆலமரத்தை நீரூற்றி வளர்த்தவர்களில் ஒருவர் ஆவார்.

பத்திரிகைகள் எப்படி இருக்க வேண்டும் – அந்தப் பத்திரிகைகளை நடத்துபவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக இருந்துவந்தார் மணிக்கொடி சீனிவாசன் அவர்கள்.

**நயாகரா**

**உலகப்புகழ் பெற்ற நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அருகில் உள்ள நயாகரா ஆறு அமெரிக்கா, கனடா ஆகிய இருநாடுகளுக்கும் எல்லையாக இருந்து வருகிறது. இந்த நயாகரா ஆற்றின் ஒரு பக்கக் கரையில் அமெரிக்காவும் மறு பக்கக் கரையில் கனடாவும் உள்ளன.**

பேரறிஞர் அண்ணா அவர்கள் மணிக்கொடி சீனிவாசன் அவர்கள் நடத்திய அந்தப் பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்று பாராட்டியிருக்கிறார்கள் என்றால், – அவர் எப்படிப்பட்டவராக இருந்திருக்கிறார் – எத்தகைய பெருமைக்குரியவராக திகழ்ந்திருக்கிறார் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. அப்படிப்பட்ட ஒரு நல்ல எழுத்தாளருக்கு – ஒரு நல்ல இலக்கியவாதிக்கு – ஒரு சிறந்த தேச பக்தருக்கு – தமிழை வளர்த்த அறிஞருக்கு இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு சிறப்பு செய்கின்ற வகையில் இந்த நூற்றாண்டு விழா நடைபெறுகிறது.

விழாவில் பங்கேற்ற மணிக்கொடி சீனிவாசன் அவர்களின் மகள் ராதா சீனிவாசன் அவர்களுக்கும், மகன் ஜெயதேவ் சீனிவாசன் அவர்களுக்கும் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர். கா. காளிமுத்து மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. செம்மலை ஆகியோர் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தனர். விழாவில் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை செயலாளர் திரு. பு.எ.இராமையா இ.ஆ.ப, தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் திரு. இ.சுந்தரமூர்த்தி, எழுத்தாளர்கள் திரு. பெ.கோ. சுந்தரராஜன் (சிட்டி), திரு.வல்லிக் கண்ணன், திரு.பெ.சு.மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். விழாவின் தொடக்கத்தில் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர். ம.இராசேந்திரன் வரவேற்புரை யாற்றினார். விழா முடிவில் துணை இயக்குநர் திரு. வை. கண்ணபுர கண்ணன் நன்றி கூறினார். விழாவிற்கான ஏற்பாடுகளை தமிழ் வளர்ச்சித் துறை சிறப்பாக செய்திருந்தது.

• • •

# சேலம் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் சிறப்பான செயல்பாடுகள்

வறுமையில் வாழும் பெண்களின் நலத்திற்கும் முன்னேற்றத்திற்காகவும் அவர்களை சுயஉதவிக் குழுக்களாகச் சேர்த்து ஒற்றுமைப்படுத்தி பொருளாதார மேம்பாடு அடைய வழிவகை செய்து, பயிற்சிகள் அளித்து, சிறு தொழில்கள் செய்வதற்கு ஊக்குவித்து, சமுதாய நலப் பணிகளில் ஈடுபடச் செய்து மகளிர் முன்னேற்றமடையும் வண்ணம் சேலம் மாவட்டத்தில் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறார்கள்.

மகளிர் குழு சுதந்திரத்துடன் பணிபுரிந்திடவும் தொழில் செய்திடவும் கல்வி கற்று மேம்பாடு அடையவும் தங்கு தடையின்றி எங்கு சென்றாலும் கௌரவத்துடன், தன்னம்பிக்கையோடு வாழவும் வளரவும் சாதி–மத பேதமின்றி பெண்–ஆண் சமத்துவம் நிலை நாட்டும் உயரிய உலகைப் படைக்கவும் நாம் உதவிடல் வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் 5,901 மகளிர் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு 99,236 பேர் உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் ரூ.1677.16 இலட்சங்கள் சேமிப்பு செய்துள்ளனர். இதுவரையில் 4,871 குழுக்களுக்கு ரூ.2,649.23 இலட்சங்கள் வங்கிக்கடனாக அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சியில் மகளிர் குழுக்கள் அமைப்பதில் தீவிர கவனம் செலுத்தப்பட்டு இதுவரையில் 1,274 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தில் மொத்தமுள்ள 385 ஊராட்சிகள் அனைத்திலும் பஞ்சாயத்து அளவிலான இணையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தற்போது வட்டார அளவிலான இணையம் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நவம்பர் 2003ஆம் மாதத்தில் வங்கிக் கடன் அனுமதிக்கப்பட்டு நிலுவையிலுள்ள அனைத்து குழுக்களுக்கும் கடன் வழங்க வங்கிகள் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன.

### தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் செயல்பாடுகள்

தற்போது மகளிர் திட்டத்தின் கீழ் 14 தொண்டு நிறுவனங்கள் 20 ஒன்றியங்களில் செயல்பட்டு வருகின்றன. நெசவாளர், மகளிர், மீனவர்கள், துப்புரவுப் பணியாளர்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கு அதிக முன்னுரிமை வழங்கி 2002–2003ஆம் ஆண்டில் 911 மகளிர் குழுக்களை ஏற்படுத்த தொண்டு நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட அதிகமாக அதாவது 973 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் டான்வா, மாதர் சங்கம், வனத்துறை குழுக்கள் அடங்கும்.

### மகளிர் திட்டக் குழுக்களுக்குப் பயிற்சி

மகளிர் திட்டத்தில் பெண்கள் சமூகப் பொருளாதார மேம்பாடு அடைவதற்கும் விழிப்புணர்வு பெறவும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிலுள்ள பயிற்சி பெற்ற பயிற்றுநர் மூலமாகப் பயிற்சிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 1,14,079 ஊக்குநர், பிரதிநிதி மற்றும் உறுப்பினர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு உதவித் தொகையாக ரூ.73.72 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. தொண்டு நிறுவனங்கள் அமைந்துள்ள புதிய குழுக்களுக்கு நடப்பு மாதத்தில் பயிற்சிகள் வழங்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

2002–2003ஆம் ஆண்டில் 16,584 நபர்களுக்கு ரூ.3,87,265 செலவிடப்பட்டுள்ளது. 2003–2004ஆம் ஆண்டில் இந்நாள் வரை 15,924 நபர்களுக்கு குழு உறுப்பினர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



**மகளிர் திட்டக் குழுக்களுக்கு நியாய விலைக் கடைகள் ஒதுக்கீடு செய்தல்**

போதிய நிதி வசதியுடன் நன்முறையில் செயல்பட்டு வரும் மகளிர் குழுக்கள், நியாய விலைக் கடைகளை ஏற்று நடத்த முன் வந்தால் அவற்றை அரசு ஒதுக்கீடு செய்ய ஆணை பிறப்பித்ததனைத் தொடர்ந்து தற்போது 4 மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஓமலூர் வட்டாரம், மல்லாக் கவுண்டனூர், பாவனூர் மற்றும் செல்லப்பிள்ளைக் குட்டை, கொளத்தூர் வட்டாரம், தார்க்காடு ஆகிய நியாயவிலைக் கடைகளை நன்முறையில் நடத்தி வருகின்றன. மேலும் நியாயவிலைக் கடையினை ஏற்று நடத்திட விருப்பமுள்ள தகுதியுள்ள இதர மகளிர் சுய உதவிக் குழுக்களைத் தேர்வு செய்து பரிந்துரைக்க தொண்டு நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கப் பட்டுள்ளது.

**மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி**

சேலம் மாவட்டத்தில் 2001–2002ஆம் ஆண்டில் 4,701 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும் 2002–2003ஆம் ஆண்டில் 6,449 உறுப்பினர்களுக்கும் தொழில் முனைவோர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

2003–2004ஆம் ஆண்டிற்கான தொழில் முனைவோர் பயிற்சிக்காக 7,000 நபர்கள் பல்வேறு துறைகள் மூலமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதில் 3,965 பேருக்கு மகளிர் தொழில் முனைவோர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**தொழில் திறன் பயிற்சி**

சேலம் மாவட்டத்தில் 2002–2003ஆம் ஆண்டில் தொழில் முனைவோர் பயிற்சி பெற்றுள்ள மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் 1,767 நபர்களுக்கு, பல்வேறு துறைகள் மூலம் தொழில் திறன் பயிற்சி வழங்கப் பட்டுள்ளது. இதில் மகளிர் திட்டம் மூலமாக 966 நபர்களுக்கு ரூ.5.32 இலட்சத்தில் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது.

2003 – 04ஆம் ஆண்டிற்கான தொழில் திறன் பயிற்சி இதுவரை 454 நபர்களுக்கு ரூ.2.11 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ள ரூ.4.34 இலட்சம் தொகைக்கான தொழில் திறன் பயிற்சி வழங்கிடும் பொருட்டு பயனாளிகள் தேர்வு செய்து விரைவில் பட்டியல் அனுப்ப தொண்டு நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கப் பட்டுள்ளது.



**அனைத்து அரசுத் துறையினரையும் ஒருங்கிணைத்து செயல்படுதல்**

சேலம் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு துறையினரும் மாதா மாதம் நடைபெறும் வட்டார அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் அரசின் செயல்பாடுகளை மகளிர் குழு பிரதிநிதிகளுக்கு விளக்கிடும் பொருட்டு வட்டார அளவிலான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்ட கால அட்டவணையினை மாவட்ட ஆட்சியரின் முகப்புக் கடிதத்துடன் இணைத்து அனைத்துத் துறை மாவட்ட அலுவலர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் அனுப்பப்பட்டு வருகிறது.

**சேலம் மாவட்டத்தில் 2003-2004ஆம் ஆண்டிற்குப் புதிய மகளிர் குழுக்கள் அமைத்தல்**

2003–04ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் புதிய குழுக்கள் துவக்கிட 911 குறியீடு நிர்ணயிக்கப் பட்டுள்ளதில் நவம்பர் 2003ஆம் மாதம் முடிய 827 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள இலக்கினை எய்திட மீனவர்கள், விலைமாதர்கள், அரவாணிகள், நெசவாளர் மகளிர், துப்புரவுப் பணியாளர்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மகளிர், உடல் ஊனமுற்றோர், கைவினைக் கலைஞர்கள், கலப்பினக் குழுக்கள் அமைக்க தொண்டு நிறுவனங்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதில் ஆண்களுக்கென இளைஞர் சுய உதவிக் குழுக்கள் நேரு யுவகேந்திரா தொண்டு நிறுவனம் மூலம் அமைக்கப்பட்டு வருகிறது. ஆண்டுக் குறியீடான 150இல் இதுவரை 120 குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் 2001–2002 முடிய ஆண்டுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள புதியதாகத்

திருமணமான மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர் / உறுப்பினர் மகள் ஆகியோருக்கு ஒரு முறை மட்டும் இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கிட சேலம் மாவட்ட இலக்கு 203 என நிர்ணயிக்கப்பட்டதில் இலக்கிற்கு அதிகமாக மொத்தம் 253 பயனாளிகளுக்கு இலவச எரிவாயு இணைப்பு சேலம் மகளிர் திட்ட அலுவலகத்தால் வழங்கப்பட்டது.

தற்போது 2002–2003 ஆம் ஆண்டுக்கு, இத்திட்டத்தில் 400 பயனாளிகளுக்கு இலவச எரிவாயு இணைப்பு வழங்கிட சென்னை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்களால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 97 பயனாளிகள் இவ்வலுவலகம் மூலம் தேர்வு செய்யப்பட்டு எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டும், மேலும் 54 நபர்களது விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் வருகிறது. எஞ்சியுள்ள 249 தகுதியுள்ள பயனாளிகளைத் தேர்வு செய்து அனுப்பிட தொண்டு நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளன.

**கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.2000/- வரை பேறுகாலக் கடன் மற்றும் உறுப்பினர்களுக்கு சிறுவணிகக் கடன் வழங்குதல்**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக இதுவரை சேலம் மாவட்டத்தில் 657 கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.13.12 இலட்சம் பேறு காலக் கடனாகவும் மற்றும் 289 மகளிர் குழு உறுப்பினர்களடங்கிய 34 குழுக்களுக்கு தலா ரூ.2000/– வீதம் ரூ.5.78 இலட்சம் சிறு வணிகக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டங்களின் கீழ் தகுதியான மகளிர் குழு உறுப்பினர்கள் அதிக அளவில் பயனடைய தீவிர நடவடிக்கை மேற்கொள்ள தொண்டு நிறுவனங்களுக்குத் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**கிஷோரி சக்தி யோஜனா 2002-2003**

கிஷோரி சக்தி யோஜனா 2001–2002 திட்டத்தில் சேலம்–1, சேலம்–2, கெங்கவல்லி, பெத்தநாயக்கன் பாளையம் ஆகிய நான்கு குழந்தைகள் ஊட்டச்சத்துத் திட்ட அலுவலகப் பகுதிகளிலிருந்து தேர்வு செய்யப்பட்ட 120 வளர் இளம் பெண்களுக்கு வாழ்க்கைத் தொழில் கல்வி, தொழில் முனைவோர் பயிற்சி மற்றும் பல்வேறு இனங்களில் (தையற்கலை, அழகுக்கலை, காகிதப் பொருட்கள் தயாரிப்பு) தொழில்திறன் பயிற்சி வழங்கப்பட்டது.

**அந்தூரியா செடிகள் வளர்த்தல்**

சேலம் மகளிர் திட்டம், மாவட்ட தொழில் மையம், தோட்டக் கலைத்துறை மற்றும் தாட்கோ அலுவலகங்கள் இணைந்து புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்காட்டில் தீபம் தொண்டு நிறுவனத்தினரால் தொடங்கப்பட்ட ஏற்காடு பஞ்சாயத்து அளவிலான 12 உறுப்பினர்கள் இணைந்து அந்தூரியா மலர்ச்செடிகள் 1 ஏக்கர் பரப்பளவில் சுமார் ரூ.25 இலட்சம் முதலீட்டில் வளர்த்திட முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளது. திட்டத்தினை செயல்படுத்திட 1 ஏக்கர் ஊராட்சி ஒன்றிய நிலத்தினை சுமார் 30 வருட குத்தகைக்குத் தர நட்வடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வேளாண்மைத் தொழில்நுட்ப அடிப்படைப் பயிற்சி**

சேலம் மாவட்டத்தில் 2003–04 ஆம் ஆண்டில் 1,000 மகளிர் குழு உறுப்பினர்களுக்கு வேளாண்மை தொழில் நுட்ப அடிப்படைப் பயிற்சி வழங்கிட தெரிவிக்கப்பட்டதில், இதுவரை 417 நபர்களுக்கு வேளாண்மைத்துறை மூலமாக பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது 180 நபர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், மகளிர் குழுக்களின் விருப்பத்தின் பேரில் ஏற்காட்டில் பழரச தயாரிப்புத் தொழிற்சாலை ஏற்படுத்துதல், கூரியர் சர்வீஸ் துவக்குதல், ஊட்டச்சத்து மாவு உருண்டைகள் தயாரித்தல், தரிசு நில மேம்பாடு திட்டத்தினைச் செயல்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபடுத்த பல்வேறு துறைகள் மற்றும் தொண்டு நிறுவனம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் பெண்களுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் அவர்கள் முழு ஆற்றலுடன் திறமைகளை வளர்க்கவும், வெளிப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதனால், பெண்களும் அவர்களின் குழந்தைகளும், குடும்பத்தினரும் சமுதாயமும் மேம்படுவதற்கு வழிவகைகள் ஏற்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

நம் ஆன்றோர்கள், சான்றோர்கள், பாவலர்கள் பெண்களின் மேம்பாடு குறித்து கண்ட கனவு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் நனவாக்கப்பட்டு வருகின்றது என்றால் அது மிகையல்ல.

- மூ.நா. கிருட்டிணசாமி
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
சேலம்.

* * *

## திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மக்களின் பங்கேற்பில் உருவான மகத்தான பள்ளிக்கூடம்

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ஒற்றுமையின் உயர்வுக்கு ஓர் அடையாளமாக திகழ்கிறது மணச்சநல்லூர். திருச்சிராப்பள்ளியிலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு நடுத்தர கிராமம். அரிசி ஆலைகள் நிறைந்த இந்த ஊர் தரமான அரிசிக்கும் புகழ் பெற்றது.



"ஆலைகள் வைப்போம், கல்விச்சாலைகள் வைப்போம்'' என்று பாடினார் பாரதியார். அதன்படி அரிசி ஆலைகள் அமைத்து தரமான அரிசி வழங்கிய அவ்வூர் மக்கள் அடுத்து கல்விச்சாலைகள் அமைக்க உறுதி பூண்டனர்.

*"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு''* என்கிற வள்ளுவர் வாக்கினை நன்குணர்ந்த மணச்சநல்லூர் பொதுமக்கள், நம் பிள்ளைகளும் நன்கு கல்வியறிவு பெற்று வளர வேண்டும், நம் ஊரிலும் ஒரு பள்ளிக்கூடம் அமைய வேண்டும். அதற்கான வழிமுறைகளை நம் ஊர் பொதுமக்களே செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

அதன்படி 1949ஆம் ஆண்டு அரிசி ஆலை சங்கமும் பொதுமக்களும் ஒன்று சேர்ந்து நிதி திரட்டி மணச்சநல்லூரில் ஒரு நடுநிலைப்பள்ளியைக் கட்டினார்கள். பள்ளியின் இருப்பிடம் 4.8 எக்டேர் பரப்பளவு கொண்டது.

அவ்வாறு தொடங்கப்பட்ட அப்பள்ளி கடந்த 50 ஆண்டுகளாக சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. காலப்போக்கில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததாலும் ஆசிரியர்கள் எண்ணிக்கை அதிகரித்ததாலும் பழைய கட்டடத்தில் பள்ளிக்கூடம் செயல்படுவதில் உள்ள சிரமத்தை ஆசிரியர்களும், பொதுமக்களும் உணர்ந்தனர்.

பள்ளிக்கூடம் தொடங்கி 50 ஆண்டுகள் கடந்துவிட்டபடியால், பொன்விழா கொண்டாடவும், அதே நேரத்தில் புதிய கட்டடம் கட்டி நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தவும் விரும்பினார்கள். அதன்படி அதற்காக செயல்பட பள்ளித் தலைமையாசிரியர் தலைமையில் பொன்விழாக் குழு அமைத்தார்கள். பொன்விழாக் குழுவில் ரூ.30 இலட்சம் செலவில் 12 அறைகள் கட்ட தீர்மானிக்கப்பட்டது.

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்'' என்கிற எண்ணத்தில் எதற்காகவும் காத்திராமல் முதன்முதலாக அப்பள்ளியின் ஆசிரியர் குழாம் தங்கள் பங்குத் தொகையாக ரூ.50,000/– நிதியில் கட்டடப் பணி தொடங்கப்பட்டது.

"இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள''

– என்கிற திருவள்ளுவரின் வாக்குப்படி, மணச்சநல்லூர் அரிசி ஆலை அதிபர்கள், வணிகர்கள், பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர், ஊர் பொது மக்கள், பிற ஊர்களைச் சேர்ந்த கொடை உள்ளம் கொண்டவர்கள் ஆகியோர் கொடுத்த நிதி ரூ.22.75 இலட்சம் ஆகும்.

மேலும் முசிறி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. மல்லிகா சின்னசாமி அவர்களின் ஒதுக்கீட்டிலிருந்து ரூ.4.5 இலட்சமும், பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.5 இலட்சமும் பெறப்பட்டது.



பொன்விழாக்குழு எடுத்த அரிய முயற்சியின் பயனாக ரூ.80 இலட்சம் நிதி சேர்க்கப்பட்டு, பள்ளிக் கட்டடத்தின் தரை தளமும் முதல் தளமும் சேர்ந்து 33,000

சதுர அடியில் 30 வகுப்பறைகள் கட்டப்பட்டு, பொன்விழாக் கட்டடம் எழிலார்ந்த பூர்வமாகக் காட்சி அளிக்கிறது.

மணச்சநல்லூர் மக்களின் ஒற்றுமைக்கு சான்றாக திகழும் இந்த அழகிய மேல்நிலைப்பள்ளி கட்டடத்தை கடந்த 10.12.2003 அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.எஸ்.செம்மலை அவர்கள் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.ப.அண்ணாவி அவர்கள் விழா பொன்மலரை வெளியிட்டார்கள். இவ்விழாவிற்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் க.மணிவாசன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையேற்றார்கள்.

இவ்வரிய செயலை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பாராட்டிப் பேசியதாவது,

"கல்வியைப் போல பரிசுத்தமான பொருளை எங்கும் காண முடியாது", என தத்துவஞானி ப்ளாட்டோ கூறிய கருத்தை இந்த ஊர் பொதுமக்கள் தெரிந்து வைத்திருக்கின்றனர். ஒவ்வொரு குழந்தைக்கும் அழியாத சொத்து என்னவென்றால், கல்வி. அதை உங்கள் குழந்தைகளுக்கு கொடுத்துள்ளீர்கள் என்று கூறினார்.

**- கோ. பன்னீர்செல்வம்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.



"தமிழைக் கற்றவர்கள் மதிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே, ஓரளவுக்கு நிம்மதியை அளிக்கும் வகையில் சில ஏற்பாடுகளை நாம் செய்து வருகிறோம்.

நமது நாடு, நமது மக்கள், நமது மொழி என்ற உணர்வு நமக்கு வேண்டும்.

பள்ளிகளில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடவேண்டும் என்று உத்தரவு போடவேண்டும். இசைத் தட்டுகளில் ஒலித்தால் மட்டும் போதாது. மாணவர்களுக்கும் அந்தப் பாடல் பாடம் ஆக வேண்டும். எவ்வளவோ நாட்டில் எழுதப்படுகின்றன. ஒரு பத்து, பன்னிரண்டு வரிகளையாவது நாம் மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டால் அது நமக்குக் கட்டாயம் பயன்படும்.

திருக்குறள் 2 வரிகளில்தான் எழுதப்பட்டிருக்கிறது. திருவள்ளுவர் யாருக்காக எழுதினார்? தமிழர்களுக்குப் பயன்படுவதற்காக எழுதினார். தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படுவதற்காக – தன் குடும்பத்திற்காக அல்ல. தனக்காக அல்ல! 2000 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்தில் தமக்குப் பாராட்டுக் கிடைக்கும் என்பதற்காக அவர் எழுதவில்லை. அவர் தனது கடமையைச் செய்தார். அதன் பலன், இன்று தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கிறது".



*– 1984 ஆம் ஆண்டு திருவள்ளுவர் திருநாளில்*
*டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்*
*ஆற்றிய உரையிலிருந்து.*



# இரத்த அழுத்தம் ஒரு பார்வை

நமது உடலின் போக்குவரத்து சாதனம் இரத்தம். இது உடலெங்கும் சுற்றி எல்லா செல்களுக்கும் ஆக்சிஜனையும் ஊட்டச் சத்துக்களையும் வழங்குகிறது. அவைகள் வெளியிடும் கழிவுப் பொருள்களை மீண்டும் சுத்திகரிப்பு சாலைக்கு எடுத்துச் செல்லுகிறது. உடலெங்கும் இரத்த ஓட்டம் சீராக நடைபெற உதவும் பம்ப் இருதயம் என்பது தெரியும். ஆனால் இரத்தக் குழாய்களில் இரத்தம் செல்ல உதவும் விசை எதுவென்று எத்தனை பேருக்குத் தெரியும்? அந்த விசை இரத்த அழுத்தம். இரத்த நாளங்களின் வழியாகச் செல்லும் இரத்தம் அந்த நாளச் சுவர்களின் மீது ஒரு குறிப்பிட்ட அளவு அழுத்தத்தை உண்டாக்குகிறது. பொதுவாக இது ஒரே நிலையாக இருக்கும். ஏதேனும் வேறுபாடுகள் இருந்தாலும் அது குறிப்பிடத்தக்க நிலையில் இருக்காது.

இடது வெண்ரிக்கிள் சுருங்கும்போது இரத்தத்தை வேகத்துடன் மகாதமனிக்குள் செலுத்துகிறது. வேகத்தையும், நேரத்தையும் கணக்கிடும் காலமாயிற்றே இது. வெறும் வேகம் என்று சொன்னால் போதுமா? எத்தனை வேகம் என்று சொல்ல வேண்டாமா? ஏறக்குறைய மணிக்கு 1.4 கிலோ மீட்டர் வேகத்தில் செலுத்துகிறது. இந்த வேகத்தில் மகாதமனிக்குள் நுழையும் இரத்தம் குறுந்தமனிகளை அடையும்போது அதன் வேகம் மணிக்கு 72 மீட்டர்கள்! தந்துகிகளில் செல்லும்போது அதன் வேகம் 18 மீட்டர்கள்!

இடது வெண்ரிக்கிளிலிருந்து துவங்கிய உடன் மகாதமனி பல கிளைகளாகப் பிரிகிறது. இக்கிளைகள் மேலும் பல கிளைகளாகவும் மாறுகிறது. இவைகள் இவ்வாறு பிரியப்பிரிய சிறு நாளங்களின் குறுக்களவு படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகிறது. இவைகளின் வழியாக வரும் இரத்தத்தின் வேகமும் குறைந்து விடுகிறது. ஆனால் இவைகள் இரத்த விநியோகம் செய்யும் பரப்பு அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இரத்த அழுத்தம், இரத்த சுழற்சியின் ஆரம்பத்தில் அதிகமாக உள்ளது. பின்னர் படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகிறது. இரத்த அழுத்தம் என்பது இரத்தம் அது செல்லும் நாளங்களின் பக்கச்சுவர்களில் ஏற்படுத்தும் அழுத்தம். ஆரம்பத்தில் அழுத்தம் அதிகமாக இருப்பதற்குக் காரணம் வேகம். வேகம் குறையக் குறைய அழுத்தமும் குறைந்து கொண்டே வருகிறது. இரத்த அழுத்தம் என்று சொல்லும்போது தமனிகள், குறுந்தமனிகள், தந்துகிகள், சிரைகள் ஆகியவற்றில் ஏற்படும் அழுத்தத்தையும் குறிப்பதுதான். ஆனால் பொதுவாக கணக்கிடுவது பெரிய தமனிகளின் அழுத்தத்தைத்தான்.

ஏறக்குறைய 57 கிராம் அளவு ஆக்சிஜனூட்டம் பெற்ற புதிய இரத்தம் ஒவ்வொரு இருதயத்துடிப்பின் போதும் இருதயத்திலிருந்து வெளி செலுத்தப் படுகிறது. உடலெனும் உலகிலுள்ள ஒரு இலட்சம் கிலோமீட்டர் நெடுஞ்சாலைகளில் (இரத்த நாளங்களில்) சுற்றுலாவை ஆரம்பிக்கிறது. அவ்வாறு வர அதற்குத் தேவையான விசை அல்லது அழுத்தம் தேவை. இந்த அழுத்தம் வெப்ப இரத்தவோட்ட உயிரினங்கள் எல்லாவற்றிடையேயும் அனேகமாக சமமாக இருக்கும். சிறிய உயிரினமாக இருந்தாலும் பெரிய உயிரினமாக இருந்தாலும் சரி இரத்த அழுத்தம் ஏறக்குறைய ஒரே மாதிரி இருக்கும். இருதயத் துடிப்பு வீதம்போல் வேறுபாடுகள் இருக்காது.



இரத்த அழுத்தம் பொதுவாக எவ்வித பாதிப்பும் இல்லாதவர்களிடையே அவர்களது வயதுடன் 100ஐக் கூட்டினால் வரும் எண் சுருக்கு அழுத்தமாகவும் விரிவழுத்தம் 60 முதல் 80 மில்லி மீட்டர் பாதரசமாகவும் இருக்கும். உடலின் தேவை தன்மைக்கேற்ப

இரத்தஅழுத்த வேறுபாட்டைக் கட்டுப்படுத்தும் சிக்கலான அமைவுகள் உடலில் உள்ளன.

இரத்த அழுத்தம் இரத்த நாளங்களின் வழியே செல்லும் இரத்தம் அவைகளின் சுவர்களில் ஏற்படுத்தும் விசை அல்லது அழுத்தம் என்று தெரிந்து கொண்டோம். குறுந்தமனிகளிலும் தந்துகிகளிலும் இரத்தம் மிக மெதுவாகச் செல்லுகிறது. இதனால் தமனிகளில் இரத்த அழுத்தம் சிரைகளின் அழுத்தத்தை விட அதிகமாக இருக்கும். அதாவது தமனியில் இரத்தம் எப்போதும் நிறைந்திருக்கும்.

ஒவ்வொரு முறை இருதயம் சுருங்கும் போதும் தமனிகளில் அழுத்தம் அதிகமாகிறது. அது விரிவடையும் போது அழுத்தம் குறைகிறது. எனவே இரத்த அழுத்தத்தைப் பார்க்கும்போது இருவகை அழுத்தங்கள் இருப்பது தெரியும். இருதயம் சுருங்கும்போது ஏற்படும் அழுத்தம் அதிகமாக இருக்கும். விரிவடையும்போது ஏற்படும் அழுத்தம் குறைவாக இருக்கும்.

இரத்த அழுத்தம் எல்லோருக்கும் எப்போதும் 120/80 மி.மீ. என்று இருக்க வேண்டிய அவசியமில்லை. இது வயது, உயரம், எடை, பாலினம், நோய் ஆகியவற்றை ஒட்டி மாறுபடும். இரவில் ஓய்வெடுக்கும் போது அழுத்தம் குறைவாக இருக்கும். வயதாக ஆக அதிகரித்துக்கொண்டு போகும். ஆண்களை விட பெண்களுக்கு இரத்த அழுத்தம் அதிகம்.

பிறந்த குழந்தைக்கு சுருக்கழுத்தம் 40 மி.மீ. பாதரசம் இருக்கும். பிறந்த ஒரு மாதத்தில் இது 80 மி.மீ. ஆக உயர்ந்துவிடும். விரிவழுத்தம் 40 மி.மீ. ஆக இருக்கும். பொதுவாக இளங்குழந்தைகளிடையே இரத்த அழுத்தம் 80/40 அல்லது 90/50 மி.மீ ஆக இருக்கும்.

அதிக உடலுழைப்பு, தேகப்பயிற்சி, மனப்பதற்றம் போது இரத்த அழுத்தம் அதிகரிக்கிறது. உடலுக்கு அதிகப்படியான ஆக்சிஜனூட்டம் தேவைப்படும் நிலையில் இருதயம் துரிதமாக இயங்குகிறது. இரத்தத்தை விசையுடன் தமனிக்குள் செலுத்த விரைந்து வரும் இரத்தம் தமனிச் சுவர்களில் அதிக அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இம்மாதிரி நேரங்களில் சுருக்கழுத்தம் 180 மி.மீ. பாதரசம் என்ற அளவில் உயர்ந்து விடும். இது தற்காலிகமாக ஏற்படுவது. எனவே இதனால் பயம் ஒன்றுமில்லை.

இரத்த மிகை அழுத்தம் என்பது பொதுவாக ஒரு நோயல்ல. இது நோய்க்குறிகளில் ஒன்று. சுருக்கழுத்தம் 140ம் அதற்கு மேலும், விரிவழுத்தம் 90ம் அதற்கு மேலும் இருந்தால் அது இரத்த மிகை அழுத்தம் என்கிறது, அமெரிக்காவிலுள்ள நேஷனல் இன்ஸ்டிடுயூட் ஆப் ஹெல்த். ஏனினும் சுருக்கழுத்தம் 100 முதல் 140 மி.மீ. என்பது சாதாரணம். வயது முதிர்ந்தவர்களிடையே சுருக்கழுத்தம் 150 ஆகவும் விரிவழுத்தம் 90 ஆகவும் இருப்பதுண்டு. 60 வயதிற்கு மேற்பட்டவர்களிடையே 160/90 ஆக இருப்பதும், 75 வயது ஆனவருக்கு 170/100 மி.மீயும் இயல்புதான்.

இந்த இயல்பான அளவிற்கு மேல் போகும் ஒவ்வொரு 10 மி.மீ.யும் இருதய நோய்களும் வன்தாக்கிற்கும் வழிவகுக்கும். சுருக்க அழுத்த அதிகரிப்பை விட விரிவழுத்த அதிகரிப்பு கவலைக்கிடமானது.

இரத்த மிகை அழுத்தம் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. 5 முதல் 10 சதவிகிதம் சிறுநீரகக் கோளாறுகள், தமனி நாளச் சுருக்கம் குறிப்பாக சீறுநீரகத் தமனிகளில் ஏற்படும் குறுக்கும், அட்ரினல் சுரப்பியின் மிகை சுரப்பு அல்லது அட்ரினல் சுரப்பியில் கட்டி ஆகிய காரணங்களினால் ஏற்படுகிறது. எப்போதும் எதிலும் பரபரப்பு, படபடப்பு, துரிதம் ஆகியவற்றையும் சொல்லலாம். 90 சதவிகித நேர்வுகளில் இரத்த மிகை அழுத்தத்திற்குரிய காரணங்களைக் கண்டறிய முடியாது.

காரணமறிய முடியாத இரத்த மிகை அழுத்தத்திற்கு முதனிலை இரத்த மிகை அழுத்தம் என்று பெயர்.

முதனிலை இரத்த மிகை அழுத்தம் எதனால் உண்டாகிறது என்பதற்குச் சரியான காரணங்கள் தெரியாது. எனினும் அது ஏற்பட தூண்டுகோலாக இருப்பவைகள்:

1) உப்பு 2) தமனி படர்வடு 3) உடற்பருமன் (எடை) 4) ஈஸ்ட்ரோஜன் 5) பரம்பரை ஆகியவைகள் ஆகும்.

உயிர்வாழ உப்பு மிகத் தேவை. உடலின் தண்ணீர் சமநிலையைப் பேண, திசுக்களிடையே தண்ணீரைத் தக்க வைத்துக்கொள்ள உப்பின் உதவி மிக அவசியம். ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமே. நாள்தோறும் ஆயுள் முழுவதும்

உப்பைச் சேர்த்துக் கொண்டே வந்தால் அளவிற்கு மீறி விடுகிறது. மிகை அழுத்தத்தில் கொண்டு போய் முடிகிறது.



ஆஸ்திரேலிய ஆதிக் குடியினர், எஸ்கிமோக்கள் மற்றும் உலகில் பல பகுதிகளில் வாழும் பழங்குடியினர் உணவில் உப்பை மிகச்சிறிய அளவிலேயே சேர்த்துக் கொள்ளுகின்றனர். இந்தக் குழுவினரிடையே மிகை அழுத்தம் என்பதே கிடையாது. இன்னும் சொல்லப் போனால் வயதாக ஆக இவர்களிடையே இரத்த அழுத்தம் குறைந்து கொண்டுதான் வருகிறது.

இதற்கு நேர்மாறான நிலையிலிருப்பவர்கள் சாலமன் தீவுகளிலுள்ள பழங்குடிகளில் ஓர் இனமும், ஜப்பானின் வட பகுதியில் வாழும் விவசாயிகளும் முன்னவர்கள் காய்கறிகளை கடல் நீரில் வேக வைப்பதின் மூலமும் தினமும் உட்கொள்ளும் உப்பின் அளவை தங்களை அறியாமலேயே அதிகப்படுத்திக் கொள்ளு கிறார்கள். பின்னவர்கள் (ஜப்பானிய விவசாயிகள்) உணவுப் பொருள்கள் கெடாமல் இருப்பதற்காக உப்பிலே ஊற வைத்து உண்பதால் அதிக உப்பை உடலில் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். இவ்விரு பிரிவினர்களிடையேயும் ஏறக்குறைய 60 சதவிகிதத்தினர் இரத்த மிகை அழுத்தத்தினால் அவதிப்படுகிறார்கள். வன்தாக்கு நோய்க்குள்ளாகி மரணமும் அடைகிறார்கள்.

நமது உடலின் ஒரு நாள் உப்புத்தேவை 500 மில்லி கிராம்கள்தான். ஆனால் தினமும் உணவுடன் நாம் சேர்த்துக் கொள்ளும் உப்பின் அளவு ஏறக்குறைய 15 முதல் 20 கிராம்கள். அதாவது 15,000 முதல் 20,000 மில்லி கிராம்கள். சிறு நீரகத்தின் பணிகளில் ஒன்று இரத்தத்தில் உப்பின் செறிவை நிலையாக வைத்திருப்பது அதாவது அதிகப்படியான உப்பை அகற்றுவது. அதன் பணித் திறனை விட பல மடங்கு உப்பு அதிகமாகச் சேர்ந்தால் அதனால் என்ன செய்ய முடியும்? இனியொரு விதி செய்து நாளும் 5 கிராமிற்குள் உப்பு சேர்த்துக் கொள்வது என்று கடைபிடித்தால் மிகை அழுத்தம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்காது.

உடற்பருமன் மிகை இரத்த அழுத்தத்திற்கு வழி செய்கிறது. கொழுப்பு உடலுக்குத் தேவைதான். ஆனால் அளவிற்கு அதிகமான கொழுப்பு தேவையற்ற நோய்க்கு பாதை போட்டு விடும். தேவையான எடைக்கு மேல் 20 சதவிகித எடை அதிகமுள்ளவர்களுக்கு இரத்த மிகை அழுத்தம் ஏற்படுகிறது. தேவையற்ற எடையைக் குறைப்பதின் மூலம் இரத்த அழுத்தத்தை இயல்பு நிலைக்குக் கொண்டு வந்து விடலாம்.

கருத்தடை மாத்திரையில் அடங்கிய ஈஸ்ட்ரோஜன் எனும் ஹார்மோன் பெண்களிடையே இரத்த மிகை அழுத்தம் ஏற்படத் தூண்டுகோலாக உள்ளது. இது உப்பை தக்க வைத்துக் கொள்ளும் திறனுடையது. நாளடைவில் இரத்த மிகை அழுத்தத்தில் கொண்டுபோய் முடியும்.

பரம்பரை காரணமாகவும் இரத்தமிகை அழுத்தம் வருகிறது. இந்த வகை பொதுவாக 40 வயதிற்கு மேலாகவே ஏற்படுகிறது. உணவில் கட்டுப்பாடு, உடல் எடை குறைப்பு, மருந்துகள் மூலமாக இதைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விடலாம்.

– "உடலியல் கலைக்களஞ்சியம் நூலிலிருந்து"

* * *

# ஈரோட்டில் பூம்புகார் விற்பனை நிலைய முதல் விற்பனை தொடக்க விழா

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் என்ற பழமொழி பலருக்கு வாழ்வளித்து, இன்று உயிர் மொழியாக விளங்கி வருவதை கைத்தொழில் செய்து வெற்றி கண்டு வருபவர்கள் மூலம் கண்கூடாகப் பார்த்து வருகின்றோம். இந்தியா தன் பொருளாதாரத்தை உயர்த்தி ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைய எல்லா வழிகளிலும் முயற்சி எடுத்து வருகின்றது. இதன் ஒரு பகுதியாக கைத்திறன் மூலம் தயாரிக்கப்பட்ட அழகிய கலைப் பொருட்கள் தமிழ்நாட்டில் மட்டுமல்லாது பிற மாநிலங்களிலும் பூம்புகார் நிறுவனம் அமைக்கப்பட்டு அதன் வாயிலாக கைவினைப் பொருட்கள் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு சாதனை படைத்து வருகின்றது. இதனால் கிராமங்களில் கைத்திறன் கலைஞர்களை ஊக்கப்படுத்துவதற்காகவும் நமது கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் கட்டிக் காப்பதற்காகவும் பூம்புகார் விற்பனை நிலையம் பேருதவி புரிவதற்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

பூம்புகார் விற்பனை நிலையம் அமைக்க ஈரோடு நகரில் 3,200 சதுர அடி இடம் வாங்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் பங்காக ரூ.16.50 இலட்சமும் மத்திய அரசின் பங்காக ரூ.12.65 இலட்சமும் பூம்புகார் கழகத்தின் சார்பில் ரூ.9.85 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.39 இலட்சம் மதிப்பில் புதிய கட்டடம் கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த பூம்புகார் விற்பனை நிலையம் இன்று புதிய சொந்த கட்டடத்தில் விற்பனையைத் தொடங்கியுள்ளது. மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.சி.இராமசாமி அவர்கள் புதிய கட்டடத்தில் குத்துவிளக்கேற்றி வைத்தும், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. கு. பாண்டுரங்கன் அவர்கள் முதல் விற்பனையைத் தொடங்கியும் வைத்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இந்து சமய அறநிலையத்துறை பூம்புகார் நிறுவனத்திற்கு கடந்த இரண்டரை ஆண்டுகளில் ரூ.155 இலட்சம் மதிப்பில் மாங்காடு காமாட்சியம்மன் கோயிலுக்கு தங்கத்தேர், சிவன்மலைக்கு ரூ.48 இலட்சம் மதிப்பில் மரத்தேர், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு ரூ.4.27 இலட்சம் மதிப்பில் தங்க கொடிமரம், மருதமலை கோயிலுக்கு ரூ.108 இலட்சம் மதிப்பில் தங்கத்தேர், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலுக்கு ரூ.1.68 இலட்சம் மதிப்பில் தங்க கருட வாகனம், பண்ணாரி அம்மன் கோயிலுக்கு ரூ.48 இலட்சம் மதிப்பில் தங்கரதம், மயிலை கபாலீஸ்வரர் கோயிலுக்கு ரூ.77 இலட்சம் மதிப்பில் தங்கரதம், ஈச்சனாரி விநாயகருக்கு ரூ.47 இலட்சம் மதிப்பில் தங்கரதம்



ஆகமொத்தம் ரூ.5 கோடி மதிப்பில் உத்தரவின் பேரில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் ரூ.9.03 இலட்சம் செலவில் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலுக்கும், ரூ.20.48 இலட்சம் செலவில் கைலாசநாதர் கோயிலுக்கும் மரத்தேர்களும், ரூ.1.95 இலட்சம் செலவில் பன்னாரி மாரியம்மனுக்கு தங்கத்தேர், ரூ.17.33 இலட்சம் மதிப்பில் இஸ்கான் கோயிலுக்கு செப்பு தகடு போர்த்தும் பணி, ரூ.6.56 இலட்சம் மதிப்பில் கொளஞ்சியப்பர் கோயிலுக்கு வெள்ளி ரதம், ரூ.1.20 இலட்சம் மதிப்பில் முண்டகக் கண்ணியம்மன் கோயிலுக்கு வெள்ளித்தகடு கதவு, ரூ.29.81 இலட்சம் மதிப்பில் அம்மன் சன்னதிக்கு வெள்ளித்தகடு, ரூ.9.55 இலட்சம் செலவில் வெள்ளியம்பல நடராசர் சன்னதிக்கு வெள்ளித்தகடு, ஆகமொத்தம் ரூ.95.91 இலட்சம் மதிப்பீட்டில் பூம்புகார் நிறுவனத்திற்கு பணி கொடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறன்றன.

தமிழ்நாட்டில் உள்ள ஆலயங்களில் பூம்புகார் விற்பனை நிலையம் 9 இடங்களில் தொடங்க திட்டமிடப்பட்டு தற்போது திருவண்ணாமலையில் கடை கொடுக்கப்பட்டு பூம்புகார் விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள திருத்தணி, மதுரை, திருச்செந்தூர் போன்ற 8 இடங்களில் உள்ள கோயில்களில் மிக விரைவில் பூம்புகார் விற்பனை நிலையத்திற்கு இடம் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும். பூம்புகார் விற்பனை நிலையத்தில் சுய உதவிக்குழுக்கள் தயார் செய்த கைத்திறன் கொண்ட அழகிய பொருட்களை வாங்கி விற்பனை செய்யப்படுவது பாராட்டுக்குரியது என மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.சி.இராமசாமி அவர்கள் நிகழ்ச்சியில் குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டில் 12 பூம்புகார் விற்பனை நிலையங்கள் உள்ளன. ஈரோடு விற்பனை நிலையத்தையும் சேர்த்து 8 விற்பனை நிலையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. வெளி மாநிலங்களில் 4 விற்பனை நிலையங்கள் உள்ளன. அதில் 3 விற்பனை நிலையங்கள் சொந்த கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இந்நிறுவனம் வெளி மாநிலங்களில் மும்பை, பூனா, ஐதராபாத், விசாகப்பட்டினம் போன்ற இடங்களிலும் தமிழ்நாட்டில் 15 இடங்களிலும், கண்காட்சி நடத்தி வந்துள்ளது. பூம்புகார் விற்பனை நிலையத்தில் விற்கப்படுகின்ற பொருட்கள் கலைநயத்தோடு உருவாக்கப்பட்டவை, மிகுந்த மதிப்புமிக்கவை. நமது பண்பாட்டை எடுத்துக் காட்டுபவைகளாக அமைந்துள்ளன என மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.கு.பாண்டுரங்கன் அவர்கள் நிகழ்ச்சியில் உரையாற்றியபோது கூறினார்கள்.

இந்நிகழ்ச்சியில் கைத்தறி துணிநூல், கைத்திறன் மற்றும் கதர்த்துறை செயலாளர் திரு.அ.இளங்கோவன்,இ.ஆ.ப., திட்ட விளக்க உரையாற்றினார். ஈரோடு சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.எஸ்.தென்னரசு முன்னிலையுரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கே.ஆர்.கந்தசாமி, திரு.பி.சிதம்பரம், திரு.கே.எஸ்.பழனிசாமி, மாவட்ட விற்பனைக் குழுத் தலைவர் திரு.ஆர்.கோவிந்தராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

நிறுவனத்தில் எண்ணற்ற கைத்திறன் கொண்ட தொழிலாளர்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்கள் ஏற்றம் பெறுகின்றன. இந்த அரிய கலைப்பொருட்களை வாங்கி மற்றவர்களுக்குப் பரிசளிப்பதின் மூலமாகவும் வீட்டில் அழகுபடுத்துவதின் மூலமாகவும் கைத்திறன் தொழிலை ஊக்கப்படுத்துவது மட்டுமல்லாது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் சிறு பங்கு வகிக்கும் பெருமையை அடைவதோடு காந்தி கண்ட கனவான கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

- எம்.ஆர். லிங்கம்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு.

❖ ❖ ❖

### அச்சுக்கலை

அச்சுக்கலை பற்றிய அறிமுகம் முதன்முதலில் சீனாவில் கி.பி.868–இல் தொடங்கியது. வாங்சிங் என்பவர் "கிரக சூத்ரா" என்ற நூலை அச்சிட்டு வெளியிட்டார். இதுதான் உலகிலேயே மிகவும் பழமையான அச்சுப்புத்தகம் என்று கருதப்படுகிறது.

அசையும் அச்சு எழுத்துக்களை (Moving Types) 1301–இல் பைசாங் என்பவர் கண்டுபிடித்தார்.

அச்சு இயந்திரம் – ஜெர்மனியில் கூடன்பர்க் என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டது. இந்த இயந்திரம் மூலம் வால்கேட் என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

இங்கிலாந்தில் வில்லியம் காக்ஸ்டன் என்பவர் சற்றே மாறுதலுடன் ஒரு அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.

# ஈரோடு மாவட்டத்தில் அரவாணிகளுக்கு உதவிட தனி சுய உதவிக்குழுக்கள்

மகளிர், பொருளாதாரத்தில் தற்சார்பு நிலை பெற்று சமுதாயத்தில் மதிக்கப்பட வேண்டு மென்றால், அவர்கள் சுயமாகத் தொழில் செய்து வருவாய் ஈட்டுவது அவசியமாகும். அந்த அடிப்படையில், ஈரோடு மாவட்டத்தில் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப் பட்டுள்ளன. கோயில்களில் காலணிகளைப் பாதுகாத்தல், கல்குவாரி நடத்துதல், பனைப் பொருள்களை உற்பத்தி செய்தல் போன்ற தொழில்களை சுயஉதவிக் குழுக்கள் மேற்கொண்டுள்ளன.




ஈரோடு மாவட்டத்தில் ஊராட்சிப் பகுதிகளில் **4,846** குழுக்களும் பேரூராட்சிப் பகுதிகளில் **1,518** குழுக்களும், நகராட்சிப் பகுதிகளில் **204** குழுக்களும் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் மொத்தம் **95,849** மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த சுயஉதவிக்குழுக்களின் மொத்த சேமிப்பு ரூ.**10.84** கோடியாக உயர்ந்துள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் அரவாணிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அவர்களுக்கென்று தனியாக சுயஉதவிக்குழுக்களை அமைக்க அரசு திட்டமிட்டு, நான்கு குழுக்கள் தொடங்கப் பட்டுள்ளன. இவற்றில் 77 பேர் உறுப்பினர்களாக சேர்க்கப் பட்டுள்ளனர். இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்களுக்கு, குழுவை எவ்வாறு நடத்தவேண்டும், குழு உறுப்பினர்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள், எந்தெந்தத் தொழில்களை மேற்கொண்டால் இலாபகரமாக நடத்த முடியும் என்பவை குறித்த பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் அரவாணிகளுக்கு அரசுப் பணி வழங்கப்பட்டிருப்பது, அவர்களும் சமுதாயத்தில் மதிக்கத் தக்கவர்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

**- எம்.ஆர்.லிங்கம்,**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*ஈரோடு*

## செய்தியைப் பற்றி ஒரு செய்தி




*முதன் முதலில் எகிப்து நாட்டில் அடிமைகள் மூலமாகச் செய்திகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.*

*பின்னர் கிரேக்க நாட்டில், ஜூலியஸ் சீசர் காலத்தில் மக்கள் தொடர்பு என்ற கொள்கை வளர்ச்சி அடைந்தது. சுவரில் போஸ்டர்களை ஒட்டி செய்திகளைத் தெரிவிக்கும்முறை தோன்றியது. அதற்கு "ஆக்டன் துர்ணா" (**Actan Durna**)என்று பெயர் சூட்டினர். இதனால் ஜூலியஸ் சீசரை "இதழியலின் தந்தை" என்பர்.*

*இந்தியாவில் அசோகர் காலத்தில் செய்திகள் பரிமாற்றம் சிறந்த முறையில் நடைபெற்றது. கல்வெட்டுகள், பாறைகள் ஆகியவற்றில் செய்திகளைச் செதுக்கி வைத்தனர். ஓவியங்கள் மூலமாகவும் செய்திகளைப் பரிமாறிக் கொண்டனர்.*

# நட்சத்திரக் குழந்தைகள்

பி.எஸ்.ராமையா

"அப்பா! நட்சத்திரங்களுக்குக்கூட அப்பா உண்டோ?''

"உண்டு அம்மா!''

"அவர் யார் அப்பா?''

"ஸ்வாமி''

"ஸ்வாமியா? அப்பா அவர்கூட உன்னைப்போலத் தானே இருப்பார்? நட்சத்திரம் ரொம்ப அழகாயிருக்கே! அவர் அப்பாகூட அழகாகத்தானே இருப்பார்?''

"ஆமாம் அம்மா! ஸ்வாமினுடைய அழகைப் போல வேறு யாருக்கும் அழகு இல்லை''.

"ஸ்வாமிகூட உன்னைப் போல நல்லவர் தானே?''

"ஆமாம்''

"ஆமாம். எனக்குக்கூடத் தெரிகிறது. ஸ்வாமி ரொம்ப ரொம்ப நல்லவர். நட்சத்திரமே பளிச்சின்னு அவ்வளவு நன்னாயிருக்கே! அவா அப்பா எப்படியிருப்பார்?''

"அவர் ரொம்ப நல்லவர், நம்மையெல்லாம் விடப் பெரியவர்''

"அப்பா! நட்சத்திரம் எப்போ பிறக்கும்?''

"சாயங்காலத்தில்''

"எப்படியப்பா அது பிறக்கிறது?''

"நாம் சத்தியத்தையே பேசுவதால்; நாம் ஒவ்வொரு தடவையும் ஒரு உண்மையைச் சொல்லும் பொழுது ஒரு நட்சத்திரம் பிறக்கிறது''.

"நான்கூட நிஜத்தையே சொன்னால் நட்சத்திரம் பிறக்குமா, அப்பா?''



"ஆமாம், அம்மா! நீ ஒவ்வொரு தடவையும் நிஜம் சொல்லும் பொழுது ஒரு நட்சத்திரம் பிறக்கிறது''.

"அப்பா!''

"என்ன அம்மா!''

"நம்ப ஊரிலே அவ்வளவு பேரும் குழந்தைகள் எல்லாம் – நிஜத்தையே பேசினா எவ்வளவு நட்சத்திரம் பிறக்கும்? நிறைய (இரண்டு கைகளையும் விரித்துக்காட்டி) இவ்வளவு நட்சத்திரம் பிறக்குமோல்லியா?''

"ஆமாம், அம்மா!''

அதைக் கேட்டவுடன் குழந்தை ரோஹிணி வேறொன்றும் பேசாமல் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவளாய்த் திரும்பி விட்டாள். அவள் தனது முதிரா உள்ளத்தினுள்ளே ஸ்வாமியைப் பற்றியும் அவருடைய நட்சத்திரக் குழந்தைகளின் அழகைப் பற்றியும் மனிதர்கள் யாவரும் சத்தியத்தையே பேசுவதைப் பற்றியும் கற்பனை செய்து காண முயன்று கொண்டே வாசலுக்குச் சென்றாள்.

குழந்தை ரோஹிணிக்கு ஆறு வயசுதான் ஆகிறது. ஆனாலும் அவளுடைய வார்த்தைகள் யாவும் மணிமணியாக இருக்கும். முத்தும் பவளமும் கோத்த ஹாரம்போல இருக்கும் அவளது பேச்சு. அவளுடைய கேள்விகள் எல்லாம் தெய்வ உலகத்துக் கேள்விகள், அவளுடைய இளம் நெஞ்சில் உதிப்பவை சுவர்க்க உலகத்து எண்ணங்கள்.

ஸ்ரீமான் சோமசுந்தரம், பி.ஏ., வரையில் படித்திருக்கிறார். ஆனாலும்கூடக் குழந்தை ரோஹிணியின் சில கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தெரியாமல் ஒவ்வொரு சமயம் திணறிப் போய்விடுவார். "ஐயோ! இந்தக் குழந்தையின் மனதைக்கூட என்னால் திருப்தி செய்ய முடியவில்லையே'' என்று ஏங்கி நிற்பார். ஆனால் ரோஹிணியைக் கண்டவுடன், ரோஹிணியைப் பற்றி நினைத்தவுடன் அவருடைய உச்சியிலெழும் கர்வம் ஒரு சக்கரவர்த்திக்குக்கூட இராது.

பட்டணத்தில் இருக்கும்பொழுது குழந்தை இயந்திரதேவியின் குழந்தைகளைப் பற்றிப் புதிய புதிய கேள்விகளைக் கேட்பாள். கிராமத்திற்கு வந்தவுடன் அவளுடைய கேள்விகள் அதியாச்சரியகரமாக மாறிவிடும். இயற்கைத் தேவியின் சிறு விளையாட்டுகளின் இடையே அவளுடைய உள்ளம் சென்று கலந்துகொள்ளும். அவளுடைய எண்ணங்கள் இயற்கை அன்னையுடன் இறக்கை விரித்துப் பறப்பவையாக இருக்கும்.

சோமசுந்தரம் அப்பொழுது தபால் ஆபீஸுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். தினந்தோறும் தபால்காரன் வருவதற்குள் அங்கேயே நேரில்போய், ஏதாவது கடிதம் உண்டாவென்று பார்த்துவிட்டு வரவேண்டுமென்ற ஆவலுடன் அவசர அவசரமாகப் போவார்; கடிதம் எதுவும் வராவிட்டாலும் தினசரிப் பத்திரிகையாவது வருமே என்று போவார். அவ்வாறு அவர் புறப்பட்டுக் கொண்டிருந்த பொழுதுதான் குழந்தை நட்சத்திரங்களைப் பற்றிக் கேட்டாள்.

அதற்குமேல் ரோஹிணிக்கு அப்பொழுது தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் வேறு ஒன்றுமே இல்லை. நட்சத்திரங்களினுடைய அப்பாவைப் பற்றி கற்பனை செய்து கனவு காண்பதற்குத்தான் அவளுடைய சிறிய மனசில் இடம் இருந்தது.

சோமசுந்தரம் அதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே தபால் ஆபீஸுக்குச் சென்றார்.

மாலை நேரம் வந்தது. குழந்தை ரோஹிணி அப்பொழுதுதான் குளித்துவிட்டு அம்மா செய்துவிட்ட அலங்காரங்களுடன் வாசலில் வந்தாள். அவர்கள் வீட்டு வாசலில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு வாதாமரங்கள் உண்டு. அவற்றின் நடுவில் சென்று நின்றாள். சூரியன் அஸ்தமிக்கும் சமயம்; வானவீதியில் வெளியும் ஒளியும் மோனத்திலே கலந்து நகை செய்து கொண்டிருந்தன. குழந்தை ரோஹிணி மேற்றிசைக் கோடியில் நடந்துகொண்டு இருந்த இந்திர ஜாலத்தைக் கண்டாள். அவளுடைய நிஷ்களங்க நெஞ்சத்தில் பரவசநிலை பிறந்தது.

ஆஹா! என்ன அழகு! அங்கு அந்த வானவெளியிலே, உண்மை கவிதை செய்துகொண்டிருந்தான். ரோஹிணியின் முகம் மலர்ந்தது. அங்கு ஒரு புதிய ஒளி தோன்றியது. அது வானவெளியில் தோன்றிய திவ்ய ஒளியின் பிரதியல்ல. குழந்தையின் ஹ்ருதய சந்திரனிலிருந்து வெளிப்பட்டு முகத்தில் வீசும் நிலவு. அவளுடைய கண்கள் சுடர் எரியும் இரண்டு மீன்களெனப் பிரகாசித்தன. காலையிலே, அதிகாலையில் சூரியோதய காலத்தில் தாமரையொன்று மலர்வதைக் கண்டிருக்கிறீர்களா? கொஞ்சமாகத் திறந்து அது தனது காதலனைக் கண்டு இளநகையாடுவதைப் பார்த்ததுண்டா? அந்தத் தாமரையைப்போல மலர்ந்து, வியப்பின் சந்தோஷத்தின் இளநகை தவழ்ந்தாட ரோஹிணியின் சிறிய அழகிய வாய் சிறிது திறந்திருந்தது.

"அவள் யார்? வானத்தில் அப்படிப்படம் எழுதி விளையாடும் அந்த வானுலக ரோஹிணி எப்படி இருப்பவள்?''

குழந்தை ரோஹிணி பலகையில் சித்திரம் எழுதி விளையாடுவதுண்டு. முதலில் ஒரு படம் வரைவாள், "சீ இது நன்றாயில்லை'' என்று அதை அழித்துவிட்டு வேறு ஒன்று எழுதுவாள். அது நன்றாக இருக்கும். ஆனாலும் அதைக் கலைத்துவிட்டு வேறு ஒன்று எழுதுவாள். அதையும் துடைத்துவிட்டுப் புதிய தினுசாக மற்றொன்று வரைவாள்.

வானத்து ரோஹிணியும் அவ்வாறே புதிய புதிய படங்களை எழுதுகிறாள். ஆனால் அவள் அழித்து அழித்து வரையவில்லை; மாற்றுகிறாள். எல்லாம் வர்ணப்படங்கள் இல்லை. புதிய புதிய வர்ணங்கள். ஒன்றைப்போல் மற்றொன்று இல்லை. கணந்தோறும் நவநவமாங்களிப்புத் தோன்றுகிறது. அந்த வானுலக ரோஹிணிக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்? குழந்தை ரோஹிணிக்கும் சந்தோஷம்தான் வானுலக ரோஹிணியின் சந்தோஷத்தைப் பற்றி நினைப்பதில்.

சந்தியாதேவி நாணத்தினால் தலைகுனிந்து கீழ்த்திசை அடிவானத்தினின்றும் மெல்ல அடிவைத்து வான வீதியிலே வந்து கொண்டிருக்கிறாள். அவளுடைய வருகை ஓர் இனிய சங்கீதத்தைப் போன்றிருக்கிறது. கல்யாணி ராகத்தின் அவரோகணம்போல, அவளுடைய சௌந்தர்யம் இனிமையானது; உள்ளம் கவர்வது அது நாணத்தினால் ஆக்கப்பட்டது; நிமிர்ந்து பார்க்காது; ஆனாலும் மகிழ்ச்சி ஊட்டுவது அவளுடைய நிறம் ஸப்த வர்ணங்களில் ஒன்றல்ல; அவற்றிற்குப் புறம்பானது; அதன் பெயர் மாலை; ஆதலால் அது மயக்கம் தருவது.

வர்ணப்படங்கள் எழுதுவது நின்றுவிட்டது. இனி வேறுவகையான சித்திரங்கள், வெள்ளை மேகத்தினால் ஆக்கப்படும் உருவங்கள். ஒளியையும் நிழலையும் கலந்து எழுதப்படும் ஓவியங்கள். அவற்றின் விளிம்புகளில் சுடர் கலந்த வெள்ளி முலாம் பூசப்பட்டிருக்கிறது. அவை ஏன் அங்கும் இங்கும் அலைந்துகொண்டே இருக்கின்றன? ஓரிடத்தில் இருந்தால் என்ன? ஆகாசத்திற்கு இந்த நீல வர்ணம் எப்படி வந்தது? பூமி ஒவ்வோர் இடத்தில் ஒவ்வொரு வர்ணமாக இருக்கிறதே; வானம் மாத்திரம் ஏன் இப்படி ஒரே நீலமாக இருக்கிறது?

நேர் மேலே இரண்டு மேக வடிவங்கள் மெதுவாக அசைந்துகொண்டு இருக்கின்றன. இரண்டிற்கும் நடுவில் நீலவானம். களங்கமற்றது; ரோஹிணியின் உள்ளத்தைப் போன்றது. அந்த இடத்திலே, அந்த இரண்டு வெண்மையான மேகக் கூட்டங்களின் இடையிலுள்ள நீலப் பட்டாடையிலே, திடீரென்று ஒரு சுடர் தோன்றுகிறது! அடேயப்பா! அது எவ்வளவு துரிதமாகத் தோன்றிவிட்டது? கண் இமைக்கும் நேரத்தைவிடச் சீக்கிரமாக, மின்வெட்டும் நேரத்தில்; அதுகூட அதிகம், ஒரு கணத்தின் ஆயிரத்தில் ஒரு பங்கு நேரத்தில் அந்தச் சுடர்ப் பொறி பிறந்துவிட்டது!

"அம்மா! ஸ்வாமிக்கு ஒரு நட்சத்திரக் குழந்தை பிறந்துவிட்டது'' என்று கூவினாள் குழந்தை ரோஹிணி. கைகளைக் கொட்டுகிறாள். அவளது கண்கள் சிரிக்கின்றன. உள்ளம் களிவெறி கொள்கிறது.

அவளுடைய தாய், வீட்டு வாசற்படியின் அருகில் நிற்கிறாள். அவளது கவனம் வீதியில் போவோர் வருவோர் மீது சென்று லயித்திருக்கிறது. அதோ போகும் பெண்ணினுடைய ஆடையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு இருக்கிறாள். குழந்தை ரோஹிணியின் வார்த்தைகள் அவளுடைய செவிகளில் படவில்லை. ஆனால் குழந்தையின் சந்தோஷம் மாத்திரம் அவளுடைய மனத்தில் சென்று தாக்கி அதை ரோஹிணியிடம் இழுத்துச் செல்லுகிறது. குழந்தையை அப்படியே விழுங்க விரும்புவளைப் போலக் கரைபுரண்டோடும் ஆசையுடன் அம்மாவின் கண்கள் குழந்தையைப் பார்க்கின்றன.

வானவெளியிலே இருள் பரவுகிறது. இருளும் அழகாகத்தான் இருக்கிறது. அதிலும் இனிமை இருக்கிறது; மாதாவின் ஸ்நேகத்தைப் போன்ற இனிமை. ஒன்றன்பின் ஒன்றாக நட்சத்திரங்கள் பிறந்து கொண்டே இருக்கின்றன. அப்பா! எத்தனை நட்சத்திரங்கள்! குழந்தை ரோஹிணியால் அவற்றை எண்ண முடியவில்லை. அவை பிறக்கும் வேகந்தான் என்ன! அந்த வேகத்தைக் குழந்தையின் சிறிய மனம் தொடர்ந்து செல்வது சாத்தியமில்லை.

"வா, கண்ணே! உள்ளே போகலாம். இருட்டிப் போய்விட்டது'' என்று அம்மா அழைக்கிறாள்.

"இரு சும்மா, போகலாம். மானத்தைப் பாரு எவ்வளவு அழகாயிருக்கு!'' என்று நிற்கச் சொல்லுகிறாள் குழந்தை.

"ஆமாம்; அழகாய்த்தான் இருக்கிறது. இருட்டிப் போய்விட்டதே. இனிமேல் இப்படி வாசலில் நிற்கக் கூடாது. வா அம்மா, உள்ளே'' என்று மறுபடி அழைக்கிறாள் அம்மா.

"அம்மா''

"உம்''

"மானம் இப்போ எதைப்போல இருக்கு சொல்லட்டுமா?''

"சொல்லு''

"உன் முகத்தைப் போல. நீ என்னை முத்தமிடுகிறாயே, அப்போ உன் முகம் இந்த மானத்தைப்போலவே இருக்கு''

அம்மாவுக்கு அதன் பொருள் விளங்கவில்லை. அது சரியென்று தோன்றவில்லை. ஆனால் அந்த வார்த்தைகளில் இருக்கும் ஏதோ ஒன்று, அது வாஸ்தவந்தான் என்று சொல்லியது அவளுடைய மனத்தில்.

அம்மா சட்டென்று கீழிறங்கிச் சென்று குழந்தையை இழுத்துக் கட்டிலடங்காத காதலுடன் முத்தாடினாள். அம்மாவுக்கு வீட்டில் வேலை இருக்கிறது. மற்றொரு முறை, "உள்ளே வாடா குஞ்சு'' என்று சொல்லிவிட்டு வீட்டினுள் சென்றுவிட்டாள்.

குழந்தை ரோஹிணி சீரவிருஞ்சுடர் மீனொடு வானத்துத் திங்களையும் சமைத்தே ஓரடியாக விழுங்கிவிடும் உள்ளச் செல்வம் படைத்து அப்படியே நின்றிருந்தாள்.

வெளியே சென்றிருந்த சோமசுந்தரம் வீட்டிற்குத் திரும்பி வந்தார். வாசலில் தனியாக வானத்தின் அழகில் லயித்து நின்ற ரோஹிணியைக் கண்டார்.

"ரோஹிணிக் குஞ்சு! என்னம்மா பார்க்கிறாய்? உள்ளே போகலாம் வா'' என்று அழைத்தார். குழந்தை, "இரு அப்பா அந்த மானம் எவ்வளவு அழகாயிருக்கு! அவ்வளவு குழந்தைகளையுடைய சுவாமிக்கு எவ்வளவு சந்தோஷம் இருக்கும் அப்பா'' என்றாள். அதற்குள் சோமசுந்தரத்தின் மனத்தில் வேறு ஏதோ சிந்தனை வந்து விட்டது. குழந்தை சொல்லியது சரியாகக் கூடக் காதில் விழவில்லை. "உம்'' என்று சொல்லிவிட்டு வீட்டிற்குள் சென்றார்.

அடுத்த வினாடி ஒரு விண்மீன் நிலைதவறிச் சுடர்வீசிக் கொண்டு வானத்தினின்றும் கீழே விழுந்து மறைந்தது. அதன் பிரயாணம் சில வினாடிகளே கண்ணுக்குத் தெரிந்தது.

குழந்தையின் கண்களில் கண்ணீர் பெருகியது. இரண்டு கண்களினின்றும் இரண்டு நீர் வடிவமான முத்துக்கள் கீழே உதிர்ந்தன. இந்த சின்னஞ்சிறு ஹிருதயத்தில், விவரிக்க இயலாத, சுருக்கென்று தைக்கும் ஒரு வேதனை காணுகின்றது. குழந்தை விம்மி விம்மி அழத் தொடங்கினாள். அழுகையினிடையில், "அப்பா'' என்று இரும்பை உருக்கும் குரலில் கூப்பிட்டுக் கொண்டே வீட்டினுள் சென்றாள்.

சோமசுந்தரம் அப்பொழுதுதான் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்து அருகிலிருந்த மேஜையின் மீதிருந்த ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்தார். குழந்தையின் குரலைக் கேட்டவுடன் அவருடைய கையினின்றும் புத்தகம் தொப்பென்று கீழே விழுந்தது. அவருடைய ஹிருதயம் ஆயிரம் சுக்கல்களாகச் சிதறி விழுந்ததுபோல் இருந்தது. உடல் பதைத்தது.

"என்னடா கண்ணே! என் ராஜாத்தி அல்லவா! என் ரோஹிணிக் குஞ்சை யார் என்ன செய்தார்கள்?'' என்று படபடப்புடன் கேட்டுக் கொண்டே குழந்தையை வாரித் தூக்கித் தோளின்மேல் சார்த்திக் கொண்டார்.

"அப்பா; எனக்குத் தெரிஞ்சுபோச்சு'' என்று விக்கல்களுக்கும் விம்மல்களுக்கும் இடையே சொன்னாள் குழந்தை.

"என்னடா கண்ணே, தெரிஞ்சுபோச்சு''

"அப்பா நம்ப ஊரிலே, யாரோ ஒரு பொய் சொல்லிவிட்டா அப்பா''

விக்கல்கள் விம்மல்கள்; ஹூங்காரத்துடன் அழுகை.

"ஏன் அம்மா அப்படித் தோன்றுகிறது உனக்கு?''

"நீதானே அப்பா சொன்னே, நாம் ஒரு நிஜம் சொன்னால் ஒரு நட்சத்திரம் பிறக்கிறதுன்னு. அப்போ ஒரு நட்சத்திரம் கீழே விழுந்தா....யாரோ ஒரு பொய்....சொல்லிவிட்டான்னு தானே அர்த்தம்? சுவாமியினுடைய...மனசு இப்போ...எப்படி இருக்கும் அப்பா? எனக்கே...நிறைய...அழ வரதே'' என்று சொல்லிவிட்டு அழத்தொடங்கினாள் அந்தக் கபடமற்ற குழந்தை.

அந்தப் பச்சை உள்ளத்தில் எழுந்த துக்கத்தையும் அதன் துன்பத்தையும் நாவின் மொழிகளால் விவரிப்பது இயலாத காரியம். அது ஹிருதயம் ஹிருதயத்தினோடு தனது சொந்த பாஷையில் உணர்த்த வேண்டிய ஒரே புனிதமான துக்கம்.

*சிறுகதைக் களஞ்சியம் நூலிலிருந்து...*
*வெளியீடு : சாகித்ய அகாடமி*



# ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம்

**மா**வட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம் 24.12.2003 அன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறைச் செயலர், கூடுதல் செயலர், ஊரக வளர்ச்சி இயக்குநர், அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட அலுவலர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது அறிவுரையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தை இந்தியாவின் முதல் மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதில் உறுதி பூண்டுள்ளார்கள் எனத் தெரிவித்து ஊரக வளர்ச்சித் துறை இப்பணியில் எந்த விதத்திலும் பின்தங்கி விடுதல் கூடாது என்பதை வலியுறுத்தினார்கள். பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் தரத்தை உறுதி செய்யவும் தொடர்ந்து கண்காணித்து வரவும் அறிவுறுத்தினார்கள்.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள 38,886 பணிகளை விரைவில் முடித்து உடனடியாக கூடுதல் நிதிக்கான முன்மொழிவுகளை அனுப்பவும்,

பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் 2003 – 2004ஆம் ஆண்டில் ரூ.164 கோடி மதிப்பில் 1,113 கி.மீ. சாலை அமைக்கும் பணிக்கான நிருவாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளதை சுட்டிக் காட்டி உடனடியாக பயனுள்ள தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்,

சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளைப் போலவே நடப்பு ஆண்டிலும் மத்திய அரசிடமிருந்து கூடுதல்நிதி மற்றும் அரிசி பெறும் விதத்தில் சிறப்பாகப் பணியாற்றவும்,

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் வழங்கப்படும் தொழில் கடனில் மானியம் மற்றும் கடன் விகிதாச்சாரம் 1 : 2 அளவிற்குக் குறையாமல் இருக்க வேண்டும் எனவும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர், ஊனமுற்றோர் ஆகிய அனைவரையும் சுய உதவிக் குழுக்களில் இடம் பெற துரித நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தினார்கள். மேலும் தகவல் தொழில் நுட்ப அடிப்படையில் கிராமப் புறங்களில் நிறுவப்படும் ராசி மையங்கள் பயனுள்ள வகையில் செயல்பட வேண்டும், மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் அமைக்கும் பணியை நடப்பு நிதியாண்டிற்குள் முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். இவ்வளாகங்களுக்கான இடம் தெரிவு செய்தல், கட்டுமானப் பணியை மேற்கொள்ளுதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் உபயோகிப்பாளர் குழுக்களை முழுமையாக ஈடுபடுத்திட வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் இதுவரை பணிகளைத் தேர்வு செய்யாத சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையை உரிய காலக் கெடுவிற்குள் பெற்று, நிருவாக அனுமதி வழங்கி, பணிகளைத் தொடங்கி, ஏற்கெனவே தொடங்கப் பட்டுள்ள 7,320 பணிகளை ஜனவரி மாத இறுதிக்குள் நிறைவு செய்ய வேண்டும் எனவும்,

மக்களின் நேரடிப் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும் தன்னிறைவுத் திட்டத்தை முறையாக செயல் படுத்திடவும்,

கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டும் திட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள பணிகளை நடப்பு நிதியாண்டிற்குள் முடித்திடவும்,

ஊரக வளர்ச்சித்துறைத் திட்டங்களை நடைமுறை படுத்துவதில் முதன்மையான இடத்தைப் பெறும் மாவட்டத்தின் ஆட்சித் தலைவருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தங்கப் பதக்கம் வழங்க உள்ளதைச் சுட்டிக் காட்டிய அமைச்சர் அவர்கள் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்றிட ஒத்துழைப்பு நல்க அனைவரையும் கேட்டுக் கொண்டு தனது ஆய்வுரையை நிறைவு செய்தார். •

# சிவகங்கை மாவட்டத்தில் சிறப்பாக நடைபெறும் ஊரக வளர்ச்சிப் பணிகள்

சிவகங்கை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் பல்வேறு திட்டப் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஸ்வர்ண ஜெயந்தி கிராம ஸ்வரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் கிராமப்புறத்தில் வாழும் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள கிராம மக்களை சுயஉதவிக் குழுக்களாக அமைத்து, பயிற்சி வழங்கி அவர்களுடைய திறமையை மேம்படுத்தி தொழில்கள் செய்வதற்குரிய வாய்ப்பு மற்றும் மானியத்துடன் கூடிய கடன் வழங்கி அதன் மூலம் வருவாயைப் பெருக்கி வறுமையை ஒழிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. சிவகங்கை மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை 63,894 ஐம்பதுக்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் கிராம மக்கள் சுயஉதவிக் குழுக்களாக அமைக்கப்படுகின்றனர். இதுவரை இம்மாவட்டத்தில் 3,779 சுயஉதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மகளிர் திட்டம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை அங்கீகரித்து அவர்கள் மூலம் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்க உதவி புரிகின்றது. சிவகங்கை மாவட்டத்தில் இதுவரை 978 குழுக்களுக்கு ரூ.97.80 இலட்சம் சுழல் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. 437 குழுக்களுக்கு ரூ.8.25 கோடி தொழிற்கடனுக்காக மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் கல்குவாரி, காய்கறி உற்பத்தி, பூ உற்பத்தி, கீற்று முடைதல், ஆயத்த ஆடைகள் தயாரித்தல், சாம்பிராணி தயாரிப்பு, செங்கல் தயாரிப்பு, பால் மாடு வளர்ப்பு, கயிறு உற்பத்தி, உணவுப் பொருட்கள் தயாரித்தல், மூலிகை மருந்து தயாரித்தல், கரிமூட்டம், அப்பளம் தயாரித்தல், வயர்கூடை பின்னுதல், சணல் பை தயாரித்தல் மற்றும் மளிகைக் கடை வைத்து வியாபாரம் செய்தல் போன்ற தொழில்களுக்காக மானியம் விடுவிக்கப் பட்டுள்ளது.

தொழில் திறனை மேம்படுத்துவதற்காக அப்பளம் தயாரித்தல், ஊதுபத்தி, கம்ப்யூட்டர் சாம்பிராணி, கயிறு திரித்தல், காய்கறிகள், பூ உற்பத்தி, கால்நடைகள் வளர்த்தல், மண்புழு உரம் தயாரித்தல், செங்கல் தயாரித்தல் போன்றவைகள் சுயஉதவிக் குழுக்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. எஸ்.ஜி.எஸ்.ஒய். அடிப்படைக் கட்டமைப்பு வசதியிலிருந்து சுயஉதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய வணிக வளாகம் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளிக்க பயிற்சிக்கூடமும் கட்டப்பட்டுள்ளது.

தொழில்முனையும் திறனை மேம்படுத்துவதற்காக தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியும் பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் அரசின் இலக்கினைக் கருத்தில் கொண்டு தகுதியுள்ள சுயஉதவிக் குழுவிலிருந்து பெண்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி பெற்ற விற்பன்னர்கள் மூலம் தொழில் முனைவோர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 2002–03ஆம் ஆண்டில் 935 நபர்களும், 2003–04ஆம் ஆண்டில் 1,020 நபர்களும் பயனடைந்துள்ளனர்.

## கிராம குடிநீர்த் திட்டம்

கிராம குடிநீர்த் திட்டத்தின் கீழ் ஊராட்சிப் பகுதிகளில் ரூ. 135 இலட்சம் மதிப்பீட்டில் 328 குடிநீர்ப் பணிகளும் பேரூராட்சிப் பகுதிகளில் ரூ. 30 இலட்சம்





மதிப்பீட்டில் 63 பணிகளும் நகராட்சிப் பகுதிகளில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் 63 பணிகளும் மேற்கொள்ளப்பட்டு பணிகள் யாவும் முடிவுற்று பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### தனி நபர் விசைக்குழாய் குடிநீர்த் திட்டம்

ரூ.7.47 கோடியில் 96 ஊரகக் குடியிருப்பிடங் களுக்கு தனிநபர் விசைக்குழாய் குடிநீர் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 11 குடியிருப்பு இடங்களுக்கு பணி முடிவடைந்து விட்டது. எஞ்சிய 85 குடியிருப்பிடங் களுக்கு மார்ச் 2004க்குள் குடிநீர் வழங்குத் திட்டம் நிறைவேற்றப்பட்டுவிடும்.

### சிறிய விசைக்குழாய் குடிநீர்த் திட்டம்

ரூ. 3 கோடி மதிப்பீட்டில் 500 எண்ணிக்கையுள்ள சிறிய விசைக்குழாய் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 470 சிறிய விசைக்குழாய் குடிநீர் வழங்கும் திட்டம் நிறைவு பெற்றுள்ளது.

### பள்ளிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்

ரூ.88.59 இலட்சம் மதிப்பீட்டில் 200 அரசுப்பள்ளிகள் பயன்பெறும் வகையில் குடிநீர் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 64 அரசுப்பள்ளிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 136 அரசுப் பள்ளிகளுக்கு மார்ச் 2004க்குள் பள்ளிகள் பயன்பெறும் வகையில் குடிநீர் வழங்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### முழு சுகாதார இயக்கம்

சிவகங்கை மாவட்டத்தில் முழு சுகாதார இயக்கம் 2003–04ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இத் திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.12.29 கோடி ஆகும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23–9–2003 அன்று முழு சுகாதார இயக்கம் சிவகங்கை மாவட்டத்தில் செயல்படுத்தப் பட்டது. முதற்கட்டமாக 148 ஊராட்சிகள் தேர்வு செய்யப் பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2004–2006ஆம் ஆண்டில் 297 ஊராட்சிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது.

தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள் மூலம் ஊரகப் பகுதிகளில் தனிநபர் கழிப்பறை கட்டுதல், மகளிருக்கான சுகாதார வளாகம், பள்ளிகளிலும், அங்கன்வாடிகளிலும் கழிப்பறை கட்டுதல் போன்றவற்றில் மக்களுக்குச் சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் மக்கள் பங்களிப்புடன் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சுயஉதவிக் குழுக்கள், உபயோகிப்பாளர் குழுக்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு பல்வேறு வகையான பயிற்சிகள் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்கான தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தேர்வு செய்யும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு தேர்வு செய்யப்பட்ட 148 ஊராட்சிகளிலும் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் பிற அமைப்புகளுக்கு விழிப்புணர்வுக் கூட்டங்கள் மற்றும் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு கழிப்பறை கட்டுவதற்காக விண்ணப்பங்கள், பள்ளிகளிலிருந்து 40ம், அங்கன்வாடி மையங்களிலிருந்து 55ம் பெறப்பட்டு கழிப்பறைகள் கட்ட முதற்கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ஆ. கோபாலன்,
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*சிவகங்கை*

* * *

# சென்னையில் சர்வதேச மேலாண்மைப் பயிற்சி மையம்



தமிழக முதலமைச்சர் அவர்களின் அழைப்பை ஏற்று, 1.1.2004 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், அமெரிக்காவின் எவான்ஸ்டன் நகரத்தில் உள்ள நார்த்வெஸ்டன் பல்கலைக்கழகத்தின் ஜே.எல்.கெல்லாக், மேலாண்மை துறையின் தலைவர் பேராசிரியர் பாலா வி.பாலச்சந்திரன் சந்தித்துப் பேசினார். அப்போது சென்னையில் தாம் உருவாக்கி வரும் சர்வதேச தரத்திலான வர்த்தகப் பயிற்சி மையத்தை நிர்மாணிப்பதற்கான அனைத்து உதவிகளையும் செய்து தரவேண்டுமென்று, தமிழக முதல்வர் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும், கிரேட் லேக் இன்ஸ்டிட்யூட் ஆப் மேனேஜ்மெண்ட் (GLIM) சென்னை என்றழைக்கப்படும் இந்தப் பயிற்சி மையத்தின் வகுப்புகள் வரும் ஏப்ரல் 2004 முதல் தொடங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். மேலும், இந்த வர்த்தகப் பயிற்சி மையத்தை நிர்மாணிப்பது மற்றும் மேம்படுத்துவது தொடர்பான பல்வேறு திட்டங்கள் குறித்தும் அப்போது அவர் முதலமைச்சர் அவர்களிடம் விளக்கினார்.

இந்த வர்த்தகப் பயிற்சி மையத்தின் கல்வி நிர்வாக ஆலோசனைக் குழுவில் மெக்சிகன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சி.கே.பிரகலாத், கெல்லாக் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஃபில் கொட்லர், ஸ்டேன்போர்டு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சீனு சீனிவாசன், வார்டன் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் கிருஷ்ணா ராமசாமி, ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் காஷா ரங்கன் ஆகியோர் பங்கு பெற்றுள்ளனர்.

பேராசிரியர் பாலா வி.பாலச்சந்திரன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சென்னையில் இந்த மாதிரியான ஒரு புதிய வர்த்தகப் பள்ளியை நிறுவ வேண்டும் என்ற தம்முடைய நீண்டகால விருப்பத்தை தற்போது செயல்படுத்த விழைந்துள்ளதாகத் தெரிவித்தார். இதன் மூலம் தரமான மேலாண்மை கல்வி குறைந்த பொருட்செலவில் சென்னையில் கிடைப்பதற்கு இந்த வர்த்தகப் பள்ளி உதவியாக அமையும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உறுதியான சீரிய தலைமையின் கீழ் சென்னை மாநகரமும் மற்றும்



தமிழ்நாடும் அளவிடற்கரிய வகையில் விரைந்து வேகமாக வளர்ச்சி பெற்று வருகின்றது. இந்த அருமையான சந்தர்ப்பத்தில் இதுபோன்ற ஒரு சர்வதேச தரத்திலான வர்த்தகப் பயிற்சி மையத்தை உருவாக்குவதற்கு இதுதான் சரியான தருணமாகும் என்றும், இதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் முதலமைச்சர் அவர்கள் செய்துதர உத்தரவிட வேண்டும் என்றும் அப்போது அவர் கேட்டுக் கொண்டார்.

அதற்கு முதலமைச்சர் அவர்கள் பேராசிரியர் பாலா வி.பாலச்சந்திரன் சர்வதேச தரத்திலான வர்த்தகப் பயிற்சி மையத்தை சென்னையில் நிர்மாணிப்பதற்கு எடுத்து வரும் முயற்சிகளை வெகுவாகப் பாராட்டியதுடன், அதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதாக உறுதியளித்தார்கள்.

இதன் மூலம் சென்னை வர்த்தக தலைநகரமாகும் சூழல் தெரிய வருகின்றது. முதலமைச்சர் அவர்கள் பேராசிரியர் பாலா வி.பாலச்சந்திரனிடம் இந்தப் புதிய வர்த்தகப் பயிற்சி மையம் மிகக்குறுகிய கால அளவில் வெகுவேகமாக நிர்மாணிக்கப்பட்டு செயல்பாட்டிற்கு வரத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து செயல்படுத்த வேண்டுமென்று ஆலோசனை கூறினார்கள். பேராசிரியர் பாலா வி.பாலச்சந்திரன் முதலமைச்சர் அவர்களின் ஒத்துழைப்பிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டதுடன், முதலமைச்சர் அவர்களின் ஆசியினால் இந்தப் பயிற்சி மையம் பல்வேறு வெற்றிகளைக் குவிக்கும் வகையில் சர்வதேச தரத்திலான வர்த்தக பயிற்சி மையம் விரைவில் சென்னையில் நிர்மாணிக்கப்பட்டு செயல்படத் தொடங்கும் என்று கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமதி. லட்சுமி பிராணேஷ், இ.ஆ.ப., மேம்பாட்டுத்துறை ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்திதாள்**

1780–இல் ஜேம்ஸ் அக்ஸ்டஸ் ஹிக்கி என்ற ஆங்கிலேயர்தான் முதன் முதலில் அச்சு வடிவச் செய்தித்தாள் கல்கத்தாவிலிருந்து வெளிவரக் காரணமானவர். அதனாலேயே அவரை இந்திய இதழியலின் தந்தை என்று அழைப்பர்.

அந்தச் செய்தித்தாளின் பெயர் "பெங்கால் கெஜட்" அல்லது "கல்கத்தா அட்வர்டைசர்". இது ஆங்கில மொழி வார இதழாகும்.

# தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில்
# "மகாகவி பாரதியார் பிறந்தநாள் விழா"

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் பாரதி மணிமண்டபத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் மகாகவி பாரதியார் அவர்களின் 122ஆவது பிறந்தநாள் விழா 13–12–2003 அன்று மிகச் சிறப்பாக கொண்டாடப் பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு.சொ.கருப்பசாமி அவர்கள், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.நயினார் நாகேந்திரன் அவர்கள், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவிற்குத் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.ராஜாராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு.சொ.கருப்பசாமி அவர்கள் மகாகவி பாரதியார் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்துப் பேசும்போது :



"பெண்கள் முன்னேற்றம் குறித்து தனது கவிதைகள் மூலம் சமுதாயத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்தியவர் மகாகவி பாரதியார் ஆவார். பெண்கள் விடுதலைப் பெறவேண்டும், பெண்கள் கல்வி பெறவேண்டும் என்பதற்காக அன்று பாரதி பாடல்களைப் பாடினார். இன்று கிராமங்கள்தோறும் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் அமைத்து அவரது கனவை நனவாக்கி வருகிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். பெண்கள் கல்வியில் முன்னேற்றம் காண வேண்டும் என்பதற்காக குறிப்பாக இலவச மிதி வண்டிகள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். நடப்பாண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மாணவியர்கள் 1256 பேருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. கல்வி உதவித்தொகையாக ரூ.1 கோடியே 16 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது'' என்று குறிப்பிட்டார்கள்.

விழாவில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.நயினார் நாகேந்திரன் அவர்கள் பள்ளி மாணவ–மாணவியர்களிடையே நடைபெற்ற பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும், சான்றிதழ் களையும் வழங்கி,

"சுதந்திரப் போராட்டத்திற்காக பாடுபட்ட தியாகிகள் பலர் நம் நாட்டில் உள்ளனர். அவர்களில் மகாகவி பாரதியார் தமது கவிதைகள் மூலம் நாட்டு மக்களிடையே சுதந்திர தாக்கத்தினை ஏற்படுத்தினார். தாழ்த்தப்பட்ட மக்களின் கீழ் அதிக அளவு பாசத்தை காட்டியவர் பாரதியார். அனைவருக்கும் சமஉரிமை வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியவர். சமூகத்தில் பிறப்பால் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற பேதம் இருக்கக்கூடாது என கூறியதுடன் வாழ்ந்தும் காட்டியவர் பாரதி அவர்கள்'' என்று தெரிவித்தார்கள்.

மேலும் இவ்விழாவில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் சமூக நலத்துறை, மகளிர் திட்டம், ஊரக வளர்ச்சி முகமை, தாட்கோ, வருவாய்த்துறை, மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் வேளாண்மைத்துறை ஆகிய துறைகளின் சார்பில் மொத்தம் 1056 பேருக்கு ரூபாய் 21 இலட்சம் மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும் "குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பொருத்தமான கவிதைகளை எழுதிய கவிஞர் மகாகவி பாரதியார் அவர்கள். கவிதை மூலம் தேசப் பற்றை ஊட்டி வளர்த்தவர் ஆவார். மகாகவி பாரதியார் கண்ட கனவு தற்போது தமிழகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நனவாக்கப்பட்டு வருகிறது. 1992ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மகளிர் சுய உதவிக்குழுக்கள் இன்று சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே, உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே'' என்று பாரதியார் பாடினார். அதுபோன்று எந்த தவறு செய்தாலும் துணிச்சலுடன் தட்டிக் கேட்டு வருபவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்'' என்று குறிப்பிட்டார்.



விழாவிற்குத் தலைமையேற்று பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.ராஜாராமன், இ.ஆ.ப., அவர்கள்,

"மக்கள் மத்தியில் தேசப்பற்று உருவாக வேண்டும். ஒரு நாடு முன்னேற கிராமங்கள் முன்னேற்றம் காணவேண்டும். கிராம வளர்ச்சிக்காக நாம் அனைவரும் சிந்தித்துச் செயல்பட வேண்டும்'' என கூறினார்.

இவ்விழாவில் கோவில்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.சோ. ராஜேந்திரன், விளாத்திகுளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. என்.கே. பெருமாள், தூத்துக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. எஸ். ராஜம்மாள், மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி. பிரேமகுமாரி ஜெம்மா கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திரு. க. கணேசன், எட்டயபுரம் பேரூராட்சித் தலைவர் ஆர். கிருத்திகா ஜெயலட்சுமி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

முன்னதாக மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பாரதி மணிமண்டபத்தில் உள்ள மகாகவி பாரதியார் முழு உருவச் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

**பல்துறை பணி விளக்க முகாம்**

மகாகவி பாரதியார் அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு எட்டயபுரம் பாரதி மணிமண்டப வளாகத்தில், மக்கள் நலன் கருதி அரசு செயல்படுத்தி வரும் திட்டப்பணிகள், சாதனைகள் குறித்து பொதுமக்கள் அறியும் வண்ணம் செய்தி - மக்கள் தொடர்புத்துறை, வருவாய்த்துறை, சமூகநலத்துறை, மாவட்ட மறுவாழ்வுத்துறை, தாட்கோ, மகளிர் திட்டம், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம், கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண்மைத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் வனத்துறை போன்ற பல்வேறு துறைகளின் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டு, விளக்கக் குறிப்புகள் மற்றும் புகைப்படங்கள் வைக்கப்பட்டன. செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இந்தப் பல்துறை பணி விளக்க முகாம் கண்காட்சியினை பார்வையிட்டனர்.

முன்னதாக தூத்துக்குடி இசைப்பள்ளி "மாணவர்களின் மங்கள இசையும்", விழா முடிவில் பள்ளி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சி களும், திருநெல்வேலி மண்டல கலை பண்பாட்டு மையம் சார்பில் நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

**- துரை. ராஜ்குமார்**
**செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தூத்துக்குடி.**

## திராவிட மொழிகள்

**திராவிட மொழிக்குடும்பத்தில் 153 மொழிகள் உள்ளன என்று ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது. இதில் பல மொழிகள் வட்டார வழக்குகள் என்றும், இந்திய மொழிக்குடும்பத்தில் பேசுவோரை வைத்து மதிப்பிடும்போது இது இரண்டாவது இடத்தைப் பெறுகிறது என்றும் அவ்வாய்வு கூறுகிறது. இந்திய மக்கள் தொகையில் 24.47 விழுக்காட்டினர் இம்மொழிகளைப் பேசுகின்றனர்.**

**- *"தமிழ்மொழி வரலாறு"* என்ற நூலிலிருந்து**

# மதுரை மாவட்டத்தில்

# சிறப்பு மருத்துவ முகாம்

தமிழக அரசு தாயுள்ளத்துடன் தமிழக கிராமப்புற மக்களின் நல்வாழ்விற்காக அறிமுகப்படுத்திய திட்டம் தான் இலவச சிறப்பு மருத்துவ முகாம்.

இம்மருத்துவ முகாமினை கிராமப் பகுதிகளில் நடத்துவதன் மூலம் தொற்று நோய் அல்லாத நோய்களான சர்க்கரை நோய், இரத்தக் கொதிப்பு மற்றும் இருதய நோய்கள், புற்றுநோய், முதியோர்களுக்கான நோய்களிலிருந்து கிராம மக்கள் விடுபட்டு இறப்பு விகிதத்தை குறைக்கும் பொருட்டும் கிராம மக்கள் ஆரோக்கியமான வாழ்வு வாழவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழி செய்துள்ளார்கள்.



இந்த இலவச சிறப்பு மருத்துவ முகாமில் ஆண் மற்றும் பெண் சிறப்பு மருத்துவ நிபுணர் குழுவினர் சர்க்கரை நோய், இரத்தக் கொதிப்பு மற்றும் இருதய நோய்கள் புற்றுநோய், முதியோர்களுக்கான நோய்களுக்கு சிகிச்சையளிக்கவும் இதுதவிர பொது மருத்துவத்திற்கும் நோயின் தன்மைகளை கண்டறிந்து உரிய பரிசோதனைகள் செய்து சிகிச்சை அளித்து உரிய மருந்து மாத்திரைகள் முற்றிலும் இலவசமாக அரசின் சார்பில் வழங்கப்படும். தேவைப்படுவோருக்கு அக்கிராமத் திலேயே ஸ்கேன் பரிசோதனை, இ.சி.ஜி. மற்றும் பிற சிறப்பு பரிசோதனைகளும் செய்யப்படும்.

1. நெஞ்சுவலி, மார்பு படபடப்பு, மயக்கம் அடிக்கடி வருதல், தலை சுற்றல், மூச்சுத்திணறல் ஏற்படுதல், இடது தோளில் சில சமயம் பரவும் வலி போன்ற அறிகுறிகள் இருந்தால், அது இரத்தக் கொதிப்பு நோயாக இருக்கலாம்.

2. அடிக்கடி சிறுநீர் கழித்தல், அதிக பசி, அதிக தண்ணீர் தாகம் ஏற்படுதல், அடிக்கடி உடலில் அசதி ஏற்படுதல், உடலின் எடை குறைந்து வருதல், அடிக்கடி மயக்கம் வருதல் போன்ற அறிகுறிகள் இருந்தால் ஒரு வேளை சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

3. ஆறாத புண், உடலில் எங்கேனும் பல நாட்கள் வலியில்லாத கட்டி, வீக்கம், நிறத்தில் மாறுபடும் மச்சம், உணவு விழுங்குவதில் கஷ்டப்படுதல், தொண்டையில் தொடர்ந்தாற்போல் வலி, கரகரப்பு, உடலில் உள்ள இயற்கை துவாரங்களிலிருந்து அசாதாரண இரத்தப்போக்கு இவைகள் இருந்தால் ஒரு வேளை அவர்கள் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

4. முதியோர்களுக்கான நோய்களாக ஆஸ்துமா, மூட்டுவலி, கண்புரை மற்றும் பிறநோய்கள் ஆகியவற்றிற்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதே இம்முகாமின் நோக்கமாகும்.

இலவச சிறப்பு மருத்துவ முகாம் துவங்கி மூன்றாவது முகாமாக மதுரை மாவட்டத்தில் மேலூர் வட்டம் கருங்காலக்குடியில் **6–12–2003** அன்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.என்.தளவாய் சுந்தரம் அவர்கள் கலந்துகொண்டு முகாமை துவக்கி வைத்தார். இம்முகாமிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.பி.சந்திரமோகன், இ.ஆ.ப., தலைமையேற்றார். மேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.சாமி முன்னிலை வகித்தார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், "கிராமப்புற மக்களின் நலனைக்காக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி கிராமப்பகுதிகளில் சர்க்கரை நோய், இரத்தக்கொதிப்பு, புற்றுநோய் மற்றும் முதியவர் களுக்கான நோய்களை இம்முகாமில் பரிசோதனை செய்து உரிய மருந்துகள் இலவசமாக வழங்கப்படுகிறது என்றும் ஒவ்வொரு முகாமிற்கும் ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் இலவச மருந்துகள் வழங்கப்படுகிறது" என்றும் குறிப்பிட்டார்.

மேலும், அமைச்சர் அவர்கள் பேசும்போது சென்னைக்கு அடுத்தபடியாக தமிழகத்தில், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்காக பரிசீலனைக் குழு அமைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இக்குழுவின் தலைவராக மதுரை, இராசாசி மருத்துவமனை முதல்வர் அவர்களும் குழுச்செயலர் மற்றும் உறுப்பினராக இணை இயக்குநர் (சுகாதார பணி) அவர்களும் நிருவாக உறுப்பினராக மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களும் இடம் பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு மாதமும் செவ்வாய்கிழமையன்று இக்குழு கூடி, தகுதிவாய்ந்தவர்களை பரிசீலனை செய்யும். எனவே சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்வதற்கான கொடையாளர் மற்றும் பெறுபவர் ஆகியோர் பரிசீலனைக்காக இனி சென்னை செல்லத் தேவையில்லை என்றார். இதோடு மட்டுமல்லாமல் தனியார் மருத்துவமனைகளில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளும் ஏழை, எளியோரைப் பாதுகாக்கும் வகையில் ரூ.60 இலட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு நோயாளிக்கும் ரூ.1.50 இலட்சம் செலவில் மருந்து மற்றும் மாத்திரைகள் வழங்கப்படுகிறது என்றார்.

தமிழகத்தில் 1,412 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதாகவும் கடந்த இரண்டு வருடங்களில் 93 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளது எனவும் இதன் மூலமாக இச்சுகாதார நிலையங்களில் ரூ.40 இலட்சம் செலவில் 30 படுக்கை வசதிகள், விபத்து பிரிவு உட்பட பல்வேறு கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டு தரம் உயர்த்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

மேலும் சென்னையில் 65 நபர்களுக்கு பேஸ்மேக்கர் கருவி பொருத்தப்பட்டு இருதய கோளாறுகள் சரிசெய்யப்பட்டதாகவும் மதுரையில் 2 நபர்களுக்கு பேஸ்மேக்கர் பொருத்தப்பட்டுள்ளதாகவும், பேஸ்மேக்கர் கருவியின் விலை சுமார் ரூ.50 ஆயிரம் முதல் 65 ஆயிரம் வரை அரசே ஏற்கிறது என்றும் கூறினார்.

தமிழகத்திலுள்ள மருத்துவமனைகள் சிறப்பாக செயல்படுவதால் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் மூலமாக வருடத்திற்கு ரூ.180 கோடி மதிப்பீட்டில் மருந்துகள் மற்றும் மாத்திரைகள், பிற மாநிலங்களிலிருந்து ஒளிவு மறைவின்றி ஒப்பந்த புள்ளிகள் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுவதாக கூறினார்.

மேலும் சென்னையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உலக ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு சென்னை கே.கே.நகரில் இயங்கும் உடல் ஊனமுற்றோர் நலனுக்கான மருத்துவமனைக்கு ரூ.1.82 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அண்மையில் அறிவித்துள்ளார். இதன் மூலமாக உடல் ஊனமுற்றோர் நலனும் காக்கப்படுகிறது.

சாலைகளில் ஏற்படும் விபத்துகளினால் பாதிக்கப் படுவர்களின் உயிரைக்காக்கும் வகையில் தமிழகத்தில் திண்டிவனம், கிருஷ்ணகிரி, தருமபுரி, விழுப்புரம், கோவில்பட்டி ஆகிய 5 இடங்களில் மருத்துவ மனைகளைத் தேர்வு செய்து ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் தலா ரூ.63 இலட்சம் ஒதுக்கீடு செய்து ரூ.3.38 கோடி மதிப்பீட்டில் இம்மருத்துவமனைகளில் உயிர்காக்கும் பணிக்கு அரசு முக்கியத்துவம் அளிக்கிறது.

நகர்புற மக்களின் நலனைக் காப்பதோடு மட்டுமல்லாமல், கிராமப்புற மக்களின் நலனைக் காக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின்



அறிவுரைப்படி கிராமப்பகுதிகளில் இம்மருத்துவ முகாம் நடைபெறுகிறது என்று கூறினார்.

இம்முகாமிற்குத் தலைமை வகித்த மாவட்ட ஆட்சியர் பேசும்போது, கடந்த மூன்று ஆண்டுகளாக இம் மாவட்டத்தில் இம்முகாம் சிறப்பாக நடைபெறுவதாகவும், 2001–2002 ஆம் ஆண்டில் 5 முகாம்கள் நடத்தப்பட்டு, 8,726 பேர் சிகிச்சை பெற்று 377 பேர் மேல் சிகிச்சைக்குப் பரிந்துரை செய்யப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

இதேபோல் 2002–2003ஆம் ஆண்டில் 13 முகாம்கள் நடத்தப்பட்டு 28,557 பேர் சிகிச்சை பெற்று, 611 பேர் மேல் சிகிச்சைக்குப் பரிந்துரை செய்யப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

இதேபோல் 2003–2004ஆம் ஆண்டில் 13 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டு கொட்டாம்பட்டி, அலங்காநல்லூர், திருமங்கலம், திருப்பரங்குன்றம், மதுரை கிழக்கு, சேடப்பட்டி, டி. கல்லுப்பட்டி, உசிலம்பட்டி, மதுரை மேற்கு செல்லம்பட்டி, டி. வாடிப்பட்டி, கள்ளிக்குடி, மேலூர் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது என்றார். மேலும் இம்முகாமில் 35 மருத்துவர்களும் 19 சிறப்பு மருத்துவர்களும் 102 செவிலியர்களும் இம்முகாமில் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

அரசு இராசாசி மருத்துவமனையில் திறந்த இருதய அறுவைச் சிகிச்சை ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு செய்யப்பட்டு வந்தது. தற்போது அது இரண்டாக உயர்த்தப்பட்டு இதுவரை 82 நபர்களுக்கு இந்த அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆண்டு 120 முதல் 130 அறுவைச் சிகிச்சை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் தனியார் மருத்துவமனை மூலமாக 50 ஏழைகளுக்கு இருதய அறுவைச் சிகிச்சை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் இம்மாவட்டத்தில் இருதய அறுவைச் சிகிச்சை செய்வதற்கான காத்திருப்போர் பட்டியலின் எண்ணிக்கை குறைந்து வருவதாகக் கூறினார்.

- சிவ.சு. சரவணன்

*செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,*

*மதுரை*

* * *

# கரூர் மாவட்டத்தில்
# பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம்

**பொ**ன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மற்றொரு மைல் கல்லாக க.பரமத்தி ஒன்றியத்தில் நெசவுதொழில் செய்துவரும் அம்மன் மகளிர் சுய உதவிக்குழு மற்றும் ஓம்சக்தி மகளிர் சுய உதவிக்குழு போன்ற 11 குழுக்களையும் இணைத்து "ஸ்ரீமகளிர் எக்ஸ்போர்ட்ஸ்" என்ற பெயரில் விற்பனை செய்திட தனியே வங்கிக் கணக்குத் தொடங்கி, மாவட்ட அலுவலகத்தில் பதிவு செய்வது எனவும் முடிவு செய்யப்பட்டது. இக்குழுவினர் உற்பத்தி செய்திடும் எக்ஸ்போர்ட் ரக மேட், தலையணை உறை, நேப்கின்ஸ், திரைச்சீலைகள், படுக்கை விரிப்புகள் ஆகியவைகளை நேரடியாக ஏற்றுமதி செய்திட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. அம்மன் மகளிர் சுய உதவிக் குழுவினைச் சேர்ந்த பெண்கள் தற்போது மாதம் ஒன்றுக்கு 3 பாவு வீதம் 54 டஜன் மேட் ரக பொருட்களை உற்பத்தி செய்து நேரடியாக கரூரில் உள்ள ஏற்றுமதி நிறுவனம் மூலம் தற்போது விற்பனை செய்து வருகிறார்கள். ஐதராபாத்தில் நடைபெற்ற சார்ஸ் கண்காட்சியிலும் ஸ்ரீமகளிர் ஏற்றுமதி நிறுவனம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு விதமான மேட்டுகள் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகளுக்கும் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை அனுப்பி வைக்கும் வகையில் சுய உதவிக்குழுவினருக்கு 28.09.2003 முதல் 30.09.2003 வரையில் சென்னையைச் சேர்ந்த 'சிபா' (SIPA) நிறுவனத்தின் மூலம் விற்பனை திறன் வளர் பயிற்சி



அளிக்கப்பட்டுள்ளது. பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் இக்குழுவினருக்கு மானியத்துடன் கூடிய கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பினையும் நிரந்தர வருவாயையும் பெற்று வாழ்க்கைத் தரம் மேம்பட வழி ஏற்பட்டுள்ளது.

– வீ. தங்கராஜ்
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர் (பொ),
கரூர்.

* * *

## எவரெஸ்ட் சிகரம் - சில தகவல்கள்

- 1921 இல் எவரெஸ்ட் சிகரத்தை நோக்கிய முதல் பயணம் தொடங்கியதிலிருந்து இன்று வரை 63 நாடுகளைச் சேர்ந்த 1,200 பேர் அதன் உச்சியை அடைந்திருக்கிறார்கள்.
- 176 பேர் எவரெஸ்டிலேயே உயிரிழந்து இருக்கிறார்கள்.
- 1991, மே 23 அன்று மட்டும் 89 பேர் எவரெஸ்ட் மீது ஏறி வெற்றிக்கொடி நாட்டியுள்ளனர்.
- 1996, மே 10–11 தேதிகளில் மட்டும் 10 பேர் எவரெஸ்டில் உயிரிழந்துள்ளனர்.
- எவரெஸ்டில் நான்கு பக்கமும் ஏறி உச்சியை அடைந்த ஒரே மனிதர் குஷன்ஷெர்பா என்பவர்தான்.
- இரண்டு முறை எவரெஸ்டை ஏறிய முதல் பெண்மணி சந்தோஷ் யாதவ்.
- உயிர்வாயு இன்றி எவரெஸ்டில் ஏறிய முதல் இந்தியர் புதோர்ஜி. 1984இல் இவர் இப்பயணத்தை மேற்கொண்டார்.
- எவரெஸ்டில் ஏறிய முதல் இந்தியப் பெண்மணி பசீந்த்ராபால்.
- உலகிலேயே எவரெஸ்டில் ஏறிய முதல் பெண்மணி ஜீன்கோதேபேய் என்னும் ஜப்பானியப் பெண். இவர் 1975இல் ஏறினார்.
- உலகின் மிக உயரத்தில் அமைந்திருக்கும் சரணாலயத்தின் பெயர் ஷாகர் மாத்தா தேசிய சரணாலயம். இது எவரெஸ்ட் அருகில்தான் உள்ளது.
- எவரெஸ்ட் சிகரத்தைத் தொட்ட முதல் மற்றும் ஒரே பார்வையற்றவர் எரிக் வெயன் மேயர் என்பவர் ஆவார்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் தொடர்ந்து நான்காவது ஆண்டாக இலாபத்தில் இயங்குகின்றது. மேலும் நடப்பு ஆண்டில் (2002–2003) மாநிலத்திலேயே சிறந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியமாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் குறைந்த அளவு எண்ணிக்கை உடைய பணியாளர்களைக் கொண்டு அதிக இலாபத்துடன் இயங்கியதற்காக தொடர்ந்து நான்காவது ஆண்டாக முதல் பரிசைப் பெற்றுள்ளது. அரசு அறிவித்துள்ள சிக்கன நடவடிக்கையின் காரணமாக இந்நிறுவனம் 2002–2003ஆம் ஆண்டு ரூ.1 கோடியே 20 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

மொத்த விற்பனையில் இவ்வொன்றியத்தின் பணியாளர்களின் செலவு 3.16 சதவிகிதம் ஆகும். இது மாநிலத்திலேயே மிகக் குறைந்த அளவாகக் கொண்டு படைத்துள்ள சாதனை ஆகும்.

2002–2003ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 1.90 இலட்சம் லிட்டர் பால் திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் கரூர் மாவட்டத்தில் உள்ள 513 கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டன.

இதில், நாள் ஒன்றுக்கு 72,000 லிட்டர் பால் உள்ளூரில் விற்பனை செய்யப்படுகிறது. 77,000 லிட்டர் சென்னை பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மீதமுள்ள பால் ஈரோடு மற்றும் மதுரை மாவட்டத்தில் உள்ள பால் பண்ணையின் மூலம் பால் பவுடர் மற்றும் பால் தொடர்பான துணைப்பொருள்கள் தயாரிக்க அனுப்பப்படுகின்றன.

# தமிழகத்திலேயே சிறப்பிடம் பெற்ற திருச்சிராப்பள்ளி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம்

இவ்வொன்றியத்தின் நிருவாகச் செலவுக்காக கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பால் வழங்கும் விவசாயிகளிடமிருந்து ஒரு லிட்டருக்கு 10 பைசா வீதம் வசூல் செய்யப்படுகிறது. தற்போது ஒன்றியத்தில் கையிருப்புத்தொகை போதிய அள்வு இருப்பதால் மாவட்ட ஆட்சித்தலைவரும், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய தலைவருமான டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., அவர்கள் அறிவுரையின் பேரில் நடப்பு ஆண்டில் ரூ.77 இலட்சம் ஊக்கத்தொகை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. மேலும் இவ்வொன்றியத்திற்கு பால் வழங்கிய விவசாயிகள் அனைவருக்கும் இதுவரை நிலுவை இல்லாமல் பணம் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் 50 டன் மதிப்பில் நெய் உற்பத்தி செய்து சிறந்த முறையில் பேக்கிங் செய்யப்பட்டு குஜராத், மத்திய பிரதேசம், கேரளா, இராஜஸ்தான் போன்ற வெளிமாநிலங்களுக்கு சென்னை பால் உற்பத்தியாளர் இணையம் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.



பாலில் இருந்து வெண்ணை எடுப்பது தற்போது 50,000 லிட்டர் கொள்திறனிலிருந்து ஒரு இலட்சம் கொள்திறனாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 4 டன் நெய் உற்பத்தி செய்ய முடியும்.

இவ்வொன்றியத்தின் மூலம் 30,000 லிட்டர் திறன் கொண்ட குளிரூட்டும் நிலையம் ஒன்று பெரம்பலூர் மாவட்டம் விலான்குடி கைகாட்டி என்ற இடத்தில் அமைக்கத் திட்டமிட்டு, அதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்துள்ளது.

1939 ஆம் ஆண்டு இந்தக் கூட்டுறவு ஒன்றியம் தொடங்கப்பட்டது. இது 1995 ஆம் ஆண்டு தேசிய பால்வள வாரியத்தின் மூலம் உலக வங்கி நிதி உதவி பெற்ற பிறகு நவீனமயமாக்கப்பட்ட பால் பண்ணையாகத் திகழ்கிறது. தற்போது இந்தக் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 1.50 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தப்படுகிறது.

இதனை விரிவு படுத்தும் வகையில் பெரம்பலூர் பால்குளிரூட்டும் நிலையத்தை 50,000 லிட்டர் கொள் திறனிலிருந்து ஒரு இலட்சம் லிட்டர் கொள்திறன் கொண்ட பிரிவாக உயர்த்தவும், கரூரில் 30,000 லிட்டர் கொள்திறன் கொண்ட புதிய குளிரூட்டும் நிலையம் ஒன்றும் உருவாக்கப்படவுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் பெண்களுக்கான பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம் (Support to Training and Employment Programme for Women). 90 சதவிகிதம் மத்திய அரசு உதவியுடனும், 10 சதவிகிதம் ஒன்றிய பங்காகவும் கொண்டு 2002–2003 ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுக்கு செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் தமிழகத்தில் திருச்சிராப்பள்ளி உட்பட 7 ஒன்றியங்களில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்படி ஒரே கிராமத்தில் 70 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு சிறப்பு மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2002–2003 ஆம் ஆண்டிற்கு 4 சங்கமும் 2003–2004 ஆம் ஆண்டிற்கு 2 சங்கமும் 2004–2005 ஆம் ஆண்டிற்கு 2 சங்கமும் ஆக மூன்று ஆண்டுகளில் 8 சங்கங்கள் செயல்படும்.

சங்கத்திற்கு உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும் செயலாளர் பயிற்சி, செயற்கைமுறைக் கருவூட்டல் பயிற்சி, நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பயிற்சி போன்ற பல்வேறு பயிற்சிகளுக்கும் மற்றும் கறவை மாடுகள் வாங்க ஒரு உறுப்பினருக்கு தலா ரூ.2,000 வீதம் விளிம்பு தொகை வழங்குதல் உள்பட ஆக மொத்தம் ஒரு சங்கத்திற்கு ரூ.3.5 இலட்சம் வரை உதவிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் சுயவேலைவாய்ப்பு மூலம் கறவை மாடுகள் வாங்கி அவற்றை நவீன விஞ்ஞான முறையில் பராமரித்து, அதற்குத் தேவையான செயற்கை முறைக் கருவூட்டல், மருத்துவ வசதிகள் மற்றும் கால்நடைத் தீவனம் ஒன்றியத்தின் மூலம் வழங்கி, உறுப்பினர்கள் பாலை மகளிர் சங்கத்திற்கு வழங்கி தங்கள் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ளவும், சட்டம், சுகாதாரம் மற்றும் சத்துணவு தொடர்பான தெளிவு பெற்று தங்களையும் தங்கள் குடும்ப உறுப்பினர்களையும் சமூகப்



பொருளாதார முன்னேற்றம் அடையச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

கோயம்புத்தூரில் நடைபெற்ற அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் தமிழகத்திலேயே சிறந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியமாக தேர்வு செய்யப்பட்ட திருச்சிராப்பள்ளி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு கேடயம் வழங்கப்பட்டது. கேடயத்தை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. ப.வெ.தாமோதிரன் அவர்கள், மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு. செ.ம. வேலுச்சாமி அவர்கள் முன்னிலையில் திருச்சிராப்பள்ளி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் திரு. வி.டி. முருகப்பனிடம் வழங்கினார்.

- கோ.பன்னீர்செல்வம்
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*திருச்சிராப்பள்ளி.*

* * *

# உடல் ஊனமுற்றோருக்கான உன்னதப் பணி - நீலகிரி மாவட்டத்திற்குத் தேசிய விருது

தேசிய அறக்கட்டளையின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைவராகவும் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் அமைப்பாளராகவும் டாக்டர் பி.ஏ. காணிக்கராஜ் மற்றும் சந்திர காந்தி ஆகியோர் உறுப்பினர்களாகவும் கொண்டு உள்ளூர் குழு (Local Level Committee) செயல்பட்டு வருகிறது. இக்குழு மத்திய அரசின் சமூக நிதி மற்றும் அதிகாரம் வழங்குதல் அமைச்சகத்தில் இயங்கும் தேசிய அறக்கட்டளையுடன் இணைக்கப்பட்டு உடல் ஊனமுற்றவர்கள், குறிப்பாக புற உலக சிந்தனை இல்லாதவர்கள், மூளை முடக்குவாதம் கண்டவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் பல்வகை ஊனம் உள்ளவர்களின் நல்வாழ்வுக்காக தேசிய அறக்கட்டளை சட்டத்தின்கீழ் (1999 ஆம் ஆண்டின் 44வது சட்டம்) ஏற்படுத்தப்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில் இக்குழு 2001ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஊனமுற்றோர்களின் நலன் கருதி இக்குழு பலவழிகளில் திட்டமிட்டு மாவட்ட அளவில் ஊனமுற்றோரை கண்டுபிடித்து, கணக்கெடுப்பு நடத்தி, அவர்களின் தேவைகளை ஆய்ந்து அவர்கள் சுயேச்சையாகவும் தாங்கள் சார்ந்துள்ள சமூகத்திற்கு உள்ளும் இயன்றவரை அதற்குப் பொருத்தமாக வாழ்வதற்கு வசதியும் அதிகாரமும் வழங்குகிறது. மேலும் ஊனமுற்ற நபர்களுக்குக் காப்பாளர் மற்றும் அறங்காவலர்களை நியமிப்பதற்கான வழி முறைகளை உருவாக்கித் தருகிறது. ஊனமுற்றவர்களுக்கு சமவாய்ப்பும் உரிமைப் பாதுகாப்பும் முழு பங்காகவும் கிடைக்க உதவுகிறது.



மேலும் நீலகிரியில் மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு இரண்டு காப்பகங்களை ஏற்படுத்தி, அவர்களின் உடல் மற்றும் உள்ளம் வளர்ச்சியடைய பல்வேறு வகை உடற்பயிற்சி, தசைப்பயிற்சி, பேச்சுப்பயிற்சி, அடிப்படைக்கல்வி ஆகியவற்றைத் தொடர்ந்து அளித்து வருகிறது. மேலும், தாங்களே தங்கள் கடமைகளைச் செய்து கொள்ளவும் பேசவும், பாடவும், ஆடவும் கற்பிக்கப்படுகிறது.

பழைய அருவங்காடு என்ற இடத்தில் ஒரு நிரந்தர காப்பகம் அமைத்து 20 குழந்தைகள் இக்காப்பகத்திலே தங்கி பயில ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இங்கு சிறப்பு கல்வி பயின்ற ஆசிரியர், இல்லக் காப்பாளர், தசைப்பயிற்சியாளர், உதவியாளர்கள், காவலர், சமையலர் மற்றும் துப்புரவு பணியாளர் என 10 நபர்கள் இக்குழந்தைகளின் நலன்களை கவனித்து வருகிறார்கள். மேலும் கடலூரில் மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குத் தினந்தோறும் சென்று பயிலும் காப்பகமும் (Day Care Centre) அமைத்து, அக்காப்பகத்தில் சிறப்பு கல்வி பயின்ற பணியாளர்கள் நியமிக்கப்பட்டு குழந்தைகள் காக்கப்பட்டு வருகிறார்கள். இதில் 25க்கும் மேற்பட்ட குழந்தைகள் வந்து

பயின்று வருகிறார்கள். குழந்தைகள் மட்டும் அன்றி அவர்களது பெற்றோரும் இக்குழந்தைகளின் நலனில் கவனம்கொண்டு அவர்களின் ஒத்துழைப்போடு குழந்தை பராமரிக்கப் படவும் வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

மேலும் கக்குச்சி, கொராடா மட்டம், கடநாடு என்ற கிராமங்களில் மொத்தம் 293 தடையில்லா சிறப்பு வீடுகள் அமைத்துக் கொடுத்து ஊனமுற்ற நபர்கள் சிரமம் இன்றி எளிதில் செல்லவும், புகையில்லாத சமையல் அறை மற்றும் துப்புரவான கழிப்பறை அடங்கியதாக வடிவமைக்கப் பட்டு தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது, நீலகிரி மாவட்டத்தின் சிறப்பு அம்சமாகும். மேலும் இம்மூன்று இடங்களிலும் தசைபயிற்சி மையம், குடும்ப ஆலோசனை மையம், சுயதொழில் செய்து தங்கள் வருமானத்தை பெருக்கிக் கொள்ள மகளிர் திட்டம் மூலம் பயிற்சி வழங்கி தொழில் தொடங்கவும் சுய உதவிக் குழுக்கள் அமைத்து அந்தந்த பகுதி மக்கள் தாங்களாகவே திட்டமிட்டு தங்கள் வசதியை பெருக்கிக் கொள்ள துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் நீலகிரி மாவட்டத்திற்கு 13.9.2003 அன்று வருகை புரிந்தபோது ரூ.5.25 இலட்சம் மதிப்பீட்டில் கக்குச்சி என்ற கிராமத்தில், பாரதி நகர் என்ற இடத்தில் தசைப்பயிற்சி மற்றும் சமுதாய கூடம் திறந்துவைக்கப்பட்டது. இக்கூடத்திலேயே தொழில் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு ஒரு பால்வாடி மையம் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் அனைத்தும் மாவட்ட ஆட்சியர் திரு.கே.செல்லமுத்து, இ.ஆ.ப., அவர்களின் சீரிய தலைமையில் நடைபெற்று வருகிறது.

மேலும் இக்குழந்தைகளின் நலன் காக்க குழந்தைகள் நல மருத்துவர் நியமனம் செய்து, முறையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மேலும் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் ஊனமுற்றவர்களுக்கும் ஊனமுற்ற குழந்தைகளின் பெற்றோர்களுக்கும் சமுதாயத்தில் சம உரிமை வழங்கவும் தங்களின் உரிமைகளைக் காக்கவும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து அவர்கள் அரசு மூலம் பெறக்கூடிய நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறார். அரசு திட்டத்தில் நீலகிரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்படும் உதவித் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு அனைத்து தரப்பு மக்களும் பயனடையும்படி வழிவகை செய்யப்படுகிறது.

ஊனமுற்றவர் நலனில் அரசு மற்றும் அரசு துறை அல்லாத தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அனைத்தும் ஒத்துழைக்க வேண்டி அனைத்து துறை அலுவலர்களுக்கும் தொண்டு நிறுவனத்தின் ஊழியர்களுக்கு அரசு திட்டம் பற்றி விளக்கி அவரவர் துறை மூலம் ஊனமுற்றவர்களுக்கு என்ன உதவி செய்ய முடியுமோ அதை செய்யவும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் அனைத்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சிறப்பான நிருவாகத்தின்கீழ் செயல்பட்டு வருவதால் நாட்டிலேயே சிறந்த உள்ளூர் குழுவிற்கான மாவட்டம் நீலகிரி மாவட்டம் என தெரிவு செய்யப்பட்டு நமது நாட்டின் குடியரசு தலைவர் மூலம் சிறப்பு விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதை நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.செல்லமுத்து, இ.ஆ.ப., அவர்கள் நமது குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்களால் 3–12–2003 அன்று டில்லியில் நடைபெற்ற சர்வதேச ஊனமுற்றோர் விழாவில் பெருமை படுத்தப்பட்டார் என்பது நீலகிரி மாவட்டத்திற்கு மட்டுமின்றி நம் மாநிலத்திற்கே பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

**- அ. சந்திரசேகரன்**
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
நீலகிரி.

## அண்டார்டிகா

**அண்டார்டிகாவில் நிலவும் சராசரி வெப்பநிலை 37° சில நேரங்களில் இங்கு இந்த வெப்பநிலை –88° அளவுக்கு தாழ்ந்துவிடுகிறது. இங்கு சில சமயங்களில் காற்று வேகமாக விசி விரைவாக ஓடும் ரயில் வண்டியைப் போன்று ஒலியை உருவாக்குகிறது.**

**இங்கு 3 கி.மீ. ஆழத்திற்கு பனி உறைந்து கிடக்கிறது.**

**14 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள இந்த பிரதேசத்தில் உறைந்திருக்கும் பனி உலகில் இருக்கும் பனியின் அளவில் 95% என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.**

☐ ☐ ☐




குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு வகை நிலங்களையும் தன்னகத்தே கொண்ட இயற்கையன்னையின் எழில்மிகு மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். இம்மாவட்டத்தில் மலையும் மலையை சார்ந்த வனமும் கொண்ட குறிஞ்சி, முல்லை, நிலப்பகுதிகள் இயற்கையெழிலோடு திகழ்கின்றன. சுற்றுலா மாவட்டமாக திகழும் குமரியில் குறிஞ்சி மற்றும் முல்லை நிலத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது. வனங்களிலுள்ள மலைகளில் உற்பத்தியாகும் ஆறுகள் தான் மாவட்டத்தை வாழவைக்கின்றது. சுற்றுலாப் பயணிகளை கவரும் இயற்கையான அருவிகளும் வனத்தாயின் அருட்கொடையே ஆகும். இயற்கையருவிகள் சுற்றுலா பகுதி வரிசையில் திற்பரப்பு அருவியை அடுத்து வருவது உலக்கையருவி ஆகும்.

நாகர்கோவிலிலிருந்து சுமார் 16 கி.மீ. தொலைவில் தடிக்காரன்கோணம் செல்லும் சாலையில் அழகிய பாண்டியபுரம் சந்திப்பிலிருந்து 4 கி.மீ. தொலைவில் உலக்கையருவி மலை அமைந்துள்ளது. காட்டுப்புதூர் ஊராட்சிக்குட்பட்ட உலக்கையருவி மலை அடிவாரமான 'தூவச்சி' பகுதியிலிருந்து சுமார் 3½ கி.மீ. தூரம் கால்நடையாக மலை, காடு வழியே செல்லும்போது உலக்கையருவியைக் காணலாம். அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படாத நிலையிலும் கரடு முரடான மலைப்பாதை வழியே உள்ளூர் மற்றும் மாவட்டத்திலுள்ள மக்கள், உலக்கையருவிக்குச் சென்று நீராடி, இயற்கையழகை கண்டுகளிப்போர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே செல்கிறது. செல்லும் வழி முழுவதும் இயற்கையன்னையின் வரபிரசாதமான பச்சை பசேலென்ற காடுகள் உள்ளன. தேக்கு, ஈட்டி, மருது, வேங்கை, நெல்லி போன்ற மரவகைகளோடு கிளைகளை வெட்டினால் தண்ணீர் கொட்டும் அரிய வகை பில்லாணி மரம் மற்றும் தலைவலி தைலம் தயாரிக்கும் புல் உட்பட அரிய வகை மூலிகைகள் மலைக்காட்டில் ஏராளம். கரடி, குரங்கு, மீளா, செந்நாய், காட்டுபன்றி, சிறுத்தை, காட்டுக்கோழி, சிங்கவால் குரங்கு, மலைப்பாம்பு என வன விலங்குகளும் ஏராளம் உண்டு.

சுற்றுலாத்தல மேம்பாட்டிற்காக தனி முக்கியத்துவம் வழங்கி உலக சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் மேம்பாட்டுப் பணிகளை வடிவமைத்து தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. வரலாற்று சிறப்பு மிக்க உதயகிரி கோட்டை, வரலாற்றுச் சின்னமான அலைகள் தாலாட்டும் வட்டக்கோட்டை, காண்போரை வியக்க வைக்கும் மாத்தூர் தொட்டிபாலம், திற்பரப்பு அருவி என சுற்றுலாத்தல மேம்பாட்டுப் பணியைத் தொடர்ந்து உலக்கையருவி சுற்றுலாத்தல மேம்பாட்டு பணிகளுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

உள்ளூர் மக்கள் மட்டுமே கண்டு களித்து வந்த உலக்கையருவி சுற்றுலாத்தலத்தை மேம்படுத்தி வெளிமாநில சுற்றுலாப்பயணிகளை கவரும் வகையில் உருவாக்கிட மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்கள் அதிகாரிகளுடன் 3 கிலோமீட்டர் தூரமும் நடந்து சென்று அனைத்து பகுதிகளையும் பார்வையிட்டார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், "கன்னியாகுமரி மாவட்டம் சிறந்த சுற்றுலா மாவட்டமாகத் திகழ்கிறது. சர்வதேச சுற்றுலாத் தலமாகவும் புண்ணிய தலமாகவும் விளங்கி வரும் கன்னியாகுமரிக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் மாவட்டத்திலுள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களையும் கண்டு களிக்கும் வகையில் மேம்பாட்டுப்பணிகள் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், கன்னியாகுமரிக்கு வருகை தரும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்கு அரசு நிதிஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மாத்தூர் தொட்டிபாலம் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் குழந்தைகள் பூங்கா, குளிக்கும் வசதி, வாகன நிறுத்துமிடம் உட்பட பல்வேறு

பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திற்பரப்பு அருவியில் சிறுவர் நீச்சல் குளம், பூங்கா உட்பட பணிகளும் உதயகிரிகோட்டையில் மான் பூங்கா மற்றும் சீரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது இயற்கை எழில்மிகு உலக்கையருவிக்கு வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளும் வந்து செல்லும் வகையில் அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகளை ரூ.20 இலட்சத்தில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. மலை அடிவாரத்திலிருந்து ½ கி.மீ. தூரம் சாலைவசதியும் மீதமுள்ள 3 கிலோ மீட்டர் வனப்பகுதியில் நடைபாதையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆண், பெண் தனித்தனியே குளிக்க வசதிகள், உடைமாற்றும் அறைகள், சுற்றுலாப்பயணிகள் அமர்ந்து இயற்கை யழகைக் கண்டுகளிக்க இருக்கை வசதிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட உள்ளன. உலக்கை அருவிக்கு வரும் சுற்றுலாப்பயணிகளுக்கு உதவ ஏற்கெனவே இயற்கையுடன் இசைந்த வன சுற்றுலா வழிகாட்டிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என கூறினார்.

உலக்கையருவி மேம்பாட்டுப் பணிகள் குறித்து காட்டுப்புதூர் ஊராட்சித்தலைவர் திரு.பொன்.சுந்தர்நாத் அவர்கள் கூறுகையில்,



“இயற்கையாகவே அமைந்துள்ள உலக்கையருவியில் வருடம் முழுவதும் தண்ணீர் இருக்கும். இவ்வருவிக்கு நீர் உற்பத்தியாகும் ‘சுனை’யில் கோடை காலத்தில் மட்டும் நீர் ஊற்று குறைவாக இருக்குமே தவிர நீர் வற்றியது இல்லை. இவ்வருவியில் குளிப்பதற்கும், இயற்கையழகை கண்டுகளிக்கவும் உள்ளூர் மக்கள் மட்டுமே சென்று வந்த நிலை மாறி மாவட்டம் முழுவதிலிருந்து மட்டுமின்றி பிற மாவட்டங்களிலிருந்தும் சுற்றுலாப்பயணிகள் திரளாக வந்து செல்கின்றனர். சுற்றுலாப்பயணிகளுக்குத் தேவையான வசதிகளை செய்துதரவேண்டும் என அப்பகுதி மக்கள் நீண்ட காலமாகக் கோரி வந்தனர். உலக்கையருவி பகுதி முழுவதும் வனப்பகுதிக்குள் இருப்பதால் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுவதில் தாமதம் ஏற்பட்டது. சுற்றுலாத்தலங்கள் மேம்பாட்டுப் பணிகளைத் தீவிரப்படுத்தி வரும் தமிழக முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் ‘உலக்கையருவி மேம்பாட்டுத் திட்டம் ஏற்கப்பட்டு செயல்படுத்தப்படுவது, சுற்றுலா தல மேம்பாட்டு பணி மட்டுமின்றி கிராம மக்களின் வாழ்க்கைதர மேம்பாட்டிற்கும் அடித்தளமாக அமையும்’’ என கூறினார்.

- கு. தாணப்பா,
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி.

## ஓவியத்தின் மதிப்பு!

உலகப் புகழ்பெற்ற ஓவியர் பிக்காஸோ என்பவரைப் பற்றி உலக மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

அவர் தீட்டிய ஒரு ஓவியம் மட்டுமே 36 இலட்சம் ரூபாய்க்கு அந்தக் காலத்திலேயே விற்கப்பட்டது. (அப்போது ரூபாயின் மதிப்பு இன்றைய ரூபாயின் மதிப்பை விட பல மடங்குகள் அதிகமாகும்)



அப்போது அவர் தீட்டிய ஆயிரத்துக்கும் அதிகமான ஓவியங்கள் அவரிடம் இருந்தன. அன்றைய பண மதிப்பின்படி அவருடைய ஓவியங்களின் மதிப்பு 17 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டதாம்.

# திருவாரூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகள்

**ஊ**ரக வளர்ச்சித் துறை மூலம் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகவும் முதன்மையான மாநிலமாகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கண்காணிப்பு மிக்க முயற்சியால் திகழ்ந்து வருகின்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுகளை தாயன்புமிக்க வழிகாட்டுதலோடு திருவாரூர் மாவட்டத்தில் குறிப்பாக தேசத்தின் இதயமாக விளங்கிடும் கிராமப்புறப் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளும் முழு சுகாதார திட்டப் பணிகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தொகுப்பு வீடுகள்

இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் ரூ.2.26 கோடி மதிப்பீட்டில் 662 தொகுப்பு வீடுகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் நிறைவடையும் நிலையில் உள்ளது.

கச்சா வீடுகளை பக்கா வீடுகளாக மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் ரூ.61.60 இலட்சம் மதிப்பீட்டில் 616 பணிகள் எடுக்கப்பட்டு 267 பணிகள் நிறைவுபெற்று மீதமுள்ள பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது.

சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா–Iன் கீழ் குளம் தூர்வாருதல், கிராம சாலைகள் அமைத்தல், நெல்களம் அமைத்தல் போன்ற 1043 பணிகள் ரூ.6.43 கோடி மதிப்பீட்டில் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா–IIன் கீழ் ரூ.5.89 கோடி மதிப்பீட்டில் 1,233 பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதில் 614 பணிகள் முடிவுற்றுள்ளன.

பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 28 சாலைகளை மேம்படுத்த ரூ.6.25 கோடிக்கு மதிப்பீடுகள் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

முழு சுகாதாரத் திட்டம்

முழு சுகாதாரத் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 77,000 குடும்பங்களுக்கு தனிநபர் கழிப்பறைகள் அமைக்கவும், 1,803 பள்ளிகளுக்கு கழிப்பிடங்கள் கட்டவும், 50 மகளிர் சுகாதார வளாகங்கள் அமைக்கவும், 519 அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறைகள் அமைக்கவும், கழிப்பறைகள் அமைக்க மற்றும் பராமரிக்கத் தேவையான சாதனங்களை மலிவு விலையில் பெற்றிட 5 ஊரக சுகாதார அங்கன்வாடிகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சம்பூர்ணா கிராமின் சுவராஜ்கர் யோஜனா திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் 795 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கிடவும், 300 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தொழிற்கடன் மானியம் வழங்கிடவும், திட்டமிடப்பட்டு இதுவரை 412 குழுக்களுக்கு சுழல்நிதி மானியம் விடுவிக்கப் பட்டுள்ளது.



திருவாரூர் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள், முழு சுகாதாரத் திட்டப் பணிகள், மகளிர் சுயஉதவிக் குழுக்களின் தொழில் வளர்ச்சி ஆகியவை அரசின் ஆணைகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ற வகையில் நடைபெற்று வருகின்றது.

- க. சண்முக சுந்தரம்,
*செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,*
*திருவாரூர்.*

உங்களின்
நீண்ட நாள்
கனவை
நனவாக்கும்
புதிய திட்டம்

மொத சந்தா செலுத்துவீர்!

# 10வது மாத சந்தா இலவசம்

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

மேலும்

## அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!



ரூ. 12,500/- மதிப்புள்ள
பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!**

| மாதச் சந்தா ரூ. 1 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. 2 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 3 | கூடுதல் தொகை (2+3) ரூ. 4 | அரசு தள்ளுபடி ரூ. 5 | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 6 |
|---|---|---|---|---|---|
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆ : 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | ✆ : 24336346 |
| 03. | அங்கயற்கன்னி, | மதுரை | ✆ : 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆ : 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | ✆ : 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | ✆ : 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | ✆ : 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | ✆ : 234474 |
| 09. | தீபம், | வேலூர் | ✆ : 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | ✆ : 2380591 |

வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.

Visit us at: www.cooptex.com

Visit us at: www.tn.gov.com

பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை

தமிழரசு
R.N.I. No. 21446/70
RGN No. TN/PMG (CCR)/836/03-05, WPP - 518



